# தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்



## வருடாந்த அறிக்கை
## 2015

# பங்குடமைகளும் நம்பிக்கையும்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது எப்போதும் தேசத்தின் நலனில் அக்கறையுடையதும் வாடிக்கையாளர் திருப்தியினை நோக்காகவும் கொண்டு பங்குடமையுடன் நீடித்து நிலைத்து தொழிற்பட்டு வரும் ஓர் நிறுவனமாகும். கடந்த ஆண்டுகளில் எம்மால் நிறைவேற்றப்பட்ட செயலாற்றுகையானது, எமது வாடிக்கையாளர்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையினையும் உறுதியினையும் மேலும் உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது. 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டின் பொருளாதார நிலையில் குழப்பகரமான சூழ்நிலைகள் நிலவியமையால் பல்வேறு சவால்களினை எதிர்கொள்ள வேண்டியிருந்த போதிலும் நிதியமானது குறித்த ஆண்டு காலப்பகுதியிலும் தனது பணிகளினைத் திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதுடன் எதிர்காலத்தில் மிகச் சிறந்த முன்னேற்றத்தினை அடைவதற்குத் தேவையான வலுவினை வழங்குவதற்கான உத்வேகத்தினையும் அளிக்கும்.

எமது கூட்டிணைவு விழுமியங்கள் வாடிக்கையாளர் தொடர்பில் அதீத அக்கறை, நல்லிணக்கம், நேர்மை, புத்தாக்கம், தரநிர்ணயம், தொடர்ச்சியான மேம்பாடு என்பவை குறித்தும் நாம் கொண்டு நடாத்துகின்ற வியாபாரத் தொழிற்பாடு தொடர்பில் நிதியத்திற்கு கிடைக்கும் கௌரவம் என்பன குறித்தும் அதிகளவில் அக்கறை கொள்கின்றதுடன் நாம் இத்தகைய வெற்றிகரமான செயற்பாட்டினைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு தொடர்ந்தும் அயராது உழைப்போம். எமது தாபனத்தின் ஒவ்வொரு செயற்பாட்டு மட்டத்திலும் எமது மக்களுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் நாம் தொடர்ந்தும் செயறபடுவோம் என்பதுடன் எமது கம்பனியினை வெற்றியினை நோக்கி முன்னெடுத்துச் செல்வதற்காக அவர்களின் ஒன்றிணைந்த முயற்சிகளையும் அங்கீகரிப்போம்.

எமது குறிக்கோளானது எமது வாடிக்கையாளர்களுக்கு தேசிய காப்புறுதி நிறுவனமாகவும், மீள் காப்புறுதி வழங்குனராகவும் விளங்குவதுடன் மிகச் சிறந்த பாதுகாப்பு வலையமைப்பினைக் கொண்ட நிறுவனமாகவும் விளங்குவதேயாகும். முதல் கட்டமாக, சிறப்புரிமை அளிக்கப்படாத மற்றும் போதுமானளவில் சேவை வழங்கப்படாத சமூகப் பிரவுகள் மற்றும் அவ்வாறே அரச துறை ஊழியர்கள் ஆகியோர்களினை இலக்காகக் கொண்டு எமது தொழிற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எமது நோக்கங்கள் தேசிய காப்புறுதி மற்றும் மீள் காப்புறுதி சந்தைக்கு தாங்கிக் கொள்ளக்கூடிய வகையில், நம்பகத்தன்மை வாய்ந்த முறையில் இடர் குறைந்த தீர்வு முறைகளினூடாக நிதிசார் ஸ்திரத்தன்மையினை அளிப்பதனை நோக்காகக் கொண்டவையாகும். இதன் மூலம், இலங்கையின் சமூகப் பொருளாதார அபிவிருத்தியினை நோக்கிய பங்களிப்பினை முழுமையாக வழங்கும் துறையாக காப்புறுதித் துறையினை விளங்கச் செய்ய முடியும்.

எமது காப்புறுதிதாரர்களின் நலன்களினை மனதில் கொண்டு காப்புறுதித் துறையினை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டதிட்டங்களுடன் இணங்கிச் செயற்பட்டு வருகின்றோம். தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனமாகிய நாம், எமது பங்குடமைகள் மற்றும் கூட்டு நிறுவனங்கள் என்பவற்றினை முன்னேற்றகரமான நிறுவனங்களாக வலுப்படுத்துவதனூடாக எமது தேசத்திற்கு அளப்பரிய சேவையினை ஆற்ற விளைகின்றோம்.

# பொருளடக்கம்

| | |
|---|---|
| எமது நோக்கு/ எமது செயற்பணி | 2 |
| நாம் யார் | 3 |
| எமது கூட்டிணைவுப் பெறுமதிகள் | 4 |
| நிதிசார் கண்ணோட்டம் | 5 |
| முக்கியமான நிகழ்வுகள் | 7-9 |
| தலைவரின் வாழ்த்துச் செய்தி | 10-11 |
| பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் மீளாய்வு | 12-13 |
| முகாமைத்துவ கலந்துரையாடல்கள் மற்றும் பகுப்பாய்வு | 14-15 |
| நிதியியல் மீளாய்வு | 16 |
| பிரிவு ரீதியான மீளாய்வு | 17-21 |
| கூட்டுரிமை ஆட்சி | 22-24 |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் சபை உறுப்பினர்கள் - 2015 | 25 |
| சபை உறுப்பினர்களின் வெட்டுமுகம் | 26 |
| கூட்டிணைந்த மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவக் குழு | 27 |
| இடர் முகாமைத்துவம் | 28-29 |
| கூட்டு சமூகப் பொறுப்புகள் | 30 |
| பணிப்பாளர்களின் அறிக்கை | 31-32 |
| கணக்காய்வுக் குழு அறிக்கை | 33 |
| கணக்காளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 34-49 |
| நிதிசார் கூற்றுக்கள் | |
| விரிவான வருமானக் கூற்று | 50 |
| நிதி நிலைமைக் கூற்று | 51 |
| உரிமைப்பங்கு மாற்றக்கூற்று | 52 |
| காசுப்பாய்ச்சல் மாற்றக்கூற்று | 53 |
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | 54-74 |
| தசாப்பதம் ஒரே பார்வையில் | 75-76 |
| கூட்டுரிமைத் தகவல்கள் | பின் அட்டையின் உள்பக்கம் |

# நோக்கும் செயற்பணியும்

## நோக்கும் செயற்பணியும்

- அனைத்து தேவையுடைய துறைகளுக்கும் பாதுகாப்பு வலையமைப்பினையும் பாதுகாப்பினையும் அளித்தல்.

## எமது செயற்பணி

கீழ்க்காணும் செயற்பாடுகளினூடாக இலங்கையின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பினை வழங்குதல்.

- சமூகத்திலுள்ள அனைத்துத் தேவையுடைய துறைகளுக்கும் தாங்கிக் கொள்ளக்கூடிய, வினைத்திறன் வாய்ந்த மற்றும் முன்னேற்றகரமான காப்புறுதி செயல்திட்டங்களை வழங்குதல்.
- ஒன்றிணைந்து செயற்படுதல் மற்றும் ஏனைய ஏற்பாடுகளினூடாக மாறிவரும் தேவைகளிலிருந்து எழுகின்ற உயர்ந்தளவிலான இடர்களினை ஈடு செய்யும் வகையில் உள்நாட்டு சந்தைகளுக்கான தீர்வுகளினை வழங்குதல்
- உள்நாட்டு காப்புறுதி சந்தைக்கு மேலதிக சக்தியினை வழங்கும் நோக்குடன் இலங்கையில் மீள் காப்புறுதி சந்தையினை உருவாக்குதல்.

# நாம் யார்

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது 2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டதாகும். இதன் தேசத்திற்கான பங்களிப்பானது, மீள் காப்புறுதி, வேலை நிறுத்தம், கலவரம், உள்நாட்டு குழப்பம், தீவிரவாத காப்புறுதி, அக்ராஹாரா மருத்துவக் காப்புறுதி, உடலாரோக்கிய காப்புறுதி மற்றும் இயற்கைப் பேரிடர் மற்றும் பயிர் காப்புறுதி இழப்பீடுகள் உள்ளடங்கலான ஏனைய பொதுக் காப்புறுதி வடிவங்களில் வழங்கப்படுகின்றது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தின்படி, நிதித் திட்டமிடல் அமைச்சினால் நிருவகிக்கப்பட்ட வேலை நிறுத்தம், கலவரம், உள்நாட்டு குழப்பம், தீவிரவாத காப்புறுதி நிதியமானது தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் உள்வாங்கப்பட்டுள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் சார்பில் வேலை நிறுத்தம், கலவரம், உள்நாட்டு குழப்பம், தீவிரவாத இடர்களுக்கெதிரான இழப்பீடுகளினை வழங்கும் வகையில் காப்புறுதிப் பூட்கைகளினைப் பெற்றுள்ள அனைத்துக் காப்புறுதியாளர்களும் அவை தொடர்பில் சேகரிக்கப்பட்ட அனைத்துக் காப்புறுதிக் கட்டணங்களினையும் பின்னர் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டிருந்தனர். 2012 ஆம் ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிய 1791/4 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி அறிவித்தலின்படி, அனைத்து முதன்மைக் காப்புறுதியாளர்களும், தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துடன் ஒப்பந்தமொன்றினை மேற்கொள்ளும் ஒவ்வொரு பொது மீள்காப்புறுதியிலிருந்தும் ஈட்டப்படுகின்ற அவர்களின் மொத்த மீள்காப்புறுதிக் கட்டணத்தின் 30% இனை இன்னொரு நிறுவனத்தில் மீள்காப்புறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தற்போது, முதன்மைக் காப்புறுதியாளர்களுக்கு இழப்பீட்டினை வழங்கும் மீள்காப்புறுதியினை வழங்கும் ஒரேயொரு இலங்கை காப்புறுதி நிறுவனம் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் மட்டுமேயாகும். அக்ராஹாரா மருத்துவக் காப்புறுதித் திட்டமானது பொது நிருவாக அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 12/2005 இனால் அமுல்படுத்தப்பட்டு வருகின்றதுடன் இது 2006 ஜனவரி 01 இலிருந்து பயனுறுதியாகும் வகையில் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நோக்கெல்லையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இது திருமணமாகிய உறுப்பினர்களுக்கு அவர்களின் வாழ்க்கைத் துணை மற்றும் பிள்ளைகள் (திருமணமாகாத, வேலையற்ற மற்றும் 21 வயதிற்கு குறைந்தவர்களுக்கு மட்டும்) மற்றும் திருமணமாகாத உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் (70 வயதிற்கு குறைந்தவர்களுக்கு மட்டும்) ஆகியோருக்கு பல்வேறு நலவுதவித் திட்டங்களினை அளித்து வருகின்றது.

மிகவும் குறைந்த காப்புறுதிக் கட்டணத்தில் பல்வேறுபட்ட நலவுதவித் திட்டங்களினை வழங்குதல், பிரதான போட்டி அநுகூலம், கோரிக்கைகளினை ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் இழப்பீடுகளினை வழங்குதல் என்பவற்றில் காணப்படும் துரிதமான சேவை நடவடிக்கைகள் என்பவற்றினை வழங்குவதில் இலங்கையின் முன்னணி நிறுவனமாக விளங்குகின்றது. புதிய தொழில்நுட்பங்களினைப் பயன்படுத்துவதனூடாக எமது உள்ளக மற்றும் வெளியக வினைத்திறன்கள் மேம்படுத்தப்படுகின்றதுடன் அடிமட்டத்திலிருந்து நிலையான வெற்றியினை நோக்கியதான எமது நடவடிக்கையினை முன்னெடுப்பதில் காத்திரமான பங்களிப்பினையும் வழங்குகின்றது. அநுராதபுரம் மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் இரண்டு கிளைகள் தொழிற்பட்டு வருவதுடன் நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக மாவட்ட / பிரதேச செயலகங்களில் 18 அலகுகளும் தாபிக்கப்பட்டுள்ளன. இது முற்றுமுழுதாக அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனமாக இருப்பதால், எமது நாட்டில் மீள்காப்புறுதி நிறுவனம் என்றவகையில் காணப்படும் ஒரேயொரு நிறுவனம் என்ற பெருமையினையும் கொண்டுள்ளது மட்டுமல்லாமல், வர்த்தகசார் காப்புறுதி நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படாத குறைந்த சேவையளிப்பினைக் கொண்ட துறைகளுக்கும் காப்புறுதி சேவையினை வழங்கும் காப்புறுதி நிறுவனமாகவும் விளங்கி வருகின்றது.

# எமது கூட்டிணைவுப் பெறுமதிகள்

நிலையான தாபனமென்ற வகையில் எமது ஆறு முக்கிய கூட்டிணைவுப் பெறுமதிகளும் எமது தொழில்முயற்சியினை முன்னெடுத்துச் செல்வதற்கான நடைமுறைகள் தொடர்பான வழிகாட்டியும்.




# உபாய ரீதியான நோக்கங்கள்

- தற்போதுள்ள வியாபாரச் செயற்பாடுகளை விரிவாக்குவதன் மூலம் எமது வாடிக்கையாளர்களுக்கு நீண்டகால பெறுமதிகளினை ஏற்படுத்திக் கொடுத்தல், வழக்கத்திலுள்ள காப்புறுதித் திட்டங்களை விருத்தி செய்தல் மற்றும் வாடிக்கையாளர் மற்றும் பொதுமக்களின் எமது இலக்குக் குழுக்களுக்குத் தேவையான தீர்வுகளினை வழங்குதல்
- சந்தையில் வியாபாரச் செயற்பாடுகளுக்கான வாய்ப்புக்களின் அநுகூலங்களைப் பெற்றுக் கொள்ளும் அதேவேளையில், முறைப்படுத்தப்பட்ட இடர் மற்றும் நிதி முகாமைத்துவத்தினை நெறிப்படுத்துவதனூடாக உறுதியான நிதிசார் வளர்ச்சியினை அடைவதற்கு அயராது உழைத்தல்
- விரிவாக்கப்பட்ட சந்தைப் பங்கினைக் கைப்பற்றுதல் மற்றும் நிறுவனத்தின் மதிப்பினைக் கட்டியெழுப்புதல் போன்ற நடவடிக்கைகளினை முன்னெடுக்கும் நோக்குடன் தற்போதுள்ள பங்குடமைகளினை நிலையாகப் பேணுதலும் புதிய பங்குடமைகளினைக் கவருதலும்
- முன்னெடுத்துச் செல்லப்படும் நிலையான முகாமைத்துவத்தினை விருத்தி செய்யும் பொருட்டு ஆற்றல்மிக்க மனிதவள குழுமத்தினைக் கண்டறிதல்.
- உள்ளக கட்டமைப்பு வசதிகளினை மிகச்சிறந்த முறையில் வழங்குதல், தொழிற்பாட்டு நேரத்தினைக் குறைத்தல் மற்றும் அளிக்கப்படும் சேவைகளின் வினைத்திறனை மேம்படுத்தல் ஆகிய நோக்கங்களினை முன்னெடுக்கும் வகையில் தன்னியக்க செயற்பாடுகளுக்கு மாறுதல்
- எமது அக்கறைதாரர்கள் தொடர்பான பிரதான பொறுப்பு என்றவகையில், தொழிற்பாட்டின் அனைத்து விடயங்களிலும் காணப்படும் அனைத்து இடர் முகாமைத்துவ தர நிர்ணயங்களையும் மேம்படுத்துதல்.
- கம்பனி மற்றும் நிதியத்திற்கு மேலும் பெறுமதி சேர்க்கும் வகையில் வியாபாரச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதனை உறுதி செய்யும் பொருட்டு சந்தை ஆய்வுகளினை மேற்கொள்ளுதல்

# நிதிசார் கண்ணோட்டம்

| | |
|---|---|
| வரிக்குப் பிந்திய இலாபம் | ரூபா 4.3 பில்லியன் |
| மொத்தச் சொத்துக்கள் | ரூபா 12 பில்லியன் |
| திரட்டு நிதியத்திற்கான பங்களிப்பு | ரூபா 3 பில்லியன் |
| சொத்து மீதான வருமானம் | 36% |


















| | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| மொத்த வருமானம் | 8,787,869,247 | 8,655,544,130 |
| மொத்த காப்புறுதிக் கட்டணம் | 5,062,685,701 | 5,842,067,431 |
| தேறிய சம்பாதித்த காப்புறுதிக் கட்டணம் | 7,931,485,679 | 8,015,628,346 |
| வரிக்கு முந்திய இலாபம் | 4,390,146,531 | 4,582,655,586 |
| வரிக்குப் பிந்திய இலாபம் | 4,303,324,331 | 4,582,655,586 |
| மொத்தச் சொத்துக்கள் | 12,233,466,883 | 11,193,375,695 |
| சொத்துக்கள் மீதான வருமானம் | 35.89 | 40.94 |

# முக்கியமான நிகழ்வுகள்

**1. தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது பயனாளிகளுக்கான நலவுதவிகள் தொடர்பில் பல்வேறு வைத்தியசாலைகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளினை மேற்கொண்டுள்ளது.**

**2015 ஜுலை 20**



தே.கா.ந.நி இற்கும் ஹேமாஸ் வைத்தியசாலைகள் (தனியார்) லிமிட்டடுக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை

தே.கா.ந.நி இன் தலைவர் மஞ்சுள டீ சில்வா மற்றும் ஹேமாஸ் வைத்தியசாலைகள் மற்றும் குழுமப் பணிப்பாளர் முர்தஷா ஈபல்லி அவர்களின் முன்னிலையில் தே.கா.ந.நி இன் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர், சனத் டீ சில்வா மற்றும் ஹேமாஸ் வைத்தியசாலைகள் தொடரின் பணிப்பாளர் நாயகம், டாக்டர் லகித் பீரிஸ் அவர்களுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று 2015 ஜுலை 20 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. இந்தப் பங்குடமையினூடாக, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு உரித்துடைய அக்ராஹாரா மருத்துவக் காப்புறுதி நலவுதவிகளினை ஹேமாஸ் வைத்தியசாலைகளின் சங்கிலித் தொடரிலுள்ள எந்தவொரு வைத்தியசாலையிலிருந்தும் மிகவும் தரமான முறையில் கழிவு வசதிகளுடன் பெற்றுக் கொள்ளலாம்.

**2015 ஆகஸ்ட் 21**



தே.கா.ந.நி இற்கும் லங்கா வைத்தியசாலைகள் பி.எல்சிக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை

தே.கா.ந.நி இன் தலைவர் திரு. மஞ்சுள டீ சில்வா மற்றும் லங்கா வைத்தியசாலைகள் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் திரு. தேஷந்த சில்வா அவர்களின் முன்னிலையில் தே.கா.ந.நி இன் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் திரு. சனத் டீ சில்வா மற்றும் லங்கா வைத்தியசாலைகள் பி.எல்.சி. இன் முகாமைப் பணிப்பாளர் திரு. திஸ்ஸ நாணயக்கார அவர்களுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று 2015 ஆகஸ்ட் 21 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

**2015 ஆகஸ்ட் 25**





தே.கா.ந.நி இற்கும் நவலோக வைத்தியசாலைக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை

தே.காந.நி இன் தலைவர் திரு. மஞ்சுள டீ சில்வா மற்றும் நலலோக வைத்தியசாலைகள் நிறுவன திட்ட முகாமையாளர் திரு. நாலக்க நிரோஷன் அவர்களின் முன்னிலையில் தே.கா.ந.நி இன் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் திரு. சனத் சீ டீ சில்வா மற்றும் நவலோக வைத்தியசாலைகள் பி.எல்.சி. இன் பணிப்பாளர் திரு. ஹர்ஷித் தர்மதாச அவர்களுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று சைச்சாத்திடப்பட்டது.

**2015 ஒக்டோபர் 14**



# முக்கியமான நிகழ்வுகள்



தே.கா.ந.நி இற்கும் நொதேர்ண் சென்றல் வைத்தியசாலைக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை

தே.கா.ந.நி இன் தலைவர் திரு. மஞ்சுள டீ சில்வா மற்றும் நொதேர்ண் சென்றல் வைத்தியசாலையினைச் சேர்ந்த திரு.கணேசராஜா அவர்களின் முன்னிலையில் தே.கா.ந.நி இன் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர், திரு. சனத் சீ டீ சில்வா மற்றும் நொதேர்ண் சென்றல் வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர்.எப். கணேசராஜா அவர்களுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று 2015 ஒக்டோபர் 14 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது.

**2015 நவம்பர் 16**



தே.கா.ந.நி இற்கும் இரத்தினபுரி, சிங்க வைத்தியசாலைக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை

தே.கா.ந.நி இன் தலைவர் திரு. மஞ்சுள டீ சில்வா அவர்களின் முன்னிலையில் தே.கா.ந.நி இன் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர், திரு. சனத் சீ டீ சில்வா மற்றும் சிங்க வைத்தியசாலையின் முகாமைப் பணிப்பாளர் திரு. ஏ.எம்.டி.எச்.என். வீரசிங்க அவர்களுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று 2015 நவம்பர் 16 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது.

**2015 நவம்பர் 19**



தே.கா.ந.நி இற்கும் களுத்துறை, நியுபிலிப் வைத்தியசாலைக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை.

தே.கா.ந.நி இன் தலைவர் திரு. மஞ்சுள டீ சில்வா மற்றும் நியு பிலிப் வைத்தியசாலையின் கணக்காளர், செல்வி அச்சினி ஜயசிங்க அவர்களின் முன்னிலையில் தே.கா.ந.நி இன் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர், திரு. சனத் சீ டீ சில்வா மற்றும் நியு பிலிப் வைத்தியசாலையின் பணிப்பாளர் திரு.கிறிஸ்தோபர் பெர்ணாண்டோ அவர்களுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று 2015 நவம்பர் 19 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது

**2015 டிசம்பர் 11**



தே.கா.ந.நி இற்கும் மாவனல்ல, ஓஸ்றோ வைத்தியசாலைக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை

தே.கா.ந.நி இன் தலைவர் திரு. மஞ்சுள டீ சில்வா மற்றும் ஓஸ்றோ வைத்தியசாலையினைச் சேர்ந்த திரு. ராயு பண்டார அவர்களின் முன்னிலையில் தே.கா.ந.நி இன் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர், திரு. சனத் சீ டீ சில்வா மற்றும் ஓஸ்றோ வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர். நாணயக்கார அவர்களுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று 2015 டிசம்பர் 11 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது.

**2015 டிசம்பர் 17**



# முக்கியமான நிகழ்வுகள்



தே.கா.ந.நி இற்கும் காலி, கூட்டுறவு வைத்தியசாலை சங்கத்திற்குக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை

தே.கா.ந.நி இன் தலைவர் திரு. மஞ்சுள டீ சில்வா மற்றும் ஓஸ்றோ வைத்தியசாலையின் வியாபார மேம்படுத்தல் உத்தியோகத்தர் திரு. வலதர ஆராச்சி அவர்களின் முன்னிலையில் தே.கா.ந.நி இன் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர், திரு. சனத் சீ டீ சில்வா மற்றும் காலி கூட்டுறவு வைத்தியசாலை சங்கத்தின்பொது முகாமையாளர் திரு. கே.ஜி. சாள்ஸ் கமகே அவர்களுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று 2015 டிசம்பர் 17 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது.

**2015 டிசம்பர் 30**



தே.கா.ந.நி இற்கும் நாவின்ன மெடிகெயார் வைத்தியசாலைக்கு மிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை

தே.கா.ந.நி இன் தலைவர் திரு. மஞ்சுள டீ சில்வா மற்றும் நாவின்ன மெடிகெயார் வைத்தியசாலையின் பொது முகாமையாளர் திரு. தேஜனு டீ சில்வா அவர்களின் முன்னிலையில் தே.கா.ந.நி இன் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர், திரு. சனத் டீ சில்வா மற்றும் நாவின்ன மெடிகெயார் வைத்தியசாலையின் தலைவர் திருமதி. ஏ.எச்.என்.ரி.டப்.டீ. சில்வா அவர்களுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று 2015 டிசம்பர் 30 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது.

**2.** **தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது “மீள் காப்புறுதி அடிப்படைத் தத்துவங்களின் பிரயோகம் மற்றும் 2015 இல் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட பெருங்கேடு தொடர்பான வெளிப்படுத்துகை தொடர்பான கருத்தரங்கு” ஒன்றினை நடாத்தியுள்ளது.**

**8 டிசம்பர் 2015**







தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமும் இந்திய காப்புறுதி நிறுவகமும் இணைந்து, 2015 டிசம்பர் 08 ஆம் திகதியன்று கொழும்பு கலதாரி ஹோட்டலில் “மீள் காப்புறுதி அடிப்படைத் தத்துவங்களின் பிரயோகம் மற்றும் பெருங்கேடு தொடர்பான வெளிப்படுத்துகை” தொடர்பில் கருத்தரங்கொன்றினை நடாத்தியுள்ளது.

இக்கருத்தரங்கில் இலங்கை காப்புறுதி சபையின் தலைவர் திருமதி. இந்திராணி சுகததாசவுடன் தே.கா.ந.நி இன் தலைவர் திரு.மஞ்சுள டீ சில்வா, தே.கா.ந.நி இன் பி.நி.உ., சனத் சீ.டீ. சில்வா, இந்திய காப்புறுதி நிறுவகத்தின் செயலாளர் நாயகம். திரு.பீ. வேணுகோபால், திரு. எஸ். கே. ரோய், இந்திய எல்.ஐ.சி இன் தலைவர், இந்திய காப்புறுதி நிறுவகத்தின் தலைவர், திரு. ஜோசப் அகஸ்டின், இந்தியாவுக்கான முகாமையாளர், திரு. எக்ஸ்.எல். கத்லின், திரு.அங்குர் நிஜிஹவன், முகாமைப் பணிப்பாளர். இந்தியா, வண. திரு. அருண் அகர்வால், இந்திய பிரதிநிதி, லியோட்ஸ். திரு. பஞ்ஜத் டுத்தா, இந்திய ஆர்.ஜ.சி, திரு. பிரகாஷ் ஸ்காபர், முகாமைப் பணிப்பாளர், ஜனசக்தி காப்புறுதி, திரு.நிரஞ்சன் மாணிக்கம் பி.நி.உ., எச்என்பி அசுரன்ஸ் பி.எல்.சி, திரு. அரிந்தம் முகர்ஜி, பணிப்பாளர், இந்திய காப்புறுதி நிறுவகம், இந்திய மற்றும் திரு.அன்ஸ்லி அலியஸ்- பி.நி.உ., ஓறியன்ற் காப்புறுதி. இலங்கை ஆகியோர் கலந்து கொண்டிருந்தார்கள். இக்கருத்தரங்கில் மீள்காப்புறுதி தொடர்பான அடிப்படைத் தத்துவங்களினை மீளாய்வு செய்தல் மற்றும் 2015 இல் இடம்பெற்ற பின்னடைவு வெளிப்படுத்தல்கள் குறித்தும் ஆராயப்பட்டதுடன் மீள் காப்புறுதி தொடர்பான சொத்து வரிசைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

# தலைவரின் வாழ்த்துச் செய்தி

காப்புறுதி வியாபாரத் தொழிற்பாட்டில் நாம் இன்று ஒன்பது வருடங்களினைப் பூர்த்தி செய்துள்ள நிலையில், நான் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2015 டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான அதன் வருடாந்த அறிக்கையினை மகிழ்ச்சியுடன் தங்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன். தேசத்தின் நலனை நோக்காகக் கொண்டு எமது அக்கறைதாரர்களுக்கு கணிசமானளவு பெறுமதி சேர்ப்பினை உருவாக்கும் நோக்குடன் குழுமங்கள் மற்றும் பங்குடமைகளாக ஒன்றிணைந்து பணியாற்றியுள்ளதுடன் இது எமது வளர்ச்சிக்கு மேலும் மேலும் வலு சேரப்பதாக அமைந்துள்ளது.

2009 ஆம் ஆண்டு நீங்கலாக, உலகளாவிய மற்றும் உள்நாட்டு பொருளாதாரங்களில் ஏற்பட்ட பாரிய இடர்பாடுகள் மற்றும் சவால்களினால் காப்புறுதிக் கட்டண வருமானத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும், இலங்கை காப்புறுதி துறையில் முற்றுமுழுவதுமாக நிலையான வளர்ச்சியானது பேணப்பட்டு வந்துள்ளது. இலங்கையின் காப்புறுதித் துறையானது புதிய சந்தைகளினைக் கண்டறிவதிலும் ஊடுருவதிலும் ஆசியப் பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைந்த மட்டத்திலேயே உள்ளதுடன் இதற்கான காரணம், வளர்ந்து வரும் வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப காப்புறுதி நலவுதவித் திட்டங்களை வழங்குவதன் மூலம் தமது வியாபாரச் செயற்பாடுகளை விரிவாக்குவதற்கான வாய்ப்புக்களை அவை குறைந்தளவு கொண்டமையேயாகும். 21 மில்லியன் மொத்த சனத்தொகையினைக் கொண்ட இலங்கையின் தலாவீத வருமானம் 2015 இல் 3,924 அமெரிக்க டொலர்களாக இருந்துள்ளதுடன் இலங்கையின் பொருளாதாரமானது 2015 இல் 4.8% வளர்ச்சியினை அடையப் பெற்றுள்ளது. இது, இலங்கையின் பொருளாதாரமானது அபிவிருத்தி, மீள் நிருமாணம் மற்றும் வளர்ச்சியினை நோக்கிச் செல்வதனைப் பிரதிபலிக்கின்றது. சேவைத்துறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 62.4% பங்களிப்பினையும் அதனைத் தொடர்ந்து தயாரிப்புத் துறையானது 28.9% பங்களிப்பினையும் விவசாயத்துறையானது 8.7% பங்களிப்பினையும் வழங்கியுள்ளன. உயர்ந்த நடுத்தர வருமானப் பிரிவினைச் சேர்ந்த மக்களின் அபிலாசைகள் மற்றும் திட்டங்கள் என்பன மேல் மாகாணத்தினை நகரமயமாக்குவதிலும் குறிப்பாக கொழும்பு நகரத்தினை பொருளாதார ரீதியாக முன்னேற்றுவதிலும் பெரும் பங்காற்றியுள்ளதுடன் சுற்றுலாத்துறை போன்ற துறைகளின் உள்ளக கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துவதிலும் அவ்வாறே காப்புறுதி துறை போன்ற சேவைத் துறைகளின் வளர்ச்சிக்கும் அளப்பரிய பங்களிப்பினை வழங்கியுள்ளனர்.



> “எமது வாக்குறுதிகளுக்கு மதிப்பளித்து எமது காப்புறுதிதார்களின் இணக்கப்பாட்டுடன், 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மொத்தமாக ரூபா 3.2 பில்லியன் பெறுமதியான கோரிக்கைகளுக்கான கொடுப்பனவுகளினை மேற்கொண்டுள்ளோம்.”

# தலைவரின் வாழ்த்துச் செய்தி

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது 2014 ஆம் நிதியாண்டில் ரூபா 5.8 பில்லியன் காப்புறுதிக் கட்டண வருமானத்தினைப் பதிவு செய்துள்ளதுடன் குறித்த நிதியாண்டில் ரூபா 5.0 பில்லியன் காப்புறுதிக் கட்டண வருமானத்தினைச் சம்பாதித்து திருப்திகரமான நிலையிலுள்ளதுடன் இத்தகைய வீழ்ச்சிக்கான காரணம் பயிர்க் காப்புறுதித் திட்டமானது விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபைக்கு மாற்றப்பட்டமையேயாகும். அவ்வாறே, முன்னைய நிதியாண்டில் ரூபா 4.6 பில்லியனாக காணப்பட்ட வரிக்குப் பிந்திய அடிமட்டமானது குறித்த நிதியாண்டில் ரூபா 4.4 பில்லியனாக குறைவடைந்துள்ளது. ஐந்தொகையானது ரூபா 12.2 பில்லியன் வளர்ச்சியினை அதாவது 9% வளர்ச்சியினைப் பதிவு செய்துள்ளதுடன் இது மொத்த முதலீட்டில் 84% ஆகும். எமது காப்புறுதிதாரர்களுக்கு நாம் அளித்த வாக்குறுதிகள் மற்றும் இணக்கப்பாடுகளுக்கு மதிப்பளித்து, 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூபா 3.2 பில்லியன் பெறுமதியான கோரிக்கைகளுக்கான கொடுப்பனவுகளினை மேற்கொண்டுள்ளோம்.

குறித்த நிதியாண்டில் வைத்தியசாலைகளில் இலகுவாக கொடுக்கல் வாங்கல்களினை மேற்கொள்வதற்கான துரித கொடுப்பனவு முறை மற்றும் இ.அட்டை வசதிகள் போன்ற கோரிக்கைகளினை செயல்முறைப்படுத்தும் முறைமையொன்றின் அமுலாக்கத்தினைக் காணமுடிவதுடன் அக்ராஹார மருத்துவக் காப்புறுதி திட்டமானது மருத்துவம் தொடர்பான கோரிக்கை எல்லைகள் அதிகரிக்கப்பட்டிருப்பதனைக் காட்டுகின்றது. எமது பொதுக் காப்புறுதிப் பிரிவின் செயற்பாடுகளை இலகுவாக்கும் பொருட்டு மாவட்ட செயலகங்களில் 24 மணி நேர அழைப்பு நிலையங்கள் மற்றும் பல்வேறு சேவை நிலையங்களினை தாபிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதுடன் இதனூடாக சந்தைப்படுத்தல் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் விரிவாக்கம் பெற்றுள்ளதனையும் காணமுடிகின்றது. தே.கா.ந.நி ஆனது அதன் உள்ளக முறைமையினை வினைத்திறன் வாய்ந்ததும் விரைவானதுமான செயல்முறைமையினை நடைமுறைப்படுத்தக்கூடிதான சூழலொன்றினைத் தோற்றுவிக்கும் வகையில் பயன்படுத்தி வருகின்றது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது அதன் வியாபாரம் தாபிக்கப்பட்டபோதிருந்த வாடிக்கையாளர் நோக்கியதான முக்கியமான விழுமியங்கள் குறித்து தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருகின்றது. எமது பரிபாலன நியமங்களை உறுதியாக கடைப்பிடித்து வருவதுடன் எமது அக்கறைதாரர்களுக்கு நீண்ட காலம் நிலைத்திருக்கக்கூடியதான மதிப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதே எமது நோக்கமாகும். கடந்த ஆண்டுகளில் நாம் இத்தகைய அளப்பரிய வெற்றிகளையும் சாதனைகளையும் அடைவதற்கு எமக்கு உறுதுணையாக இருந்த எமது ஊழியர்களையும் இவ்விடத்தில் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானதாகும். எமது எதிர்கால குறிக்கோள்கள், எதிர்பார்ப்புக்கள் மற்றும் வியாபார திட்டமிடல்கள் என்பவற்றின் ஒரு பகுதியாக, நாம் எமது புவிசார் எல்லைகளினை விரிவாக்குவதற்கும் எமது உள்ளக கட்டமைப்பு மற்றும் உள்ளக முறைமைகளில் முதலீடு செய்வதற்கும் எண்ணியுள்ளோம். பரந்துபட்டுள்ள எமது சமூகத்தின் காப்புறுதி தேவைகளினை நிறைவு செய்வதற்காக அயராது பாடுபடும் எமது மனித வளப் பிரிவினையும் மேம்படுத்துவதற்கும் எதிர்பார்க்கின்றோம்.

எமது நிதியானது தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விடயங்கள் தொடர்பான அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் தொழிற்படுவதால் மாண்புமிகு பிரதம மந்திரி அவர்களுக்கும் விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சர் அவர்கட்கும் எனது நன்றியறிதல்களினை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். கௌரவ இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்களுக்கும் அமைச்சின் செயலாளர் மற்றும் மேலதிகச் செயலாளர்களுக்கும் எனது நன்றிகளினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமக்குத் தேவைப்பட்ட போதெல்லாம் தமது உதவியினையும் ஆதரவினையும் நல்கிய திறைசேரி செயலாளர் அவர்களுக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளினைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இந்த நிதியத்தினை இத்தகைய உயரிய இடத்தில் நிலைநிறுத்துவதற்கு எமக்கு தமது ஆதரவினை நல்கிய இலங்கை காப்புறுதிச் சபையின் மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்கமைப்புச் சபையின் தலைவர், பணிப்பாளர் நாயகம் மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இறுதியாக இந்த ஆண்டு முழுவதும் தமது அயராத உழைப்பினையும் அர்ப்பணிப்புமிக்க சேவையினையும் வழங்கியமைக்காக நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் எனது சக உறுப்பினர்களுக்கும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் நிறைவேற்று அதிகாரிகளுக்கும் ஏனைய ஊழியர்களுக்கும் எனது நன்றிகளினைத் தெரிவித்துக் கொள்வதில் மனநிறைவடைகின்றேன்.



மஞ்சுள டி சில்வா
தலைவர்
2017.05.23

# பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் மீளாய்வு

காப்புறுதித் துறையானது 2015 ஆம் ஆண்டில் மொத்தக் காப்புறுதிக் கட்டண வருமானத்தில் 16.12% வளர்ச்சியுடன் வெற்றிகரமாகச் செயற்பட்டுள்ளதுடன் இது 2014 ஆம் ஆண்டில் 5.44% வளர்ச்சியினைப் பதிவு செய்திருந்தது. மிகச் சரியான புள்ளிவிபரங்களின்படி, காப்புறுதிக் கட்டண வருமானமானது 2015 இல் ரூபா 122.39 பில்லியன் தொகையினைக் கொண்டிருந்ததுடன் 2014 இல் அத்தகைய வருமானமானது ரூபா 105.3 பில்லியனாக இருந்துள்ளது. இத்தகைய அதிகரிப்புக்கான காரணம் நீண்ட காலகட்டத்தில் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் காப்புறுதிக் கட்டணத் தொகைகள் அதிகரித்தமையேயகும். 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில், காப்புறுதித் துறையில் பிரதானமாக இரண்டு அபிவிருத்திகள் இடம்பெற்றள்ளன. திருத்தச் சட்டத்தின் 53 ஆம் பிரிவிற்கிணங்க, கூட்டுப் பங்குத்தொகுதி கம்பனிகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துனர்களினால் ஒரு வியாபாரத்திலிருந்து இன்னொரு வியாபாரத்திற்கான இடரின் அளவினைக் குறைப்பதற்கு இரண்டு வெவ்வேறான கம்பனிகளில் தமது தொழிற்பாடுகளினைத் தனித்தனியாக மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தன. இதற்கும் மேலாக, தாபனமானது காப்புறுதிக் கம்பனிகளினை அவற்றின் வியாபாரச் செயற்பாடுகளின் நிரலுக்கு ஏற்றவாறு வகைப்படுத்தி வைத்திருந்துள்ளதுடன் அவற்றின் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட மூலதனத்தினை ரூபா 100 மில்லியனிலிருந்து ரூபா 500 மில்லியனுக்கும் அதிகரித்துள்ளது.

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது திருப்திகரமான நிதியாண்டினைக் கொண்டுள்ளது. எமது புதிய தலைவரின் நியமனமானது காப்புறுதித் துறையில் மிகச் சிறந்த அநுபவத்தினையும் துறைசார் நிபுணத்துவத்தினையும் எமக்களித்துள்ளது. கூட்டுறவு மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவக் குழுக்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளமையால் அவை உள்ளக ரீதியான புதிய மேம்படுத்தல்கள் மற்றம் அபிவிருத்திகளினை மேற்கொள்ளும் வகையிலான வசதிப்படுத்தல்களினை வழங்கியுள்ளன.

தே.கா.ந.நி ஆனது முன்னைய நிதியாண்டில் மொத்தக் காப்புறுதிக் கட்டணமாக ரூபா 5.8 பில்லியனைச் சம்பாதித்துள்ளதுடன் நடைமுறை ஆண்டில் ரூபா 5.0 பில்லியனைச் சம்பாதித்துள்ளது. இத்தகைய வீழ்ச்சிக்கான காரணம், பயிர் காப்புறுதித் திட்டமானது விவசாய மற்றும் கமநல சபையிடம் கையளிக்கப்பட்டமையேயாகும். எமது வரிக்குப் பிந்திய அடி மட்டமானது ரூபா 4.6 பில்லியனிலிருந்து ரூபா 4.4 பில்லியனுக்கு குறைவடைந்திருந்தது. இதற்கும் மேற்குறித்த காரணத்தினையே குறிப்பிடலாம்.

நாம் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஐந்தொகை மற்றும் மனித வளங்களினைப் பாதுகாத்தல் மற்றும் விரிவாக்கம் செய்தல் போன்ற நடவடிக்கைகளினை மேற்கொள்ளும் அதேவேளையில் எமது அக்கறைதாரர்களுக்கு உயர்தரமான சேவைகளினை வழங்குவதற்கும் கடமைப்பட்டுள்ளோம்.



> “நாம் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஐந்தொகை மற்றும் மனித வளங்களினைப் பாதுகாத்தல் மற்றும் விரிவாக்கம் செய்தல் போன்ற நடவடிக்கைகளினை மேற்கொள்ளும் அதேவேளையில் எமது அக்கறைதாரர்களுக்கு உயர்தரமான சேவைகளினை வழங்குவதற்கும் கடமைப்பட்டுள்ளோம்.”

# பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் மீளாய்வு

புத்தாக்க நடவடிக்கையின் ஒரு பகுதியாக, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது பல்வேறு தனியார் வைத்தியசாலைகளுடன் இணைந்து பல்வேறு காப்புறுதி நலவுதவித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதுடன் அந்தவகையில், லங்கா வைத்தியசாலையானது "அக்ராஹார" மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் கீழ், அரசாங்க ஊழியர்களுக்கு பல்வேறு நலவுதவித் திட்டங்களை மிகச் சிறந்த முறையில் வழங்கி வருகின்றது. இத்திட்டத்தின் சிறப்பம்சம் என்னவெனில், சிகிச்சைக்கான மருத்துவச் செலவுகளினை முன்கூட்டியே தீர்மானிக்க முடிவதுடன் தரமான வைத்திய சிகிச்சையினை அரசாங்க ஊழியர்கள் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது இலங்கையிலுள்ள அனைத்து காப்புறுதிக் கம்பனிகளையும் மீள் காப்புறுதி செய்ய வைப்பதனூடாக அதன் பங்கினைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் இழப்பீட்டினைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் இன்னொரு காப்புறுதி நிறுவனத்தில் மீள் காப்புறுதி செய்வதற்கான ஏற்பாடுகளினையும் மேற்கொண்டு வருகின்றது. மனித மூலதனத்திலுள்ள எமது முதலீட்டினை நீண்ட கால நோக்கில், எமது அக்கறைதாரர்களுக்கு பெறுமதி சேர்க்கும் வகையிலான இன்னோரு துறையிலும் ஈடுபடுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதற்கிணங்க, எமது பதவியினர் புத்துணர்ச்சி பெற்றுள்ளதுடன் அவர்களின் தரநிலைகள் தேவைக்கேற்ப விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் எமது ஊழியர்களின் தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் உரிய துறைகளில் திறன்களை விருத்தி செய்யும் வகையில் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது அதன் சந்தைப்படுத்தல் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளினை விரிவாக்கம் செய்வதனூடாக அதன் தோற்றப்பாட்டினையும் மெருகூட்டியுளளது.

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பிரதான நோக்கம், போதுமான நிதி வழிமுறைகளினைக் கொண்டிராத காப்புறுதியாளர்களுக்கு தேவையான துறைகளில் காப்புறுதி தொடர்பான வலுப்படுத்தலினை மேற்கொள்வதுடன் இழப்பீடுகளினைப் பெற்றுக் கொடுப்பதற்கு வழி வகுப்பதுமேயாகும். இது எமது நோக்கத்துடன் இணைந்தவகையில் தேவையான துறைக்கு பாதுகாப்பு வலையமைப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதேயாகும். விவசாயக் கடன் காப்புறுதித் திட்டமானது, விவசாயிகளுக்கு பயிரழிவுகளினால் அவர்களுக்கு நிதி ரீதியாக நிவாரணம் கிடைக்காமையினால் விவசாய சமூகத்தினை அத்தகைய இடரிலிருந்து பாதுகாக்கும் நோக்குடன் பல்வேறு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் என்பவற்றுடன் இணைந்து செயற்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. காப்புறுதி துறையானது எதிர்நோக்கும் இன்னொரு சவால், காப்புறுதி துறை பற்றிய போதிய அறிவின்மையும் காப்புறுதியின் முக்கியத்துவம் பற்றி அறிந்திருக்காமையுமேயாகும். புதிய காப்புறுதித் திட்டங்களை அமுல்படுத்துதல் மற்றும் புதிய சந்தைகளினைக் கண்டறிதல் என்பவற்றில் பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இன்னமும் நாம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளோம் என்பது இங்கே மிகவும் குறிப்பிடத்தக்கதொன்றாகும். அந்தவகையில், ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் காப்புறதி தொடர்பில் அறிவூட்டுவதே இதற்கான தீர்வாக அமையும்.

எமது அடிப்படைக் கோட்பாடுகள் மிகவும் உறுதியானவை என்பதுடன் நாம் அவற்றினை மிகவும் இறுக்கமாக கடைப்பிடித்து வருகின்றோம். எமது அக்கறைதாரர்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு மதிப்பளிக்கும் வகையில், நாம் அவர்களுக்கு அதிகபட்ச ஆதாயத்தினை வழங்கி வருவதுடன் எமது எதிர்காலச் செயற்பாடுகளை அதிக உத்வேகத்துடன் முன்னெடுப்பதற்கான தன்னம்பிக்கையினையும் கொண்டுள்ளோம். எமது செயற்பாடுகளினை உத்வேகத்துடன் முன்னெடுப்பதற்கு தங்களின் ஆதரவினையும் வழிகாட்டுதல்களினையும் வழங்கியமைக்காக எமது தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் எமது நிதியமானது இத்தகைய வளர்ச்சியினை அடையப் பெறுவதற்கு அயராது அர்ப்பணிப்புடன் உழைத்த எமது ஊழியர்களுக்கும் இவ்விடத்தில் எனது நன்றிகளினைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.



சனத் டீ சில்வா
பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்
2017.05.23

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

### வெளிவாரி சுற்றுச்சூழல்

### உலக பொருளாதாரக் கண்ணோட்டம்

மேம்படுத்தப்பட்ட பொருளாதாரத்தில் ஏற்பட்ட அபிவிருத்தியுடன் தொடர்ச்சியாக ஐந்தாம் ஆண்டுக்காகவும் விரிந்துவரும் மற்றும் அபிவிருத்தி அடையும் சந்தைகளின் வளர்ச்சியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக 2015ம் ஆண்டில் உலகப் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மந்தமாக காணப்பட்டது. இதற்கான காரணம் மூன்று மடங்காகும். சீன முதலீடு மற்றும் உற்பத்தி சார்ந்த பொருளாதாரத்தில் இருந்து நுகர்வு மற்றும் சேவைகளுக்கு ஒரு மாற்றத்தை அனுபவித்து வருகின்றது, இது இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் ஆகியவற்றின் வளர்ச்சியைக் குறைப்பதற்கு உதவியது. இது, சீனப் பொருளாதாரத்தின் நிச்சயமற்ற கண்ணோட்டத்துடன், மற்ற பொருளாதாரங்களில் வர்த்தகம், குறைந்து வரும் நம்பிகை நிதியச் சந்தைகளில் ஏற்றத்தாழ்வுக் கொண்டது. சீனாவின் பொருளாதாரம் மட்டுமல்ல, உலகளவிய தேவைகள் மற்றும் முதலீட்டைக் கட்டுப்படுத்து, மெதுவாக இறங்கி, உற்பத்தி மற்றும் வணிகம் பொதுவாக இறங்கியது எனக் கூறலாம். உலகளாவிய வர்த்தகம் பாதிக்கும் வளரும் மற்றும் வளர்ந்து வரும் நாடுகளில் இருந்து இறக்குமதியை பலவீனப்படுத்தும் கோரிக்கை குறிப்பிடத்தக்கது.

ஆற்றல் மற்றும் பொருட்களின் குறைந்த விலைகள் இன்னொரு காரணியாக இருந்தன. எண்ணெய் விலை குறைவது எரிபொருள் ஏற்றமதியாளர்களின் மீது ஒரு நிதித் திணறலை ஏற்படுத்தியது. பல எண்ணெய் இறக்குமதியாளர்களின் ஆற்றல் மசோதாக்கு வளரும் மற்றும் வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் இது பயனுள்ளது என்றாலும், இந்த இறக்குமதி பொருளாதாரங்கள் சிலவற்றின் குறைவான அளவிற்கு காரணமாக இருப்பதால், இந்த போக்கு உண்மையில் பலவீனமான எண்ணெய் நுகர்வு இருந்தது.

மூன்றாவது, அமெரிக்க பொருளாதாரம் 2015 முதல் காலாண்டில் ஒரு சுருக்கத்தின் பின்னர் மீட்சி கண்டது. இதன் விளைவாக, பணவியல் கொள்கை இறுக்கமடைந்தது மற்றும் ஒன்றிணைந்த ஒதுக்கு ஒரு சதவீதத்தில் கால் பங்கு வட்டி விகிதங்களை அதிகரித்தது. நிகர ஏற்றுமதியை குறைக்கும் போது இது நுகர்வோர் செலவினத்தைப் பாதிக்கும். சர்வதேச நாணய நிதியம் 2015ம் ஆண்டுக்கான 3.1% வீத வளர்ச்சியை 2016ம் ஆண்டுக்கு 3.4% வீதமாக உய்தறிந்துள்ளது. இதற்கான காரணங்களில் சீனாவில் வர்ச்சி குறைவடைந்தமை, எண்ணெய் விலைகளின் சரிவு, வலுவான மீட்பு சூழலில் அமெரிக்காவின் நாணயக் கொள்கையை இறுக்குதல் ஆகியவை அடங்கும்.

### இலங்கைப் பொருளாதாரம்

மோதல் மற்றும் அரசாங்கங்களின் மாற்றத்தை முடிவுக்கு கொண்டுவருதல், நீண்ட கால மூலோபாய மற்றும் கட்டமைப்பு அபிவிருத்தி சவால்களை மையமாகக் கொண்டதன் காரணமாக, உயர்ந்த நடுத்தர வருமானம் கொண்ட பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு இலங்கையின் கவனம் குவிந்தது. கடனளிப்பவர்களின் உள்கட்டமைப்பு வளர்ச்சியில் இருந்து விலகி செல்வதற்கான விருப்பத்தை அரசு வெளிப்படையாக வெளிப்படுத்தியுள்ளது. இது தனியார் துறை தலைமையிலான சந்தை அடிப்படையிலான வளர்ச்சிக்கான வளர்ச்சிக்கு வழிவகுத்தது. சேவைத்துறை 62.4% மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (மொத்த உள்நாட்டு உற்பத்தியில்) உற்பத்தி (28.9%) மற்றும் வேளாண்மை (8.7%).

### நாணயமாற்ற வீதம்

இலங்கை மத்திய வங்கியினால் அந்தியச் செலவாணிச் சந்தையில் தலையீடு செய்யாத கொள்கைக்குப் பின்னர், உள்நாட்டில் பணமளிப்பு மற்றும் ஏற்றுமதி வருவாயைக் குறைப்பதன் காரணமாக உயர்ந்த பற்றாக்குறையைத் தொடர்ந்து வந்த பற்றாக்குறை முகாமைத்துவம் செய்யப்பட்டதனால், இலங்கையில் இலங்கை ரூபா 2015ம் ஆண்டின் பெரும்பகுதியில் அமெரிக்க டொலருக்கு எதிராக உறுதியுடன் நிலைத்திருந்ததுடன், செப்டெம்பர் 2015ம் ஆண்டுக்குப் பின்னர், பலவீனமடைந்தது.

**அந்நியச் செலவாணி வீதங்கள் - ஐ.அ.டொலர் மற்றும் இலங்கை ரூபா**

**(இலங்கை மத்திய வங்கி வருடாந்த அறிக்கை – 2015)**

| முடிவடைந்த வருடம் | ஐ.அ.டொ |
|---|---|
| 2011 | 113.90 |
| 2012 | 127.16 |
| 2013 | 130.75 |
| 2014 | 131.05 |
| 2015 | 144.06 |

### பணவீக்கம்

சாதகமான உள்நாட்டு வழங்கல் நிலைமை காரணமாக, இலங்கையின் பணவீக்கம் தொடர்ந்தும் 5% வீதத்தை விடக் குறைவாகக் காணப்பட்டது. ரூபாய் மதிப்பின் காரணமாக, ஜூலை மற்றும் செப்டெம்பர் மாதங்களுக்கிடையே பணவீக்கம் முதல் முறையாக எதிர்மறையாக இருந்தது. வங்கியின் கடன் வளர்ச்சி மற்றும் அரசாங்க ஊழியர்கள் மற்றும் ஏனைய துறையிலுள்ளவர்களுக்கான அதிக ஊதிய மசோதா காரணமாக 2015ஆம் ஆண்டின் போது கொழும்பு நுகர்வோர் விலைக் குறியீட்டெண் 0.9% வீதமாக வீழ்ச்சியடைந்தது.

**பணவீக்க வீதம் - ( மத்திய வங்கி வருடாந்த அறிக்கை - 2015)**

| முடிவடைந்த வருடம் | வருடத்தின் மீதான வருடத்தில் பணவீக்க வீதம் (%) | வருடாந்த சராசரி CCPI வளர்ச்சி |
|---|---|---|
| 2011 | 4.9 | 6.7 |
| 2012 | 9.2 | 7.6 |
| 2013 | 4.7 | 6.9 |
| 2014 | 2.1 | 3.3 |
| 2015 | 2.8 | 0.9 |

### வட்டி வீதம்

ஒரு தளர்வான நாணயச் சூழலில், வட்டி வீகிதங்கள் ஆண்டு முழுவதும் குறைவாகவே இருந்தது. நிலையான கடன் வசதி வீதம் 7.5% வீதமாக இருக்கையில் நிலையான வைப்பு வசதி வீதம் 6% வீதமாக இருந்தது. இதன் விளைவாக இலங்கை மத்திய வங்கியின் 2015 ஏப்பிரல் கொள்கை வீதமானது குறைக்கப்பட்டதன் காரணமாக அனைத்து நேரங்களிலுமான குறைவு 6% வீதத்தை அடைந்தது. வாராந்த சராசரியான எடையுள்ள பிரதான விகிதம் மற்றும் 1 ஆண்டு திறைசேரி வீதம் 2014 டிசம்பர் 31ம் திகதயில் 7.11% வீதமாக இருந்தது.

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

### கைத்தொழிற்துறை கண்ணோட்டம்

இலங்கையின் பொருளாதாரத்துடன் இணைந்து வளர்ந்து வரும் துடிப்பான மற்றும் போட்டித் தொழில்துறையான காப்புறுதித் தொழிற்துறையில் 2015ம் ஆண்டினுள் பதிவு செய்த 29 காப்புறுதி நிறுவனங்களைக் கொண்டிருந்ததுடன், இத்துறையின் மொத்த சொத்துக்கள் இலங்கை ரூபா 394.2 பில்லியனாக இருந்தன. 2014ம் ஆண்டுக்கான இந்த மொத்தச் சொத்தான இலங்கை ரூபா 406.8 பில்லியனுடன் ஒப்பிடப்படல் வேண்டும். காப்புறுதித் தொழில் தொடர்ந்தும் ஊடுருவத் தொடங்கி விட்ட போதிலும், செலவில் செலவழிக்கக்கூடிய வருமானம், அதே போல் விழிப்புணர்வு மற்றும் காப்புறுதி மற்றும் அதன் கடினமான காலங்களில் பெற்றுக்கொள்ளக்கூடிய நிதி ஆதாயங்கள் பற்றிய புரிதல் இல்லாத குறைபாடு காரணமாக ஊடுருவல் விகிதம் குறைந்த மட்டத்தில் உள்ளது. இலவசக் கல்வி, உடல்நலப் பராமரிப்பு ஆகியவற்றுடன் இணைந்த ஓய்வீதியம், ஓய்வூதியத் திட்டங்களிலிருந்து விலக்களிக்கப்பட்ட தனிநபர்களின் பிரிவானது, காப்புறுதித் தொகையை விலக்குவதற்கு பதிலாக, தேவையான நேரங்களில் நிதியுதவிக்கு அரசுக்கு திரும்புவதைத் தேர்ந்தெடுத்தது.

2011ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு, 2015ம் ஆண்டின் ஆரம்பத்தில் செயல்படுத்தப்பட்ட புதிய விதிமுறைகளை, காப்புறுதி தயாரிப்புகளை வர்க்கம் மூலம் வகைப்படுத்தவும் மற்றும் கலப்பு காப்புறுதி நிறுவனங்கள் என அழைக்கப்படும் ஆயுட் மற்றும் பொதுக் காப்புறுதிக்கான தங்கள் நடவடிக்கைகளைப பிரிக்க வேண்டிய தேவை கலப்பு காப்புறுதி நிறுவனங்களுக்கு ஏற்படும். பிந்தயைது நீண்ட கால அடிப்படையில் மூலதனத்தின் திறமையான பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கான முக்கிய நோக்கமாக இருந்தது, அதே நேரத்தில் இடர் அடிப்படையிலான மூலதன முன்னோக்கிலிருந்து பல்வேறு பிரிவுகளின் சிறந்த மேலாண்மைக்கு உத்தரவாதம் அளித்தது. தற்போது 4 கலப்பு நிறுவனங்கள், இரண்டுக்கும் பொதுவான மற்றும் பொது காப்புறுதி நிறுவனங்கள், பொது காப்புறுதி வியாபாரத்தை நடத்தும் 14 நிறுவனங்கள் மற்றும் 11 ஆயுள் காப்புறுதி நிறுவனங்கள் உள்ளன. இது தவிர, காப்புறுதிச் சபையுடன் 57 காப்புறுதி தரகு நிறுவனங்கள் பதிவுகளை மேற்கொண்டிருப்பதுடன், இவை பெரும்பாலும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் கவனம் செலுத்தகின்றன.

இடர் அடிப்படையிலான மூலதனக் கட்டமைப்பு மீளாய்வுக்குட்பட்ட வருடத்தினுள் அறிமுகப்படுத்தப்பட்டது. இது தவிர கட்டுப்பாட்டு மூலதனத் தேவை இலங்கை ரூபா 100 மில்லியனில் இருந்து இலங்கை ரூபா 500 மில்லியனமாக உயர்த்தப்பட்டது. சந்தையில் உள்ள சிறிய செயற்பாட்டாளர்களுக்கு இந்த மாற்றம் ஒரு சவாலாக எதிர்வரும் காலங்களில் அதிக ஒருங்கிணைப்பைக் கொண்டுவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை காப்புறுதிச் சபை அனைத்து காப்புறுதி நிறுவனங்களும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனைச் சந்தையில் பட்டியலிடப்பட வேண்டும் எனத் தேவைப்படுத்துகின்றது. மேலும் காப்புறுதித்துறையின் அதிகரித்த வெளிப்படைத்தன்மைக்காக பெரிய சர்வதேச நிறுவனங்களுக்கான சாத்தியமான விலக்களிப்புகள் வெளிநாட்டு மூலதனத்தைக் கொண்டுவருவதற்கான இயலுமையை காப்புறுதிக் கைத்தொழிற்துறையினுள் உருவாக்க முடியும்.

இந்த மாற்றங்கள் அனைத்துமே நிலைத்தன்மையையும், வெளிப்படைத்தன்மையையும், பெருநிறுவன ஆளுமையையும் மற்றும் தொழிலுக்கு சிறந்த இடர் முகாமைத்துவத்தையும் கொண்டுவருவதன் ஊடாக சந்தையை சீராக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# நிதியியல் மீளாய்வு

தே.கா.ந.நி., பெற்றுக் கொண்ட நிகர தவணைக் கட்டணமாக 2014 இல் பெற்ற ரூபா 8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் சிறிதளவு வீழ்ச்சியாக உள்ள ரூபா 7.9 பில்லியனை 2015 நிதி வருடத்தில் பெற்றுள்ளது. இது பிரதானமாக பயிர்க் காப்புறுதித் தவணைக் கட்டணத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக விவசாயக் காப்புறுதித் திட்டத்தின் மீதான மாற்றத்தினாலேயே ஏற்பட்டது. நிதி, திட்டமிடல் அமைச்சு, அதன் பல்வகைமை வலையமைப்பை பயன்படுத்தி மேலும் வினைத்திறன் மிக்க முறையில் உரிமைக் கோரிக்கைகளை மதிக்கும் பொருட்டு இயைபுடைமையையும் திறனையும் கருத்திற் கொண்டு விவசாய, கமநல காப்புறுதி சபைக்கு தே.கா.ந.நி. இன் கீழான பயிர் காப்புறுதித் திட்ட முகாமையை ஒப்படைப்பதற்குத் தீர்மானித்தது. தே.கா.ந.நி. அதன் நிகர எழுத்து மூலத் தவணைக் கட்டணமாக 2014 இலுள்ள ரூபா 4.2 பில்லியன் இலிருந்து 8.6% வீழ்ச்சியான ரூபா 3.8 பில்லியனைக் கொண்டிருந்தது.

மீளாய்வுக் காலப்பகுதியில் பெற்ற துணை வருமானமானது, 2014 இல் பெற்ற ரூபா 639 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 856 மில்லியனாக இருந்ததுடன் உயர் வட்டி வீதங்களுடன் முதலீட்டிற்குச் செலுத்தப்பட்ட அதிகரித்த திரவநிலை காரணமாகத் திரட்டிய மேம்படுத்தப்பட்ட வட்டி வருமானத்திற்குக் காரணமாகவும் இருந்தது. இலங்கை ரூபாவிற்கு எதிரான அமெரிக்க டொலரின் பெறுமதியேற்றம் முடிவுற்ற நிதியாண்டில் உள்ளவாறு அதன் அமெரிக்க டொலர் குறிக்கும் சேமிப்புக் கணக்குகள் மீது பெற்றுக்கொண்ட நாணயமாற்றுப் பெறுகை மீது தே.கா.ந.நி. இற்கு நன்மையை நிரூபித்தது. தே.கா.ந.நி. இன் கூட்டிணைப்பிற்கு முன்பாக, மென் கடன்களின் தொகுதி ஒன்று, இலங்கை அரசின் மேற்பார்வையின் கீழ் அப்போதிருந்த பகிஸ்கரிப்பு, வன்முறை, சிவில் கலகம் மற்றும் பயங்கரவாத நிதியத்திலிருந்து பிரித்துக் கொடுக்கப்பட்டது. அப்போது நிலவிய சிவில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெரிய நிறுவனங்களிற்கு சலுகை அடிப்படையில் இக்கடன்கள் வழங்கப்பட்டன. 2006 இல் தே.கா.ந.நி. மாற்றப்பட்ட இக்கடன்களின் மீள் கொடுப்பனவு தற்போது குறைக்கப்பட்டு வட்டி வருமானத்திற்குச் சேர்க்கப்பட்டது.

சந்தை மற்றும் விரிவாக்கச் செலவுடன் சேர்ந்த அதிகரிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் அவை தொடர்பான செலவினம் கடந்த நிதியாண்டில் இருந்த ரூபா 4.5 பில்லியனில் இருந்து குறைந்த தே.கா.ந.நி. இன் அடிமட்ட நிலையான ரூபா 4.4 பில்லியனிற்கு சேவையாற்றியது. தே.கா.ந.நி. இன் மொத்தச் சொத்துகள், அரச பிணைப் பொறுப்புகளை முதன்மையாக உள்ளடக்கிய நிதி முதலீடுகளில் அதன் வளர்ச்சியுடன் 2014 இலிருந்து ரூபா 1 பில்லியன் அதிகரிப்புடன் ரூபா 12.2 பில்லியனிற்கு வளர்ச்சியடைந்தது. அதே வேளை, அதன் திரட்டிய நிதியம் 2014 இலிருந்த ரூபா 7.7 பில்லியனிற்கு எதிராக ரூபா 8.6 பில்லியனாக இருந்தது.

**நிகர எழுத்துமூலத் தவணைக் கட்டணத்தின் கூறுபடுத்தல் - 2015**

| (பெறுமானம் இலங்கை ரூபாவில்) | 2015 | 2014 |
|---|---|---|
| உள்முக மீள்காப்புறுதி | 1,737,839,949 | 2,041,207,710 |
| வன்முறை, சிவில் கலகம், பயங்கரவாதம் | 3,018,417,937 | 2,835,199,980 |
| பொது காப்புறுதி - மோட்டார் | 242,090,517 | 142,690,974 |
| பொது காப்புறுதி - மோட்டார் அல்லாத | 36,599,503 | 22,595,787 |
| பயிர்க் காப்புறுதி | - | 787,372,981 |
| பாராளுமன்ற உறுப்பினர்களிற்கான மருத்துவக் காப்புறுதி | 27,737,796 | 13,000,000 |
| அக்ரஹார மருத்துவத் திட்டத்திற்கு பெறப்பட்ட மொத்தப் பங்களிப்பு | 1,636,567,419 | 1,494,899,976 |
| சேகரிக்கப்பட்ட பயிர்க் காப்புறுதி வரி | 1,259,134,207 | 1,184,647,255 |

# பிரிவு ரீதியான மீளாய்வு

## அக்ரஹார

அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டம், அரச அதிரிகள், அரச, மாகாண அரச துறைப் பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நன்மைத் திட்டம் ஒன்றாக அறிமுகம் செய்யப்பட்டது. முன்னர் 1997 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த 19 வருட திட்டம், சகல ஓய்வு பெறத்தக்க அரச அலுவலர்களின் மாதாந்த சம்பளத்திலிருந்து நபர் ஒருவருக்கான கழிப்பாக பரும்படியான மாதாந்த பங்களிப்பைப் பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் அமுலாக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்தது. பின்னர் 2006 ஜனவரியில் இலங்கை அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்டு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினூடாக பொது நிர்வாக அமைச்சின் ஒரு திட்டமாக தற்போது இயங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தற்போது 825,000 உறுப்பினர்கள் இருக்கின்றனா். இது குடும்ப உறுப்பினர்கள் அடங்கலாக 2.2 மில்லியன் நபர்களை உள்ளடக்குகிறது.

உரிமைக் கோரிக்கைக் கொடுப்பனவை துரிதப்படுத்தும் நோக்கில், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது, உரிமைக் கோரிகைகளின் சகல தேவைப்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டதும், 3 நாட்களினுள் உரிமைக் கோரிக்கைக் கொடுப்பனவைத் துரிதப்படுத்தும் புதியதொரு உரிமைக் கோரிக்கைச் செயன்முறை ஒன்றை அமுல்படுத்தியுள்ளது. இதற்கு மேலதிகமாக, பல வைத்தியசாலைகளில் கிடைக்கக் கூடிய அதன் இலத்திரனியல் அட்டை வசதி, விசேட நன்மைகளையும் மற்றும் வைத்தியசாலை அனுமதிப்பு மற்றும் வெளிவாரி சிகிச்சைகளின் போது கழிப்பனவுகளையும் வழங்குகின்றது. 'லங்கா வைத்தியசாலை', 'ஹேமாஸ் மருத்துவமனை', 'நவலோகா வைத்திசாலை', 'நொதேர்ன் மருத்துவமனை யாழ்ப்பாணம்', 'சிங்க மருத்துவமனை ரத்தினபுரி', 'ஒஸ்ரோ மருத்துவமனை மாவனல்லை', 'கூட்டுறவு வைத்தியசாலையும் சங்கமும், காலி' உள்ளடங்கலாக பல பிரசித்த வைத்தியசாலைகளின் கூட்டிணைவானது, தே.கா.ந.நி. இன் வளர்ச்சிக்கு சான்றாக உள்ளதுடன் அதன் வாடிக்கையாளர்களிற்கு பல்வேறுபட்ட நன்மை வழங்கலையும் உறுதி செய்கிறது. இம் மருத்துவக் காப்புறுதித் திட்டமானது, பின்வருவன அடங்கலாக பல்வேறு நன்மைகளை வழங்குகிறது.

- மருத்துவமனைக் கட்டணங்கள், சிகிச்சை மற்றும் அவை தொடர்பான மருத்துவச் செலவுகள், பொது மருத்துவ வல்லுனர், சிறப்பு மருத்துவ வல்லுனர் ஆகியோரால் வழங்கப்படும் ஆலோசனைச் சேவைக் கட்டணங்கள், மருத்துவப் பரிசோதனை மற்றும் உள்ளக சிகிச்சைச் செலவுகள் என்பன உள்ளடங்கலாக வைத்தியசாலைக் கட்டண மீள் நிரப்பல்கள
- ரூபா 400,000 இலிருந்து ரூபா 500,000 வரை அதிகரிக்கப்பட்ட இதய அறுவைச் சிகிச்சை தொடர்பான மீள் நிரப்பல்கள்
- ரூபா 150,000 இலிருந்து ரூபா 200,000 வரை அதிகரிக்கப்பட்ட புற்றுநோய் மற்றும் சிறுநீரக அறுவைச் சிகிச்சை தொடர்பான மீள் நிரப்பல்கள்
- பிந்திய கோரிக்கை நன்மைகளுக்கான இயற்கை மரண இழப்பீடு இ. ரூபா 100,000 இருந்து இ. ரூபா 150,000 வரை அதிகரிக்கப்படுடுன்றது.
- 3 வருடங்களுக்கு ஒரு முறை மூக்குக் கண்ணாடிக் கொள்வனவு மற்றும் ரூபா 3,500 வழங்கல் என்பன தொடர்பான கட்புல மீள் நிரப்பல்கள்

'அக்ரஹார' உறுப்பினர்களிற்கு சேவையாற்றும் பொருட்டு அனுராதபுரம், அம்பாந்தோட்டை ஆகிய இடங்களிலுள்ள பிராந்திய அலுவலகங்களிற்கு மேலதிகமாக, நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு மாவட்ட செயலகத்திலும் 18 பிரிவுகளை தே.கா.ந.நி. கொண்டுள்ளது. இப்பிரிவுகள் ஒவ்வொன்றும், மேம்படுத்தல் மற்றும் தெளிவுபடுத்தல் பிசாரங்களை நடத்துவதன் ஊடாக வியாபார வளர்ச்சியை மேம்படுத்தும் ஒருங்கிணைப்பு அலுவலர் ஒருவரால் நிர்வகிக்கப்படுகிறது. நிதி மீளாய்வு வருடத்தில், அதன் வியாபாரத்தை மேம்படுத்தும் வகையில் இப்பிரிவுகள் சிலவற்றில் வசதி மேம்பாடு, புனர் நிர்மாணம் என்பனவும் மேற்கொள்ளப்பட்டது. தே.கா.ந.நி. ஆனது, அரச துறைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கொள்கைகள் தொடர்பில் பிரிவுகளை விரிவுபடுத்தவும் திட்டமிட்டுள்ளது.

அக்ரஹார பிரிவின் மொத்த வருமானத்தின் தொகை (99%), காப்புறுதி அங்கத்துவத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக முன்னைய நிதி வருடத்தில் இருந்த ரூபா 1.49 பில்லியனில் இருந்து 9.4% அதிகரிப்பாக ரூபா 1.64 பில்லியனை அதன் மொத்த எழுத்து மூல தவணைக் கட்டணமாகக் கொண்டிருந்தது. திறைசேரி உண்டியல்களில் அதிகரித்த முதலீடு காரணமாகவும் அதிகரித்த திரவத்தன்மையில் இருந்தான குறுகியகால மீள் வாங்கல் முதலீடு என்பன காரணமாக வருடத்தின் மீதான வட்டி வருமானம் ரூபா 569000 இலிருந்து ஏறத்தாழ 477% கணிசமான அதிகரிப்பான ரூபா 3.29 மில்லியனைக் கொண்டிருந்தது.

| (ரூபா) | 2015 (ரூபா) | 2014 (ரூபா) |
|---|---|---|
| மொத்த எழுத்து மூல தவணைக் கட்டணம் | 1,636,567,419 | 1,494,899,976 |
| வட்டி வருமானம் | 3,290,985 | 569,491 |
| ஏனைய வருமானம் | 40,750 | 169,835 |
| மொத்த வருமானம் | 1,639,899,154 | 1,495,639,302 |



# பிரிவு ரீதியான மீளாய்வு

**அக்ரஹார உரிமைக் கோரிக்கைகளின் வகுப்பாக்கம் - 2015**

| உரிமைக் கோரிக்கை வகை/ கோரிக்கைகளின் எண்ணிக்கை | பெற்ற மொத்த உரிமைக் கோரிக்கைகள் | | செலுத்தப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் | | நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகள் | |
|---|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 |
| மரணம் | 1,137 | 1,649 | 840 | 1,413 | 278 | 213 |
| அங்கவீனம் | 359 | 198 | 310 | 152 | 36 | 42 |
| குழந்தை பிறப்பு | 10,427 | 10,851 | 9,167 | 9,829 | 964 | 662 |
| புற்றுநோய் | 352 | 529 | 310 | 449 | 29 | 55 |
| இதய நோய் | 664 | 783 | 653 | 757 | 7 | 16 |
| மூக்குக் கண்ணாடி | 60,205 | 72,672 | 52,760 | 65,434 | 3,019 | 2,341 |
| ஏனைய நோய்களுக்கான அரச வைத்தியசாலைக் கட்டணங்கள் | 29,565 | 31,777 | 26,624 | 28,745 | 1,927 | 2,044 |
| ஏனைய நோய்களுக்கான தனியார் வைத்தியசாலைக் கட்டணங்கள் | 15,215 | 19,497 | 12,296 | 15,779 | 1,497 | 1,823 |
| சிறுநீரகம் | 16 | 5 | 14 | 5 | - | - |
| பாரிசவாதம் | 1 | 1 | 1 | - | - | - |
| மொத்தம் | 117,941 | 137,962 | 102,975 | 122,563 | 7,757 | 7,196 |

**அக்ரஹார உரிமைக் கோரிக்கைகளின் வகுப்பாக்கம்**



# பிரிவு ரீதியான மீளாய்வு

### உரிமைக் கோரிக்கைக் கொடுப்பனவுத் தொகுப்பு




**நிகர உரிமைக் கோரிக்கைகள்**

| இ. ரு. மில் | 2015 | 2014 |
|---|---|---|
| உறுப்பினர்களின் பங்களிப்பு | 1,236,567,419 | 1,094,899,976 |
| திறைசேரிப் பங்ளிப்பு | 400,000,000 | 400,000,000 |
| மொத்தப் பங்களிப்பு | 1,636,567,419 | 1,494,899,976 |
| உரிமைக் கோரிக்கைச் செலவினம் | (1,561,625,099) | (1,228,123,716) |
| குறை/ மிகை | 74,942,320 | 266,776,260 |

### வேலை நிறுத்தம், வன்முறை, சிவில் கலகம் மற்றும் பயங்கரவாத நிதியம்

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் 1987 இல் ஸ்தாபிக்கப்பட்டு முகாமை செய்யப்பட்ட வேலை நிறுத்தம், வன்முறை, சிவில் கலகம் மற்றும் பயங்கரவாத நிதியமானது, இலங்கைப் பூகோள எல்லையினுள் பொது வேலை நிறுத்தம், வன்முறை, சிவில் கலகம், பயங்கரவாத நடவடிக்கைகளின் விளைவாக தமது சொத்துகளின் இழப்பு அல்லது சேதம், தனிப்பட்ட விபத்துகளால் ஏற்படும் பின்னடைவு, உடற் காயம் ஏற்படுதல் போன்றன தொடர்பில் வழங்கப்படும் பொதுக் காப்புறுதிக் கொள்கைகளுக்கான பாதுகாப்பை வழங்கும் பொருட்டு ஸ்தாபிக்கப்பட்டது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் சார்பில் வேலை நிறுத்தம், வன்முறை, சிவில் கலகம் மற்றும் பயங்கரவாத நிதியக் காப்புறுதி உள்ளடக்கங்களை வழங்குகின்ற 17 பதிவு செய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள் தற்போது இலங்கையில் இயங்குகின்றன.:

- ஏசியன் அலையின்ஸ் பொதுக் காப்புறுதி லிமிடட்
- சனச காப்புறுதி கம்பனி லிமிடட்
- அமானா தக்காபுல் பிஎல்சி
- கூட்டுறவுக் காப்புறுதி கம்பனி லிமிடட்
- சிலிங்கோ பொதுக் காப்புறுதி லிமிடட்
- ஏஐஏ பொதுக் காப்புறுதி லங்கா லிமிடட்
- எச்என்பி பொதுக் காப்புறுதி லிமிடட்
- ஜனசக்தி பொதுக் காப்புறுதி லிமிடட்
- எம்பிஎஸ்எல் காப்புறுதி கம்பனி லிமிடட்
- அலியன்ஸ் காப்புறுதி லங்கா லிமிடட்
- யுனியன் அசூரன்ஸ் பொது லிமிடட்
- இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன லிமிடட்
- கென்டினன்ட்ல் காப்புறுதி லங்கா லிமிடட்
- பீப்பள்ஸ் காப்புறுதி பிஎல்சி
- எல்ஓஎல்சி காப்புறுதி கம்பனி லிமிடட்
- ஓரியன்ட் காப்புறுதி லிமிடட்
- தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சபை

### உரிமைக் கோரிக்கைச் செலவினம் 2015



# பிரிவு ரீதியான மீளாய்வு

| இல. ரூபா | 2015 (ரூபா) | 2014 (ரூபா) |
|---|---|---|
| மொத்த எழுத்து மூல தவணைக் கட்டணம் | 3,018,417,937 | 2,835,199,980 |
| முதலீட்டு வருமானம் | 550,349,604 | 479,257,678 |
| ஏனைய வருமானம் | 3,198,218 | 11,937,931 |
| மொத்த வருமானம் | 3,571,965,759 | 3,326,395,589 |

### மீள் காப்புறுதி

தே.கா.ந.நி. ஆனது, வெளிநாட்டு நாணயத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் அதேவேளை இலங்கையில் இயங்கும் சகல முதன்மைக் காப்புறுதிக் கம்பனிகளிற்கும் ஆதரவு வழங்கலை மேம்படுத்துவதுடன் 2008 இல் மீள் காப்புறுதி இடரை ஏற்றுக்கொண்டு ஆரம்பித்தது. தே.கா.ந.நி. தற்போது இலங்கையில் இயங்கும் ஒரேயொரு மீள் காப்புறுதியாளராக உள்ளதுடன் தேசிய மீள் காப்புறுதியாளராகவும் சேவையாற்றுகிறது. தே.கா.ந.நி. இடமிருந்து மீள் காப்புறுதி வர்த்தகத்தின் மொத்தத் தொகையின் 30% ஐப் பெறுதல் இலங்கையிலுள்ள பொதுக் காப்புறுதிக் கம்பனிகளிற்கு கட்டாயமானதாகும். தே.கா.ந.நி. ஆனது, ஏற்றுக்கொள்ளப்பட்ட பொறுப்பிற்குச் சமமான தொகை ஒன்றின் பொருட்டு முதன்மைக் காப்புறுதிக் கம்பனிகளால் சமர்ப்பிக்கப்படும் ஏதேனும் உரிமைக் கோரிக்கைத் தீர்வுக்கு பொறுப்பாகவுள்ளது. தே.கா.ந.நி., விதிவிலக்கான, பாதகமான கோரிக்கை அனுபவம் ஒன்றைப் பெறும் சந்தர்ப்பத்தில் அதன் சொந்த நிலுவைத் தாளைப் பேணும் பொருட்டு பின்னகர்வு உள்ளடக்கம் ஒன்றையும் பெற்றுள்ளது.

| இல. ரூபா | 2015 (ரூபா) | 2014 (ரூபா) |
|---|---|---|
| மொத்த எழுத்து மூல தவணைக் கட்டணம் | 1,737,839,949 | 2,014,207,710 |
| முதலீட்டு வருமானம் | 186,086,647 | 78,837,436 |
| ஏனைய வருமானம் | 23,719,435 | 948,265 |
| மொத்த வருமானம் | 1,947,646,031 | 2,093,993,411 |

### மோட்டார் காப்புறுதி

முற்றாக அரசிற்குச் சொந்தமான நிறுவனமாவுள்ள தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் நம்பிக்கை நிதியத்தின் மோட்டார் பிரிவானது, இயல்தகு தவணைக் கட்டணம் ஒன்றில் அரச, அரச சார்பு நிறுவனங்களிற்கு விரிவான மற்றும் மூன்றாம் தரப்புக் காப்புறுதிகளை வழங்குகிறது. விரிவான காப்புறுதிக் கொள்கையானது, நெருப்பு, களவு, மூன்றாம் தரப்புகள் (மரணம் மற்றும் காயம்), வெள்ளம், வேலை நிறுத்தம், சிவில் கலகம், பயங்கரவாதம் போன்ற காரணிகளால் ஏற்படும் சேதங்களை உள்ளடக்குகிறது.

தே.கா.ந.நி. ஆனது, அதன் போட்டித் தன்மைக்கு மேலதிகமாக, நாடளாவிய ரீதியில் விபத்துகளின் துரிதமான மதிப்பீடுகள், வசதியான கராஜ் ஒன்றில் திருத்தம் மேற்கொள்ளக் கூடிய இயலுமை, ஆவணம் சமர்ப்பித்து 3 நாட்களினுள் கோரிக்கைத் தீர்வுகள் என்பன உள்ளடங்கலாக பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளையும் வழங்குகிறது. அத்துடன் அரசாங்க கள அலுவலர்களால் பயன்படுத்தப்படும் மோட்டார் சைக்கிள்களுக்கும் காப்புறுதித் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டவை தவிர, தே.கா.ந.நி. ஆனது, வெள்ளம், மூன்றாம் தரப்புச் சொத்துச் சேதம், தீர்வையற்ற பொருட்களை ஏற்றல், இழுவைக் கட்டணம், வின்ட்ஸ்கிறீன், பயிலுனர் சாரதி, வேலையாள் நட்ட ஈடு, பயணிகளிற்கான சட்டப் பொறுப்பு, இடை வழிப் பொருட்கள் என்பவற்றிற்கான உள்ளடக்கத்தையும் வழங்குகிறது. மீளாய்வு வருடத்தின் போது, துரிதமான கோரிக்கைக் கொடுப்பனவிற்கு வசதியளிக்கும் முயற்சியாக, மாவட்ட செயலகங்களினுள் 24 மணித்தியால அழைப்பு நிலையம் ஒன்றும் பல்வேறு கிளை அலுவலகங்களும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. கோரிகைகளின் பரிசீலனை மேற்கொள்ளப்படுமிடத்து, அச்செயன்முறைக்கு உதவும் வகையில் நாடளாவிய ரீதியில் வினைத்திறன் மிக்க மதிப்பீடாளர் குழு ஒன்று சேவையாற்றுகிறது.

| இல. ரூபா | 2015 (ரூபா) | 2014 (ரூபா) |
|---|---|---|
| மொத்த எழுத்து மூல தவணைக் கட்டணம் | 242,090,517 | 142,690,974 |
| முதலீட்டு வருமானம் | 34,621,732 | 34,530,790 |
| ஏனைய வருமானம் | 21,181,827 | 1,193,618 |
| மொத்த வருமானம் | 297,894,076 | 178,415,382 |

மோட்டார் பிரிவானது, மொத்த எழுத்து மூல தவணைக் கட்டணத்தில் 70% அதிகரிப்பைக் காட்டிய வருடத்தின் மீது வருடம் தேறிய வருமானத்தில் 78% அதிகரிப்பைக் காட்டியது. புதிய முகாமைத்துவம், அதிகரிக்கப்பட்ட அலுவலர்கள், தொடர்ச்சியாக சிறந்த நிலையிலுள்ள வாடிக்கையாளர் சேவை என்பவற்றின் வழிநடத்தலின் கீழ் அதிகரித்த சந்தை மற்றும் மேம்பாட்டுத் திறன் ஆகியவற்றின் பயனாக இந்த மேம்படுத்தப்பட்ட நிறைவேற்றுகை கிடைக்கப் பெற்றது. மோட்டார் பிரிவு, மோட்டார் காப்புறுதிக் கொள்கை ஒன்றைப் பெற்றுக் கொள்ளலை உறுதி செய்யும் சான்றிதழிற்கு எதிராக காப்புறுதி அட்டை ஒன்றை வைத்திருக்கும் வாடிக்கையாளர் விருப்பத் தேர்வையும் அங்கீகரித்தது. காப்புறுதி அட்டை முறை வாடிக்கையாளரை வெகுவாகக் கவர்வதாக இனங்காணப்பட்டது. அதற்கிணங்க புதிய பிளாஸ்ரிக் காப்புறுதி அட்டை ஒன்று, வருமான மட்டத்தை உயர்த்த வழிவகுக்கும் விதத்தில் மீளாய்வு வருடத்தின் போது அறிமுகஞ் செய்யப்பட்டது.

# பிரிவு ரீதியான மீளாய்வு

| வகை | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|
| | கோரிக்கைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபா. மில்லியன்) | கோரிக்கைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபா. மில்லியன்) |
| தனியார் கார் | 392 | 32.77 | 258 | 33.02 |
| மோட்டார் சைக்கிள் | 42 | 0.52 | 966 | 13.89 |
| மோட்டார் வண்டி | 117 | 12.28 | 91 | 9.52 |
| லொறி/ காணி வாகனம் | 68 | 6.46 | 51 | 4.34 |
| இரட்டைத் தேவை வாகனம் | 272 | 19.85 | 220 | 26.51 |
| மொத்தம் | 891 | 71.87 | 1,586 | 87.27 |




### பொதுக் காப்புறுதி ( மோட்டார் அல்லாத )

தே.கா.ந.நி. இன் பொதுக் காப்புறுதி (மோட்டார் அல்லாத) வர்த்தகமானது, நெருப்பு, கடல், மருத்துவம் மற்றும் தொழிலாளர் நட்ட ஈடு, பிரயாணம், கொள்ளை போன்றவற்றை உள்ளடக்கிய ஏனைய வகை என உப பிரிவிடப்பட்டுள்ளன. பொதுக் காப்புறுதிப் பிரிவானது, தீர்வு பொருட்டு கோரிக்கை பெற்றுக் கொண்டதும் துரித நடவடிக்கையை வழங்கும் வகையில் நாடளாவிய ரீதியில் தேர்ச்சி பெற்ற சீராக்குனர்களின் குழாம் ஒன்றுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பிரிவால் நெருப்புக் காப்புறுதி, ஒப்பந்தகாரர்களின் இடர் காப்புறுதி, தொழிலாளர் நட்ட ஈட்டுக் காப்புறுதி, கொள்ளை அபாயக் காப்புறுதி, ஒப்பந்தகாரர்களின் பொறி மற்றும் இயந்திரக் காப்புறுதி, தனிப்பட்ட விபத்துக் காப்புறுதி போன்ற பல்வேறு காப்புறுதிக் கொள்கைகள் அமுலாக்கப்பட்டுள்ளன.

| இல. ரூபா | 2015 (ரூபா) | 2014 (ரூபா) |
|---|---|---|
| மொத்த எழுத்து மூல தவணைக் கட்டணம் | 36,599,503 | 22,595,787 |
| முதலீட்டு வருமானம் | 6,516,870 | 12,717,852 |
| ஏனைய வருமானம் | 38,087 | 183,465 |
| மொத்த வருமானம் | 43,154,460 | 35,497,104 |

# கூட்டுரிமை ஆட்சி

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம், சிறந்த கூட்டுரிமை ஆட்சி நீண்ட காலப் பெறுமதியை உருவாக்குகிறது என்பதையும் அதன் செயற்பாடு, இயக்கம், நடவடிக்கைக்கான உயர் தரங்களை உருவாக்கும் மற்றும் பிரயோகிக்கும் நோக்கினைக் கொண்டுள்ளது என்பதையும் அங்கீகரிப்பதுடன் இக்கைத்தொழிலுக்குத் தேவையான சகல வெளியக ஒழுங்குபடுத்தல் அமைப்புகளுடனும் சிறந்த பழக்கங்களின் கூட்டுரிமை ஆட்சிக் கோவை, நல்லாட்சிக்கான அரச தொழில் முயற்சி வழிகாட்டல்கள், கூட்டுரிமை ஆட்சிப் பழக்கங்கள் என்பவற்றுடனும் இணக்கமடைந்துள்ளன என்பதையும் அங்கீகரிக்கின்றது. இதனைத் தவிர தே.கா.ந.நி. சகல பணியாளர்களும் கடுமையாகப் பின்பற்றப்படும் நடத்தைக் கோவை ஒன்றிற்கு கட்டுப்பட்டுள்ளனர். தே.கா.ந.நி. அதன் நடவடிக்கைகளை பொறுப்புணர்வுடன் முகாமை செய்தலை நோக்காகக் கொண்டுள்ளதுடன் அதன் மூலம் வாடிக்கையாளரினதும் பணியாளர்களினதும் அரசினதும் பொது மக்களினதும் நம்பிக்கையையும் பெற்றுள்ளது. பணிப்பாளர் சபை, அதனுடன் இணைந்த குழுக்கள் என்பவற்றின் வினைத்திறன் மிக்க பண்புகள், பணியாளர்களிற்கும் இவ்வமைப்புகளிற்குமிடையிலான பிணைப்பு மற்றும் வெளிப்படையான தொடர்பாடல் என்பன சிறந்த கூட்டுரிமை ஆட்சிக்கு முக்கியமானவையாகும்.

### பணிப்பாளர் சபை

பணிப்பாளர் சபையானது, கூட்டுரிமை ஆட்சி மேடைக்கு அடித்தளமாக உள்ளதுடன் தே.கா.ந.நி. அரச கொள்கைகள், அரசமைப்பு, சட்டத் தேவைப்பாடுகளுக்கு இணங்க வினைத்திறன் மிக்க முறையில் முகாமையிடப்படுதலையும் அதன் இலக்குகள் எய்தப்படுதலையும் உறுதி செய்யும் பொருட்டு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் சகல சபை உறுப்பினர்களும் அதன் பங்குதாரர்களிற்கு பொறுப்புக்கூறத்தக்கதாக உள்ளனர். இது நிறுவனத்தில் பொருத்தமானதொரு ஆட்சி முறை உள்ளதென்பதை உறுதிப்படுத்துகிறது. 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்திற்கு அமைவாக சபையின் தலைவர் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சரினால் நியமிக்கப்பட்டார்.

பணிப்பாளர் சபையானது, நீண்ட கால நிலையாண்மைப் பெறுமானத்தை உருவாக்குவதிலும் வழங்குவதிலும் அதே வேளையில் நிறுவனத்தின் வர்த்தக நடவடிக்கைகள், ஏனைய நடவடிக்கைகள் என்பன ஒழுங்குபடுத்தல் சட்டகத்தினுள் முகாமையிடப்படுகின்றன என்பதை உறுதி செய்வதிலும் அவர்களின் பங்தாரர்களிற்கு பொறுப்புக் கூறத்தக்கதாக உள்ளது. குறுகிய, நடுத்தர, நீண்டகால நோக்கங்களை விருத்தி செய்தல், முழு மொத்த வர்த்தகத் திட்டம் பற்றிய வழிகாட்டல்கள், தெளிவாக வரையறுக்கப்பட்ட மனித வள முறைமை, நிலையியற் கட்டளை இணக்கப்பாடுள்ள வழிகாட்டல்கள், உள்ளகக் கணக்காய்வு, இடர் முகாமைத்துவ வழிகாட்டல்கள், வர்த்தகத்தில் பாரிய முதலீட்டை மீளாய்தல் என்பன பொருட்டான தொழில் முயற்சியாண்மைத் தலைமைத்துவம் மற்றும் உபாயத் திறன் ஏற்பாடுகள் பணிப்பாளர்களின் பொறுப்புகளாகும். மீளாய்வு காலப்பகுதியில், தே.கா.ந.நி. சபையின் கடப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் சிறந்த வரவினைக் கொண்ட ஏழு சபைக் கூட்டங்களை நடத்தியது. தே.கா.ந.நி. ஆனது, நிதி நிலைமை, வர்த்தக அபிவிருத்தி, நோக்க எய்துகை, இடர் வெளிப்படுத்துகை, நிலையியற் கட்டளை இணக்கப்பாடு என்பன அடங்கலாக சகல விடயங்கள் பற்றியும் சபைக்கு விரிவாக அறிக்கையிடுகிறது.

### சபைக் கூட்டங்கள் மற்றும் வரவு - 2015

தே.கா.ந.நி. சபை, நிறுவனத்தின் நடைமுறை வர்த்தகத்தை ஆராயும் பொருட்டும் தேவைக்கேற்றவாறும் கிரமமான முறையில் கூடுகிறது. சகல வருகையின்மைகளும் முற்கூட்டியே அறிவிக்கப்பட்டு பதிவு செய்யப்படுவதுடன் இற்றைப்படுத்தல் மூலம் வராதவர்கள் குறிக்கப்படுகின்றனர். ஆக்கபூர்வமான, திறன் மிக்க கலந்துரையாடலை உறுதி செய்யும் வகையில் சபை ஆவணங்கள் முற்கூட்டியே உறுப்பினர்களிடையே விநியோகிக்கப்படுகின்றன. இவ்வாண்டில் 7 சபைக் கூட்டங்கள் நடைபெற்றன.

### சபை செயலாளரின் வகிபாகம்

சபைச் செயலாளர் திருமதி. கயனி சியம்பலகொட சகல சபைத் தீர்மானங்களையும் குறிப்பிடுவதுடன் நிகழ்வுகளின் ஒருங்கிணைப்பை உறுதி செய்யும் வகையில் சகல விடயங்கள் பற்றியும் பணிப்பாளர்களுடன் தொடர்பை ஏற்படுத்துகிறார்.

### நிதிக் கூற்றுகள்

தே.கா.ந.நி. இன் நிதிக் கூற்றுகள், இலங்கை கணக்கீட்டுத் தரங்களையும் ஏனைய சகல பிரயோகிக்கத்தக்க சட்ட ஒழுங்குவிதிகளையும் கைக்கொண்டு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது.

### பெறுகை

நிதி, திட்டமிடல் அமைச்சின் அரச நிதித் திணைக்கத்தினால் வழங்கப்படும் பெறுகை வழிகாட்டல்களைப் பயன்படுத்தி இது மேற்கொள்ளப்படுகிறது. பெறுகைகள் கவனத்திற் கொள்ளப்படும் பெறுமதி அடிப்படையில் அமைச்சரவை நியமித்த பெறுகைக்குழு, அமைச்சின் பெறுகைக்குழு, திணைக்களத்தின் பெறுகைக் குழு என்பவற்றின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன.

### கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழு, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட “கணக்காய்வுக் குழுக்களுக்கான சிறந்த பழக்கக் கோவை” உடன் ஒத்துப்போகத்தக்க பணிகளையும் பொறுப்புகளையும் கொண்டு மீளாய்வு வருடத்தில் வகுத்தமைக்கப்பட்டது. கணக்காய்வின் நோக்கெல்லையும் கணக்காய்வுக் குழுவுடன் இணைக்கப்பட்ட பொறுப்புகளும் 2015 இல் பின்வருமாறு ஸ்தாபிக்கப்பட்டது.:

- வருடாந்த கணக்காய்வுத் திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டு தாபிக்கப்பட்டது.
- உள்ளக கணக்காய்வு முறைமைகள் மீளாய்வு செய்யப்பட்டு தாபிக்கப்பட்டது.
- தனித்தனிப் பிரிவுகளின் நிறைவேற்றுகை செலவு வினைத்திறன் மற்றும் விரயச் செலவினக் குறைப்பு என்பவற்றின் நோக்கத்திற்காக கால இடைவெளியில் தாபிக்கப்பட்டது.
- கணக்காய்வாளர் அதிபதியின் முகாமைக் கடிதங்கள் தொடர்பில் உள்ளகக் கணக்காய்வாளரினதும் கணக்காய்வாளர் அதிபதியினதும் தொடர்ச்சியான நடவடிக்கை
- நிலையியற் கட்டளைகள், ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கை களுடன் இணங்கியிருத்தலைப் பரிசீலித்தல்

# கூட்டுரிமை ஆட்சி

- உரிய கணக்கீட்டுத் தரங்களுடன் இணங்கியிருத்தலை உறுதி செய்யும் வகையில் நிதிக் கூற்றுகளைப் பரிசீலித்தல்
- வெளியக, உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் முகாமைக் கடிதங்களை அவற்றின் தவறு மற்றும் தீர்வு நடவடிக்கை பொருட்டு மீளாய்வு செய்தல்
- குழுவின் கட்டளை, பரிந்துரைகளை அமுல்படுத்தல் தொடர்பில் மீளாய்வு செய்தல்

2015 இல் கணக்காய்வுக் குழு 3 தடவைகள் கூடியது. இவ்வருடம் உள்ளகக் கட்டுப்படுத்தலில் குறிப்பிடத்தக்க மேம்பாட்டைக் கொண்டிருந்தது. உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மாதாந்தம் தயாரிக்கப்பட்டு சகல பிரச்சனைகளையும் இனங்காணும் பொருட்டு தொடர் கூட்டங்கள் நடத்தப்பட்டன. கட்டுப்படுத்தல் வினைத்திறன் மேம்பாடு, இனங்காணப்பட்ட ஊறுபாடுகளை மேம்படுத்தல் என்பவற்றிற்கான சாத்தியமான வழிமுறைகள், இனங்காணப்பட்ட இடர்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டன. மேலதிக நடவடிக்கையாக, உள்ளகக் கணக்காய்வுக் குழு, தே.கா.ந.நி. இன் ஒழுங்கு விதிகளுக்கு காப்புறுதிக் கம்பனிகள் இணக்கமடைந்துள்ளதைக் கண்காணிக்கும் பொருட்டு பல காப்புறுதிக் கம்பனிகளுக்கு விஜயம் செய்தது.

| கணக்காய்வுக்குழு உறுப்பினர்கள் | வரவு |
|---|---|
| திரு. ஏ.ஆர். தேசப்பிரிய (தலைவர்) | 3 |
| திரு. ட்ரெவின் பெர்னாண்டோ புள்ளே | 3 |
| திரு. அசேந்திர சிறிவர்தன | 3 |

### வெளியகக் கணக்காய்வு

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல்யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் நியதிகளுக்கிணங்க கணக்காய்வாளர் தலைமை அதிபதி வெளியகக் கணக்காய்வாளராக நியமிக்கப்பட்டதுடன் அரச கூட்டுத்தாபனங்கள், வர்த்தகங்கள் அல்லது ஏதேனும் எழுத்து மூலச் சட்டத்தின் கீழ் அரசிற்கு உரித்தளிக்கப்பட்ட ஏனைய பொறுப்புகள் என்பவற்றின் கணக்குகளினையும் கணக்காய்வு செய்வதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளார். கணக்காய்வாளர் தலைமை அதிபதி, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல்யாப்பின் 154(4) ஆம் உறுப்புரையின் நியதிகளுக்கிணங்க 2015 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான கம்பனியின் நிதிக் கூற்றுகளின் வருடாந்தக் கணக்காய்வை மேற் கொண்டார்.

### முதலீட்டுக் குழு

முதலீட்டுக் குழுவின் பொறுப்புகளாவன, தே.கா.ந.நி. இன் முதலீட்டுக் கொள்கை, வழிகாட்டல்கள் என்பவற்றிற்கு இணங்க உச்ச பட்ச விளைவைப் பெறும் பொருட்டு அது அமுலாக்கப்பட்டுள்ளதை உறுதி செய்தல் மற்றும் உறுதியான முதலீட்டுக் கொள்கை ஒன்றை விருத்தி செய்தல் ஆகிய இரு பிரதான பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம். இவ்வருடத்தில் தே.கா.ந.நி. முதலீட்டுக்குப் பொறுப்பான முகாமையும் சொத்து ஒதுக்கீடு, சொத்துப் பொறுப்பு முகாமைத்துவம் என்பன நுண்ணாய்வு செய்யப்பட்டதுடன் முதலீட்டுக்கான புதிய வாய்ப்புகளும் ஆராயப்பட்டன. இவ்வாண்டில் ஒரு முதலீட்டுக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

| முதலீட்டுக் குழு உறுப்பினர்கள் | வரவு |
|---|---|
| திரு. ட்ரெவின் பெர்னாண்டோ புள்ளே (தலைவர்) | 1 |
| திரு. அசேந்திர சிறிவர்தன | 1 |
| திரு. ஏ.ஜே.டி. டயஸ் | 1 |

### செயற் குழு

வேலை நிறுத்தம், வன்முறை, சிவில் கலகம் மற்றும் பயங்கரவாதத்திற்கான செயற்குழுவானது, வேலை நிறுத்தம், வன்முறை, சிவில் கலகம் மற்றும் பயங்கரவாத இடரின் கீழான உரிமைக் கோரிக்கைக் கொடுப்பனவு தொடர்பில் ஆராய்ந்து தீர்மானம் எடுப்பதற்காக உருவாக்கப்பட்டது. செயற் குழு பொதுக் காப்புறுதிக் கம்பனிகளைப் பிரதிநிதிப்படுத்தும் சிரேஸ்ட காப்புறுதி அலுவலர்களை உள்ளடக்கியுள்ளதுடன் செயற் குழுக் கூட்டங்கள் கோரிக்கைக் கொடுப்பனவுத் தீர்மானம் எடுக்கும் பொருட்டு மாதாந்தம் நடத்தப்படுகின்றன. அதன் பின் அத்தீர்மானங்கள் வேலை நிறுத்தம், வன்முறை, சிவில் கலகம் மற்றும் பயங்கரவாத நிதியத்தின் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவிற்கு அனுப்பப்படும்.

### தொழில்நுட்ப ஆலோசனைக் குழு

வேலை நிறுத்தம், வன்முறை, சிவில் கலகம் மற்றும் பயங்கரவாத நிதியத்தின் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு, பொதுக் காப்புறுதிக் கம்பனிகளைப் பிரதிநிதிப்படுத்தும் தலைவர்களை உள்ளடக்கிய வேலை நிறுத்தம், வன்முறை, சிவில் கலகம் மற்றும் பயங்கரவாத நிதியம் தொடர்பான உபாயத் திறன் மிக்க தீர்மானம் எடுக்கும் பொருட்டு உருவாக்கப்பட்டது. தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவினால் கூட்டாக எடுக்கப்படும் தீர்மானங்கள் அங்கீகாரத்தின் பொருட்டு தே.கா.ந.நி. சபைக்கு அனுப்பி வைக்கப்படும்.

### மனித வள ஆளுகை

இயக்கவியற் கைத்தொழில் ஒன்றான இந்நிறுவனத்தில், எமது அலுவலர்களின் திறமை, நிறைவேற்றுகை, கடப்பாடு என்பன எமது வெற்றியின் படிக் கற்களாக உள்ளன என்பதை நாம் அங்கீகரிக்கின்றோம். அவர்களின் தொழில் சார் நிபுணத்துவம், புத்தாக்கத்திற்கான தயார் நிலை என்பன, எமது வர்த்தகத்தை முன்னோக்கி கொண்டு செல்ல உதவுவதுடன் உயர் தரப் பெறுபேற்றை அடைவதற்கு உபாயத் திறன் மிக்க மனித வளத் திட்டமிடல் இற்கான தேவையையும் நாம் அங்கீகரிக்கிறோம். அவ்வாறே, எமது நிபுணத்துவத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் நோக்கில் தனிநபர் விருத்தி மற்றும் நிறைவேற்றுகையை மேம்படுத்தும் பொருட்டு கவர்ச்சிகரமான நிபந்தனைகளை உருவாக்குவதையும் நோக்காகக் கொண்டுள்ளோம். மனித வளப் பிரிவானது, இந்நோக்கத்தின் பொருட்டு விரிவான கொள்ளளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தைக் கொண்டுள்ளதுடன் உள்ளக மற்றும் வெளியக வளவாளர்களைப் பயன்படுத்தி உரிய பகுதிகளில் பணியாளர்களிற்குப் பயிற்சி வழங்குதல் பற்றிய வலியுறுத்தலையும் மேற்கொள்கிறது. தொழில்நுட்ப அறிவு மற்றும் போட்டித்தன்மையைக் கட்டியெழுப்பும் பொருட்டு ஒவ்வொரு அலுவலர் மட்டத்திலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. முகாமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் எமது கனிஸ்ட முகாமையாளர்களிற்கு அவர்களின் துறைசார்

# கூட்டுரிமை ஆட்சி

வளர்ச்சியின் பொருட்டு வழங்கப்படுகிறது. எமது வர்த்தகத்தை அதன் தொலைநோக்கு மற்றும் உபாயத்திறன் நோக்கங்களுடன் இணங்க வைக்கும் நோக்கில், தே.கா.ந.நி. உறுதியான தலைமைத்துவத்தினை முன்னெடுக்கும் நோக்கில் அதன் மனித வளத் திட்டமிடலில் அதிக கவனத்தைச் செலுகின்றது. தே.கா.ந.நி. அதன் சிறப்பை மேம்படுத்தும் நோக்கில், அதன் சகல மட்டங்களிலுமுள்ள அலுவலர்களிற்கு ஏதேனும் அந்தரங்கமாக ஏற்படும் பிரச்சனைகள் பற்றி ஆராய்தலையும் ஊக்குவிக்கின்றது. அத்துடன் அது பற்றி ஆராய்தற்கு சபையால் அங்கீகரிக்கப்பட்ட செயன்முறையையும் கொண்டுள்ளது.

சம வாய்ப்புள்ள பணியாளரையே நாம் கொண்டுள்ளதாக நாம் நம்புவதுடன் எமது ஆட்சேர்ப்பு தொடர்பில் இன, மத, கலாச்சார, பால் ரீதியான பாகுபாடு காட்டப்படுவதில்லை என்பதையும் நாம் நம்புகிறோம். சகல பணியாளர்களிற்கும் பதவியுயர்வு, நன்மைகள், பயிற்சிகள், நட்ட ஈடுகள் என்பன தொடர்பில் சம சந்தர்ப்பமே வழங்கப்பட்டுள்ளன. சகல பணியாளர்களிற்கும் தமது குடும்பங்களிற்கும் விரிவுபடுத்தக் கூடிய விரிவான காப்புறுதிக் கொள்கை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இவ்வாண்டுப் பகுதியில் முறை சாரா ஒன்றுகூடல்கள், வெளிச் செல்லல்கள் என்பன பொருட்டு நலன்புரிக் குழு ஒன்றையும் கொண்டுள்ளது.

மனித வளக் கூறின் மீதான எமது கவனம், எம் வர்த்தகத்தை மேற்கொள்ளும் முக்கிய கூட்டுரிமைப் பெறுமானங்களில் ஒன்றை உருவாக்குதலாகும். எனவே நாம் எமது அலுவலர்களின் இணக்கப்பாடு மற்றும் நிலையாண்மைச் சட்டகத்தினுள் உயர் நிறைவேற்றுகையை உறுதி செய்யும் பொருட்டு விருத்தியடைந்த நிறைவேற்றுகை முறை ஒன்றைக் கொண்டுள்ளோம்.

### தகவற் தொழில்நுட்ப ஆளுகை

இவ்வாளுகை அமிசமானது. தற்போது பயன்பாட்டிலுள்ள தொழில்நுட்பத்தைச் சுற்றி உள்ளதுடன் வர்த்தக நோக்கங்களை அமைத்தலுடன் தொடர்புற்றுள்ளது. தே.கா.ந.நி., காப்புறுதி, மீள் காப்புறுதி, நிதி, முகாமைத்துவம், கணக்கீடு, பெறுகை, மனித வளம், திறைசேரி, முதலீடு ஆகிய முக்கிய தொகுதிகளைக் கொண்ட விரிவான வலையமைப்பு முறை ஒன்றைக் கொண்டுள்ளது. சகல தே.கா.ந.நி. செயன்முறைகளும் தன்னியக்கப்படுத்தப்பட்டு நாடளாவிய ரீதியில் வலையமைப்பிடப்பட்டுள்ளதைக் கவனத்திற் கொண்டு, தே.கா.ந.நி. ஆனது, முகாமை, வாடிக்கையாளரிற்கு துரிதமான, வினைத்திறன்மிக்க சேவையை வழங்கலை மேம்படுத்தும் வயிலும் வர்த்தகத்திற்குரிய இடர்களைக் குறைக்கும் வகையிலும் அதன் பயனர் கட்டுப்பாடுகள் பாதுகாப்பாக அமைக்கப்பட்டுள்ளன என்பனை உறுதி செய்தற்குப் பாடுபடுகிறது.

### முடிவுரை

கணக்காய்வுக் குழுவானது, தே.கா.ந.நி. இன் உள்ளக கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மிக்க அமுலாக்கம், அதன் சொத்துகளின் போதிய காப்பீடு, உள்ளக கணக்காய்வுத் திணைக்களம், வெளியக கணக்காய்வாளர்கள் ஆகியோரின் வினைத்திறன், நிதிக் கூற்றுகளின் உண்மைத் தன்மையை உறுதி செய்யும் கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமான பிரயோகம், இணக்கப்பாட்டுச் சட்டக முறை, தகவற் தொழில்நுட்ப முறைக் கட்டுப்பாடுகள், இவ்வாண்டுப் பகுதியில் ஏற்பட்ட இணக்கமின்மை தொடர்பில் எடுக்கப்பட்ட சீர் மற்றும் முற்காப்பு நடவடிக்கைகள் என்பன தொடர்பில் திருப்தியைக் கொண்டுள்ளது.

# தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் சபை உறுப்பினர்கள் - 2015



1 திரு. மஞ்சுள டி சில்வா

2 திரு. ட்ரவின் பிரனாந்துபிள்ளை

3 திரு. சந்தன குமாரசிங்க

4 திரு. அசேந்திர சிறிவர்தன

5 திரு. டி.பி. விமலசேன

# சபை உறுப்பினர்களின் வெட்டுமுகம்

1. திரு. மஞ்சுள டி சில்வா (தலைவர்)

மஞ்சுள டி சில்வா 06.04.2015ம் திகதி தலைவராக நியமிக்கப்பட்டார். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு தலைவராக நியமிப்பதற்கு முன்னர், அவர் எச்என்பி அசூரன்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக பணியாற்றினார்.

திரு. மஞ்சுள டி சில்வா பொருளியலில் கௌரவ கலைமானி (விசேட) பட்டத்தை கொழும்பு பல்கலைக்கழகத்தில் பெற்றிருப்பதுடன், ஐக்கிய ராஜ்ஜியத்தில் உள்ள லண்டன் வியாபாரப் பாடசாலையில் வியாபார நிர்வாக முதுமானிப் பட்டத்தைப் பெற்றுள்ளார். அத்துடன் இவர் மற்றும் FCMA (UK) மற்றும் CGMA ஆகிய தகைமைகளையும் கொண்டுள்ளார்.

இவர் அண்மையில் அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் ஆலோசகராக நியமிக்கப்பட்டார். 2015ம் ஆண்டுக்கு முன்னர் 9 ஆண்டுகளாக எச்என்பி அசூரன்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் 2 வருடங்களுக்கு மேலாக பிரதம நிறைவேற்று அலுவலராகவும் பணியாற்றினார். அத்துடன் இவர் ஈகள் என்டிபி பன்ட் மனேஜ்மன்ட் கம்பனி லிமிடட் நிறுவனத்தில் (தற்போது என்டிபி வெல்த் மனேஜ்மன்ட்) பொது முகாமையாளராகவும், ஈகள் இன்சூரன்ஸ் கோப்பரேசன் லிமிடட் (தற்போது ஏஐஏ இன்சூரன்ஸ்) நிறுவனத்தின் கூட்டிணைந்த வரிசைகள் மற்றும் மனித வளங்களுக்கான பொது முகாமையாளராகவும், அரச தொழில்முயற்சிகள் மீள்எமைப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாகவும் பணியாற்றினார்.

அத்துடன் 2016ம் ஆண்டு இவர் முகாமைத்துவ கணக்காளர்களுக்கான பட்டய நிறுவனத்தின் (CIMA) இலங்கைச் சபையின் தலைவராகவும் அதைத் தொடர்ந்து 2017 ஜுன் 20 வரை அதன் MESANA பிரந்தியத்திற்கான பிராந்திய சபையிலும் பணியாற்றினார். இவர் சிலோன் வர்த்தக சம்மேளனத்தின் குழு அங்கத்தவராக இருப்பதுடன், காப்புறுதிகள் தொடர்பான முன்னோடி குழுவின் தலைவராகவும் பணியாற்றினார்.

2. திரு. ஏ.ஆர். தேசப்பிரிய (சபை அங்கத்தவர்) -

திரு. ஏ.ஆர் தேசப்பிரிய அவர்கள் 08.04.2015ம் ஆண்டு சபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். இவர் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக பணிபுரிகின்றார்.

3. திரு. டபிள்யூ.எம்.எம்.பி.எச். குணரத்ன (சபை அங்கத்தவர்) -

திரு. டபிள்யூ.எம்.எம்.பி.எச். குணரத்ன அவர்கள் சபை அங்கத்தவராக 08.04.2015ம் திகதி நியமிக்கப்பட்டதுடன், இவர் நிதி அமைச்சின் பிரதான கணக்காளராக பணிபுரிகின்றார்.

4. திரு. ட்ரவின் பிரானாந்துபிள்ளை (சபை அங்கத்தவர்)

திரு. ட்ரவின் பிரானாந்து பிள்ளை அவர்கள் 08.04.2015ம் திகதி சபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். இவர் எச்எஸ்பிசி யில் இருந்து ஒய்வு பெறும் போது பிரதி பிரதம நிறைவேற்று அலுவலராவார். அத்துடன் இவர் தற்போது ஏஎம்டபில்யூ கப்பிடல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி நிறுனத்தின் (டுபாயைத் தளமாகக் கொண்டமைந்த ஏஎல் புட்டியம் குழுமத்தின் அங்த்துவக் கம்பனி) தலைவராகவும், ஜோசப் பிரேசர் மெமோரியல் நேர்சிங் ஹோம் தலைவராகவும், யுனியன் பாங் பிஎல்சி நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரமல்லா பணிப்பாளராகவும், டட்ச் லங்கா ட்ரெயிலர் மனியுபக்சரிங் லிமிடட் (இந்தியாவின் டாடா குழுமத்தின் அங்கத்துவக் கம்பனி) நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரமல்லா பணிப்பாளராகவும் பணியாற்றகின்றார்.

5. திரு. அசேந்திர சிறிவர்தன (சபை அங்கத்தவர்) -

திரு. அசேந்திர சிறிவர்தன 02.04.2015ம் திகதி சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். இவர் தற்போது சட்டத்தரணியாக செயலாற்றுகின்றார்.

6. திரு. ஏ.ஜே.டி. டயஸ் (சபை அங்கத்தவர்) -

திரு ஏ.ஜே.டி.டயஸ் 08.05.2015ம் திகதி சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். அத்துடன் இவர், சுகாதார மற்றும் சுதேச அமைச்சின் மேலதிக செயலாளராக பணிபுரிகின்றார்.

7. திரு. ஜே.ஏ.கே.என். ஜயதுங்க (சபை அங்கத்தவர்) -

திரு. ஜே.ஏ.கே.என். ஜயதுங்க சபை அங்கத்தவராக 08.05.2015ம் திகதி நியமிக்கப்பட்டார். இவர் பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் மேலதிக செயலாளராக பணிபுரிகின்றார்.

8. திரு. டி.பி. விமலசேன (சபை அங்கத்தவர்) -

திரு. டி.பி. விமலசேன 14.012.2015ம் திகதி சபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டதுடன், இவர் நிதி அமைச்சின் பிரதான கணக்காளராக பணிபுரிகின்றார்.

9. திரு சந்தன குமாரசிங்க (சபை அங்கத்தவர்) -

திரு சந்தன குமாரசிங்க சபை அங்கத்தவராக 14.12.2015ம் திகதி நியமிக்கப்பட்டார். இவர் பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் பணிப்பாளராக பணிபுரிகின்றார்

# கூட்டிணைந்த மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவக் குழு






1. திரு. சனத் சீ த சில்வா - பிரதம நிறைவேற்று அதிகாரி

2. திரு. அனுர சமரகோன் - தலைவர், அக்ரஹார திணைக்களம்.

3. திரு. ஆர்.எஸ். குணசேகர- தலைவர், ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுத் திணைக்களம்

4. திரு. டீ.ஜீ. லக்ஷ்மன் - தலைவர், மோட்டார் கோரிக்கைகள் திணைக்களம்

5. செல்வி. தம்மிக்க வீரகோன் - தலைவி, நிதித் திணைக்களம்

6. திரு. எம்.என்.கே. பண்டிகமகே - பதில் தலைவர், ஹம்பாந்தோட்டைக் கிளை

7. செல்வி. நிமேஷா சஹபந்து - தலைவி, நுண் காப்புறுதித் திணைக்களம்

8. செல்வி. எஸ்.ஆர்.ஜீ. உதாரி பிரியபாஷினி - தலைவி, சட்டத் திணைக்களம்

9. செல்வி. நிமாலி பெரேரா - தலைவி, கிளை மேற்பார்வைத் திணைக்களம்

10. செல்வி உபெக்ஷா ஏக்கநாயக்க - தலைவி, மோட்டார் எழுத்தாக்கத் திணைக்களம்.

11. செல்வி காயத்ரி செய்சா - தலைவி. உள்ளக கணக்காய்வுத் திணைக்களம்

12. செல்வி கயானி சியம்பலாங்கொட, நிறைவேற்றுச் செயலாளர்

13. திரு. நாமல் காஞ்சன - தலைவர், முதலீட்டுப் பிரிவு

14. திரு கவின்ர ஜயசிங்க - தலைவர், தகவல் தொழில்நுட்பத் திணைக்களம்

15. திரு. சித்தார அசங்க ஜயலத் - தலைவர், மனித வள மற்றும் நிர்வாகத் திணைக்களம்.

16. செல்வி. தேசஷானி நாணயக்கார - தலைவி, மீள்காப்புறுதித் திணைக்களம்

17. திரு. ஷாமல் சுமுது சேனாரத்ன - தலைவர், அனுராதபுரக் கிளை

18. செல்வி. ரந்திமா டிஎம் மனகே - தலைவி பொது கோரிக்கைகள் திணைக்களம்.

# இடர் முகாமைத்துவம்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் உபாயமார்க்கத்தின் மையமாக இடரை எவ்வாறு கையாளுதல் என்பது அமைந்துள்ளது. நிச்சயமற்ற ஆக்கக்கூறானது அபாயத்திற்கு வழிவகுக்கும் அதேவேளையில், வியாபாரத்திற்கு பெறுமதி சேர்க்கும் வாய்ப்பை உருவாக்குவதற்கு அது பங்களிப்பு செய்ய முடியும். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் சொத்துக்கள், நிதியியல் நிலமை மற்றும் இலாபம் என்பன உள்ளடங்கலாக அதன் இலக்கில் இருந்து எதிர்மறையான மாறுதலுக்கு வழிவகுக்கும் அல்லது வியாபாரத்திற்கு பெறுமதியைச் உருவாக்கும் காரணிகளின் ஒவ்வொரு சாத்தியமான அபிவிருத்திக்கு அல்லது நிகழ்வுக்கு தன்னுடைய வியாபாரத் தொழிற்பாட்டுக்கு இடர்களை அடையாளம் காணுதல் வேண்டும். எங்களது இடர் முகாமைத்துவ செயன்முறை, அனைத்து தனிப்பட்ட வியாபார அலகுகள் வரை, அதன் செயற்பாடுகளுடன் இணைக்கப்பட்டுள்ள இடர்களை அடையாளம் காண்பதுடன் இல்லாமல் செய்யும் நோக்கத்துடன், அதேவேளையில் எதிர்கால அபிவிருத்திக்கு சாத்தியமான சந்தர்ப்பங்களை முன்னெச்சரிக்கையாக அடையாளம் காண்பதற்காகக வழங்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் ஒவ்வொரு மட்டத்திலும், பணிப்பாளர் சபையின் இறுதிப் பொறுப்புடன், இடர் முகாமைத்துவ செயல்முறை உட்பொதிக்கப்பட்டிருக்கின்றது. இந்தக் கட்டத்தில், இடர் குறைப்பு உபாயமார்க்கமானது எவ்வாறு கண்காணிப்பது மற்றும் மீளாய்வு செய்வது எனும் வகையில் வியாபாரத் திட்டத்திற்கு மாற்றப்படும். இடர் முகாமைத்துவ செயன்முறையைக் கண்காணிக்கும் பணிகள் நிறுவனத்தின் கணக்காய்வுக் குழுவுக்கு சாட்டப்பட்டுள்ளது. இது பிரதான இடர் கொள்கைகள், இடர் அதிகாரங்கள் மற்றும் இடர் சகிப்புத்தன்மையை அடையளம் கண்டு அங்கீகரிக்கின்றது. அத்துடன் கணக்காய்வுக் குழுவின் பணியானது உட்கட்டமைப்பை மதிப்பீடு செய்தல், தனிப்பட்ட இயலுமைகள், உரிய இடர் தகவல்கள் கிடைக்கப் பெறுவதற்கான தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடலுக்கான முறைக்களைக் கண்டறிதல் வரை நீடிக்கப்பட்டுள்ளது. சுயாதீன கணக்காய்வானது ஏற்றுக்கொள்ளக்கூடிய இடரின் சட்டகத்தினுள் வினைத்திறனான செயற்பாட்டுக்கு அனைத்து இடர் செயற்முறைகளையும் உறுதிப்படுத்துகின்றது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் நிறுவனத்தினால் முகம்கொடுக்கப்படும் இடர்கள் தொடாபாக முழுமையான பார்வையை மேற்கொள்வதற்கும் இடர் அறிவித்திறனைப் பெறுவதன் நன்மைகளின் மீது உந்துசக்தியைப் பெற்றுக்கொள்வதற்கும் தொழில்முயற்சி இடர் முகாமைத்துவ மாதிரியை இணைத்தக்கொண்டுள்ளது. பங்குதாரர்களின் பெறுமதியை மேம்படுத்துவதற்கு உதவும் சிறந்த இடர் அறிவுத்திறனானது என்பது சிறந்த முறையில் கணக்காய்வு மற்றும் சபைக் குழுவுக்கு அறிவத்தலாகும்.

அறிவுத்திறனானது என்பது சிறந்த முறையில் கணக்காய்வு மற்றும் சபைக் குழுவுக்கு அறிவுறுத்தலாகும்.

உபாயமார்க்க இடர் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அரசியல், தொழில்நுட்பம், சமூக பொருளாதாரம் மற்றும் பொருளாதார அபிவிருத்தியுடன் காப்புறுதித் துறையுடன் தொடர்புடைய போட்டியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் இயக்கத்தையும் கண்காணித்து வருகின்றது.

இடர் வகைப்படுத்தல் மூன்றுவகையாகும். தடுக்கக்கூடிய இடர் வகை மிகவும் சமாளிக்கக்கூடியது மற்றும் நிறுவனத்திற்குள் இருந்து எழுகின்றது. இது இணக்க விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் மூலம் நிர்வகிக்கப்படலாம். அதேசமயம் உபாயமார்க்க மற்றும் வெளிப்புற இடர்கள் மறுபுறம் இடர்களைக் குறைப்பதற்கும் அவற்றை திறமையாக வினைத்திறனான ஆகுசெலவுடன் குறைப்பதற்கும் வேறுபட்ட அணுகுமுறை தேவைப்படுகின்றது.

### தவிர்க்கக்கூடிய இடர்பாடுகள்

**R01 – கீர்த்திக்கான இடர்பாடுகள்**

தே.கா.ந.நி. ஆனது, அதன் வாடிக்கையாளர், பங்குதாரர் மற்றும் பொதுசன அபிப்பிராயங்களை முக்கியமாகக் கவனத்திற் கொண்டு அதன் சந்தைநிலைக் கீர்த்தியைத் தக்கவைப்பதன் தேவையை ஏற்றுக்கொள்கிறது. கொள்கைகளும் செயன்முறைகளும் உரிய முறையில் தொடரப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு உறுதியான கட்டுப்பாடு, இணக்கப்பாடு என்பவற்றை முன்னிறுத்தி, வலிமையான கூட்டுப் பெறுமானங்களுடன் நேர்முறை வேலைக் கலாச்சாரம் ஒன்றை உருவாக்குதல் மற்றும் பின்பற்றுதலை நோக்கிய விதத்தில் சகல முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன

**R02 – மோசடி இடர்பாடுகள்**

தே.கா.ந.நி. வினைத்திறன் மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு முறையையும் கணக்கீட்டு முறையையும் தாபித்துள்ளது. தே.கா.ந.நி. ஆனது, மோசடிச் செயற்பாட்டு இடர் குறைக்கப்படுதலை உறுதி செய்யும் வகையில் நிறுவகத்தினுள் சகல உள்ளக கட்டுப்பாட்டு முறைகளையும் தொடர்ச்சியாக மீளாய்வு செய்கின்ற வினைத்திறன் மிக்கதொரு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவைக் கொண்டுள்ளது. முற்கூட்டிய எச்சரிக்கைச் சமிக்ஞைகளை உறுதிப்படுத்தும் தெளிவான தொடர்பாடல் அலைவரிசையுடன் கூடிய நன்கு கட்டமைக்கப்பட்ட இயங்கு செயன்முறைகளும் செயற்பாடுகளும் மிகத்தெளிவாக விளக்கப்படுகின்றன.

### உபாயத்திறன் மற்றும் இயங்குதிறன் இடர்கள்

**R03 – காப்பீட்டு இடர்கள்**

தே.கா.ந.நி. சமநிலைப்படுத்தப்பட்ட, ஏற்றுக்கொள்ளக் கூடிய இடர் மட்டத்தைப் பேணுகிறது என்பதை உறுதி செய்கிறது. இது அங்கீகாரச் செயன்முறைகள், வெளிப்படுத்துகை எல்லைகள், உள்ளடக்க மட்டுப்படுத்தல் என்பவற்றின் பிரயோக முறையில் இதனைச் செய்கிறது. இதற்கு மேலதிகமாக, இழப்பு மற்றும் பிடிமானத்தை உணரும் வகையில் தொடர்ச்சியான கண்காணிப்பும் மதிப்பாய்வும் மேற்கொள்ளப்படுகிறது. தே.கா.ந.நி. முறைசார் காப்பீட்டுச் செயன்முறையைக் கொண்டுள்ள அதே வேளை சகல வழிகாட்டல்களும் பின்பற்றப்படுகிறது என்பதை உள்ளகக் கணக்காய்வுகள் உறுதி செய்கிறது. அலுவலர்கள் காப்பீட்டையும் சரியான இடர் மட்டத்தையும் குறித்தொதுக்குதற்கான போதிய தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளுதலை உறுதி செய்யும் வகையில் உள்ளக ரீதியான பயிற்சியும் வழங்கப்படுகிறது.

**R04 – மீள்காப்புறுதி இடர்பாடுகள்**

மீளாய்வின் மீது இந்நிதியாண்டில், தே.கா.ந.நி., உயர் நிதித்தரம் மற்றும் உயர் சர்வதேசத் தரம் என்பவற்றைக் கொண்ட மீள் காப்புறுதியாளர்களிற்கு 2016 இற்கான அதன் மீள் காப்புறுதி விடயத்தை உள்ளடக்குதற்கான நியாயமான செலவைக் கொண்ட இடர் மாற்றீட்டுத் திட்டம் ஒன்றை ஆரம்பித்தது.

**R05 – போதிய ஒதுக்கீட்டு இடர்பாடுகள்**

தே.கா.ந.நி. அதன் நிதி ஒதுக்கீட்டு நிலைமை, நிலுவையிலுள்ள சந்தர்ப்பத்திலும் பொறுப்புகளை ஈடு செய்யக்கூடியதாக உள்ளதென்பதை தொடர்ச்சியாக மீளாய்வு செய்து உறுதி செய்கிறது.

**R06 – கடன் இடர்பாடுகள்**

தே.கா.ந.நி., தொடர்ச்சியாக நிறுவனங்களினதும் தனிநபர்களினதும்

# இடர் முகாமைத்துவம்

நிதி நிலையாண்மையையும் கடன்தகு நிலையையும் கண்காணித்து வருகிறது. கடன் அங்கீகாரச் செயன்முறை, வியாபாரத்தின் வகையினதும் அளவினதும் அடைப்படையில் அமைக்கப்பட்டுள்ள அதே வேளை, சகல அலுவலர்களினதும் வழிகாட்டல் பொருட்டு கடன் கொள்கை ஒன்றும் பேணப்படுகிறது. தே.கா.ந.நி. ஆனது, சகல கொள்கை தொடர்பான தவணைக் கட்டணம் தொடர்பிலும் கடுமையான கொள்கை ஒன்றைப் பேணுவதுடன் வருமதிகள் செலுத்தப்படாதவிடத்து கடும் நடவடிக்கையையும் எடுக்கின்றது.

**R07 – திரவநிலை இடர்பாடுகள்**

கோரிக்கைக் கொடுப்பனவுகள், மீள் காப்புறுதிக் கொடுப்பனவுகள், திறைசேரிக்கான நிதி மாற்றுகைகள் போன்ற ஒப்பந்தப் பிணைப்புகளை ஈடு செய்ய இயலாமை அல்லது திரவநிலை இடர்பாடுகள் என்பன மீள்வாங்கல் போன்ற வெவ்வேறு முதிர்வுகளுடன் கூடிய முதலீடுகள், வெவ்வேறு முதிர்வுகளுடன் கூடிய திறைசேரி உண்டியல்கள், வெவ்வேறு முதிர்வுகளுடன் கூடிய திறைசேரி முறிகள், கடன் பத்திரங்கள் என்பவற்றின் பன்முகப்படுத்தல்களின் ஊடாக குறைக்கப்பட்டுள்ளன.

தே.கா.ந.நி., அரச பிணைப்பொறுப்புகளில் அதன் சகல நிதியங்களையும் முதலீடு செய்வதுடன் அவற்றின் போதுமான பகுதியொன்று குறுகிய கால முதிரல் முதலீட்டிலும் மீள் கொள்வனவு உடன்படிக்கையிலும் வைத்திருக்கப்படுகின்றன. பிணைப்பொறுப்பின் முதிர்வுப் பகுப்பாய்வு, சொத்துகளுக்கும் பொறுப்புகளுக்கும் இடையில் பாரதூரமான பொருந்தாமை இல்லை என்பதை உறுதிப்படுத்துவதுடன் நிதியம் போதியளவு திரவ நிலையில் உள்ளதென்பதையும் உறுதிப்படுத்துகிறது.

**R08 – தகவற் பாதுகாப்பு முறை இடர்பாடுகள்**

முறைமை செயலிழப்பு அல்லது ஏதேனும் சைபர் தாக்குதல் காரணமாக தே.கா.ந.நி. இற்கு இழப்பு ஏற்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு அதன் சிறந்த பாதுகாப்பிற்காக தகவற் தொழில்நுட்ப உட்கட்டமைப்பிலும் தகவற் தொழில்நுட்ப கொள்கையிலும் முதலீடு செய்தலைத் தொடர்ந்தது. உள்ளக அலுவலர்கள் சரியான முறைசார் செயன்முறைகளில் தொடர்ச்சியாக பயிற்றுவிக்கப்படுவதுடன் தகவலின் இரகசியத் தன்மையையும் ஒருங்கிணைப்பையும் உறுதிப்படுத்தும் நோக்கில் கட்டுப்பாட்டுப் பொறிமுறையும் பேணப்படுகிறது.

**R09 – வர்த்தகத் தொடர்ச்சி இடர்பாடுகள்**

வர்த்தகத்தின் குறுகிய கால, நீண்ட கால தொடர்ச்சியை உறுதி செய்யும் நோக்கில், தே.கா.ந.நி., நிறுவனத்தின் அலுவலர்கள், வளங்கள் தொடர்பிலான கூட்டு இடர் மீளுகை, வியாபார மீளுகைத் திட்டங்கள் என்பன அடங்கலாக இடை நேர்வான திட்டங்களைக் கொண்டுள்ளது. இது நடவடிக்கையில் நீடித்த நிறுத்த இடர்பாடு இல்லையென்பதை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது.

**வெளியக இடர்பாடுகள்**

தே.கா.ந.நி. இடர்க் கூற்றினைத் தணிக்கக்கூடிய வழிகள் மீதும் அதன் வர்த்தகத்தின் மீது ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான தாக்கங்கள் மீதும் முன்நடவடிக்கை எடுக்கின்ற போதிலும், இவ்விடர்க்கூறானது பெருமளவில் நிறுவகக் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகவே உள்ளது.

**R10 – ஒருமுகப்படுத்தல் இடர்பாடுகள்**

அதிகரித்த இழப்புக்கான இடர் வெளிப்படுத்துகை, சொத்துகளின் போதுமானதற்ற பல்வகைமையுடன் தொடர்புபட்டதாகும். தே.கா.ந.நி. இனைப் பொறுத்தவரையில் அரச பிணைப்பொறுப்புளில் முதலிடுவதில் கவனஞ் செலுத்தப்படுகிறது. எனினும் அவை இடர்பாடற்ற உயர்தர முதலீடாக இருக்கும் எனக் கருதப்படுதற்கு இல்லை.

**R11 – உரிமைக் கோரிக்கைத் தீர்வு இடர்பாடுகள்**

மோசடி, சட்ட, தொழில்நுட்ப காரணிகளால் எழும் பிணக்கு, உரிமைக் கோரிக்கைச் செயன்முறையை பிரிப்பதிலும் உரிமைக் கோரிக்கையை அங்கீகரிப்பதிலும் ஒழுங்கு விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது.

**R12 – சந்தை இடர்பாடுகள்**

தே.கா.ந.நி. பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட தெளிவான முதலீட்டு அறிவுறுத்தல்களைக் கொண்டுள்ளது. இவ்வறிவுறுத்தற் கைநூல்கள் அதன் முதலீடுகளை எவ்வாறு வினைத்திறன் மிக்க முறையில் முகாமை செய்வதென குறித்துரைக்கின்றது. முகாமைத்துவ அறிக்கைகளும் சந்தை இடர் நிலையானளவில் குறைக்கப்பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு கிடைக்குமாறு செய்யப்பட்டுள்ளது.

**R13 – ஒழுக்காற்று, இணக்கப்பாட்டு இடர்பாடுகள்**

தே.கா.ந.நி. நிறுவனம், செயற்பணி ரீதியாக இணக்கப்பாட்டுடன் உள்ளதை உறுதிப்படுத்தும் பொருட்டு இயைபுடைய கைத்தொழில் கருத்தரங்குகளில் பங்குபற்றுதற்கு மேலதிகமாக தொடர்ச்சியாக சகல ஒழுங்குபடுத்தல் மாற்றங்களையும் அபிவிருத்திகளையும் கணிகாணிக்கிறது. அதே சமயத்தில் கொள்கைகளும் செயன்முறைகளும் பருவகால ரீதியாக அதன் உள்ளகப் பங்குதாரர்களிற்கிடையில் மீளாய்வு, கலந்துரையாடப்படுகின்றன.

**R14 – வியாபார இடர்பாடுகள்**

பகிஸ்கரிப்பு, வன்முறை, பயங்கரவாதம், சிவில் கலகம் என்பவற்றுக்கான காப்புறுதி, மோட்டார் காப்புறுதி, அக்ரஹார காப்புறுதி, இயற்கை அனர்த்தக் காப்புறுதி, மீள் காப்புறுதி போன்ற உபாயத்திறன் மிக்க வியாபார அலகுகளை பன்முப்படுத்தலின் ஊடாக வியாபார இடர் குறைக்கப்பட்டுள்ளது.

**R15 – வெளிநாட்டு நாணயமாற்று இடர்பாடுகள்**

வெளிநாட்டு நாணயமாற்றுக் கொடுக்கல் வாங்கல் இடரை ஒழிக்கும் பொருட்டு, மீள் காப்புறுதி உடன்படிக்கைகள் மீள்காப்புறுதித் தவணைக் கட்டணக் கொடுப்பனவிற்கான உள்நாட்டு நாணயப் பெறுமதியில் ஒப்பந்தமிடப்பட்டுள்ளன.

**R17 – முதலீட்டுக் கடன் இடர்பாடுகள்**

முதலீட்டுக் கடன் இடரை இழி நிலையில் பேணும் பொருட்டு திறைசேரி உண்டியல்கள், மீள் வாங்கல்கள், திறைசேரி முறிகள் என்பவற்றில் இடர்பாடற்ற முதலீட்டினை அரச வங்கிகளின் ஊடாக மாத்திரம் செய்யப்பட்டுள்ளன.

**R19 – செயற்பாட்டு இடர்பாடுகள்**

செயற்பாட்டு இடரானது, செயற்பாட்டினை கணனிப்படுத்தலின் ஊடாக குறைக்கப்படுகிறது. தே.கா.ந.நி. இன் பகிஸ்கரிப்பு, வன்முறை, பயங்கரவாதம், சிவில் கலக நிதிப் பிரிவுகளாவன, சந்தா சேகரிப்பு, உரிமைக் கோரிக்கைக் கொடுப்பனவு என்பவற்றில் ஏற்படும் வழுக்கள், முரண்பாடுகளை தணிக்கும் நோக்கில் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தால் கணக்காய்வு செய்யப்படுகின்றன. மேலும் சகல அலுவலக நடவடிக்கைகளும் வழுவற்ற கொடுக்கல் வாங்கலின் பொருட்டு கணனிப்படுத்தப்பட்டுள்ளன.

# கூட்டு சமூகப் பொறுப்புகள்

தே.கா.ந.நி. அதன் சகல பங்குதாரர்களிற்கும் நீண்ட காலப் பெறுமதியை உருவாக்குமுகமாக சமூகப் பொறுப்புவாய்ந்த நிறுவனமாக இருத்தலின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கிறது. இதன் இறுதியில் சகல மட்டத்திலும் வியாபாரம் நடத்தப்படுதலின் மீதும் அதன் முக்கிய கூட்டுப் பெறுமதியினை ஒருங்கிணைத்தலின் மீதுமான நடத்தைக் கோவையைக் கொண்டுள்ளது. இதுவே அதன் வெற்றிக்கான வழிகாட்டியாக உள்ளது. தே.கா.ந.நி. இன் தொலை நோக்கு, செயல் நோக்குடன் கூடிய நோக்கமானது, நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்கலும் சமூகத்தின் தேவையான பகுதிக்கு சேவையாற்றுதலும் ஆகும். இந்நோக்கத்திற்காக தே.கா.ந.நி. சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதற்காகப் பாடுபடுகிறது. இதனைக் கவனத்திற் கொண்டு தே.கா.ந.நி. அதன் உற்பத்திப் பெறுமான வழங்கலை மேம்படுத்துமுகமாக நிறுவனங்களுடன் கூட்டிணைந்துள்ளது.

இவ்வருடத்தின் போது, தே.கா.ந.நி. அதன் அக்ரஹார திட்டத்தின் கீழ் சகல அரச துறைப் பணியாளர்களிற்கும் சிறந்த சுகாதார சேவையினை கழிவு விலையில் வழங்கும் நோக்கில் பல்வேறு பிரசித்த வைத்தியசாலைகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக தே.கா.ந.நி. இன் நலன்புரிச் சங்கமானது, மலிபொடவிலுள்ள திக்கெல்லகந்த வித்தியாலயத்திலுள்ள மாணவர்களிற்கு அவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தும் நோக்கில் பாடசாலை உபகரணங்களையும் கட்டடமொன்றின் புனரமைப்பையும் மேற்கொண்டது. நாம் எமது அடிப்படை நிலைகளான மக்கள், இலாபம் மற்றும் எமது கோளகம் என்பவற்றின் மீது முக்கிய கவனஞ் செலுத்தி வருகிறோம்.

# பணிப்பாளர்களின் அறிக்கை

தே.கா.ந.நி. ஆனது நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பின்வரும் 7 உறுப்பினர்களைக் கொண்ட சபை ஒன்றினால் நிர்வகிக்கப்படுகிறது.

1) நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சிலுள்ள அலுவலர் ஒருவர்

2) நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் பிரதம கணக்காளர்

3) சுகாதார விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் அலுவலர் ஒருவர்

4) அரச நிர்வாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் அலுவலர் ஒருவர்

5) நிதி வங்கியியல், காப்புறுதி முகாமைத்துவம், சட்டம் ஆகிய துறைகளில் தகைமையுடைய அல்லது நிபுணத்துவமுடையவர்களிலிருந்து அமைச்சரால் பெயர் குறிப்பீடு செய்யப்படும் மூவர்

அமைச்சர் இவர்களில் ஒருவரை தலைவராக நியமிக்கும் தகைமையுடையவராவார். இச்சட்ட நியதிகளின் கீழ், சபையின் சகல உறுப்பினர்களும் நியமனத் திகதியிலிருந்து ஐந்து வருட காலத்திற்கு பதவி வகித்தல் வேண்டும். 2015 காலப்பகுதியில் 7 சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன் கூட்டத்திற்கு சிறந்த வரவுப் பதிவுகள் பேணப்பட்டிருந்தன. சபைக் கூட்டங்களில் சபை உறுப்பினர்களின் வரவு விபரம் வருமாறு:

| சபை உறுப்பினர்கள் | வரவு | | | | | | | பணிப்பாளராக நியமனம் பெற்ற திகதி | பதிவுத் திகதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஏப். | மே | யூன் | யூலை | ஒக். | நவம். | டிசம். | | |
| திரு. மஞ்சுள டி சில்வா | √ | √ | √ | √ | √ | √ | √ | 06/04/2015 | |
| திரு. ஏ.ஆர்.தேசப்பிரிய | √ | √ | √ | √ | x | √ | √ | 08/04/2015 | |
| திரு. டபி.எம்.எம்.பி.குணரத்ன | √ | √ | √ | √ | √ | பொ/அ | பொ/அ | 08/04/2015 | 01/10/2015 |
| திரு. ரவின் பெர்னாண்டோபுள்ளே | √ | √ | x | x | √ | √ | √ | 08/04/2015 | |
| திரு. அசேந்திர சிறிவர்தன | √ | √ | √ | √ | √ | √ | √ | 02/04/2015 | |
| திரு. ஏ.ஜே.டி.டயஸ் | பொ/அ | பொ/அ | √ | √ | √ | √ | √ | 08/05/2015 | |
| திரு. ஜே.ஏ.கே.ஏ.என்.ஜயதுங்க | பொ/அ | பொ/அ | பொ/அ | √ | √ | பொ/அ | பொ/அ | 08/05/2015 | 01/10/2015 |
| திரு. டி.பி.விமலசேன | பொ/அ | பொ/அ | பொ/அ | பொ/அ | பொ/அ | பொ/அ | √ | 14/12/2015 | |
| திரு. சந்தான குமாரசிங்ஹ | பொ/அ | பொ/அ | பொ/அ | பொ/அ | பொ/அ | பொ/அ | √ | 14/12/2015 | |

அங்கீரிக்கப்பட்ட வியாபாரத் திட்டத்தின் அடிப்படையிலும் நிறுவனம் பெற்றுக்கொண்ட நிதி, பௌதீக இலக்குகளின் அடிப்படையிலும் சரியான முறையில் வியாபாரம் நடத்தப்படுகிறது என்பதை உறுதி செய்யும் பொருட்டு நிறுவனத்தின் பங்குதாரர்களிற்கு சபை பொறுப்புக் கூறத்தக்கதாக உள்ளது.

### முதன்மை நடவடிக்கைகளும் வியாபார மீளாய்வுகளும்

2015 இல் தே.கா.ந.நி. இன் முதன்மைச் செயற்பாடுகளாவன, அரச அலுவலர்களிற்கான மருத்துவக் காப்புறுதித் திட்டம் (அக்ரஹார), கட்டாய மீள் காப்புறுதித் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர்களின் காப்புறுதித் திட்டம், மோட்டார் வாகன காப்புறுதித் திட்டம் (அரசுக்குச் சொந்தமான வாகனங்களுக்கு), பொதுக் காப்புறுதித் திட்டங்கள், விவசாயக் கடன் காப்புறுதித் திட்டம், பகிஸ்கரிப்பு, சிவில் கலகம், வன்முறை மற்றும் பயங்கரவாத நிதிய முகாமை என்பவற்றை அமுல்படுத்துதலாகும்.

### நிதிப் பெறுபேறுகள்

2015 இல் தே.கா.ந.நி. முழுமொத்த எழுத்து மூலமான தவணைப்பணமாக ரூபா 5,062 மில்லியன் ஆகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. 2015 இல் விவசாயிகளிடமிருந்தான பயிர் காப்புறுதித் தவணைப்பண நிறுத்தம் காரணமாக 2014 இல் இருந்த முழுமொத்த எழுத்து மூலமான தவணைப்பணமான ரூபா 5,842 மில்லியன் இல் சிறிது வீழ்ச்சி காணப்பட்டது. 2015 இல் வரியாக ரூபா 4,303 மில்லியனைப் பெற்ற பின் தே.கா.ந.நி. இலாபமடைந்தது.

### பணியாளர்கள்

2015 இறுதியில் இருந்த பணியாளரின் மொத்த எண்ணிக்கை 186 ஆகும்.

### கணக்காய்வாளர்கள்

சபையின் 2015 இற்கான நிதிக் கூற்றானது, 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்ட நியதிளில் கணக்காய்வாளர் அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்டது.

# பணிப்பாளர்களின் அறிக்கை

### கணக்காய்வுக் குழு

2015 இல் கணக்காய்வுக் குழுவானது, திரு.ஏ. ஆர். தேசப்பிரிய (தலைவர்) (பணிப்பாளர் நாயகம் - தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் - 2015), திரு.ரி.ஆர். பெர்னாண்டோ புள்ளே, திரு. அசேந்திர சிறிவர்தன ஆகிய மூன்று நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது.

கணக்காய்வாளர் அதிபதித் திணைக்களத்திலிருந்து தே.கா.ந.நி. இற்கு நியமிக்கப்பட்ட கணக்காய்வு அத்தியட்சகர் ஒருவரும் குழுவின் அழைப்பின் பேரில் அவதானிப்பாளராகக் கூட்டத்திற் கலந்து கொண்டார். 2015 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவுற்ற நிதியாண்டில், மூன்று குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. குழுக் கூட்ட விபரங்கள் பதிவு செய்யப்பட்டதுடன் அவை பணிப்பாளர் சபைக்கு கிரமமாக அறிக்கையிடப்பட்டன.

உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு கணக்காய்வுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. 2015 இல் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களங்கள் மற்றும் வன்முறை, பயங்கரவாதம், கலகம் தொடர்பான நிதியத்தின் கணக்காய்வு என்பன அடங்கலான உள்ளகக் கணக்காய்வுப் பணிகள் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டன.

### கூட்டு ஆளுகை

கூட்டு ஆளுகைப் பழக்கங்கள், நல்லாட்சி மற்றும் கூட்டாட்சிப் பழக்கங்களிற்கான அரச தொழில் முயற்சி வழிகாட்டல்கள், இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வெளியிடப்படும் சிறந்த பழக்கங்கள் என்பவற்றின் உரிய பகுதிகளைக் கவனத்திற் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**மஞ்சுள டி சில்வா**
**தலைவர்**

**உதாரி ரன்ஹொட்டிகமகே**
**சபையின் செயலாளர்**

2017 மே 23 ஆம் திகதி
கொழும்பு

# கணக்காய்வுக் குழு அறிக்கை

2015 இல் கணக்காய்வுக் குழுவானது, திரு. ஏ. ஆர். தேசப்பிரிய (பணிப்பாளர் நாயகம் - தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்), திரு. ரவின் பெர்னாண்டோ புள்ளே, திரு. அசேந்திர சிறிவர்தன ஆகிய மூன்று நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது. கணக்காய்வாளர் அதிபதித் திணைக்களத்திலிருந்து தே.கா.ந.நி. இற்கு நியமிக்கப்பட்ட கணக்காய்வு அத்தியட்சகர் ஒருவரும் குழுவின் அழைப்பின் பேரில் அவதானிப்பாளராகக் கூட்டத்திற் கலந்து கொண்டார்.

**கணக்காய்வின் நோக்கெல்லை**

2015 இல் கணக்காய்வுக் குழுவானது, பின்வரும் கணக்காய்வு நோக்கெல்லைகள் பொருட்டு ஸ்தாபிக்கப்பட்டது.

1. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுப் பொறுப்புகளைத் தீர்மானித்தலும் வருடாந்த கணக்காய்வுத் திட்டங்களை மீளாய்தலும்
2. நிறுவனத்தின் சகல செயற்பாடுகளுக்கும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை மீளாய்தலும் மதிப்பாய்வு செய்தலும்
3. செலவு வினைத்திறன் பொருட்டும் வீண் செலவை நீக்கும் பொருட்டும் கிரமமான இடைவேளையில் நிறைவேற்றுகையை மீளாய்தல்
4. கணக்காய்வாளர் அதிபதியினதும்/ வெளியக கணக்காய்வாளரினதும் முகாமைக் கடிதங்களைத் தொடர்ந்துறுதலும் வெளியகக் கணக்காய்வாளருடன் தொடர்பைப் பேணுதலும்
5. நிலையியற் சட்டங்கள், ஒழுங்கு விதிகள், சுற்றறிக்கைகள் என்பவற்றுடன் இணங்கிச் செல்வதை உறுதிப்படுத்துதல்
6. கணக்கீட்டுத் தரங்களுடன் இணக்கமாவதை உறுதிப்படுத்தும் வகையில் நிதிக் கூற்றுகளை மீளாய்வு செய்தல்
7. தீர்வு நடவடிக்கை பொருட்டு உள்ளகக் கணக்காய்வு, வெளியகக் கணக்காய்வு அறிக்கைகள், முகாமைக் கடிதங்கள் என்பவற்றை மீளாய்வு செய்தல்
8. அரச தொழில் முயற்சி சம்பந்தமான குழுவின் பணிப்புரைகள்/பரிந்துரைகளை அமுல்படுத்தலினை மீளாய்வு செய்தல்

**குழுக் கூட்டங்கள்**

குழுக் கூட்ட விபரங்கள் பதிவு செய்யப்பட்டதுடன் அவை பணிப்பாளர் சபைக்கு கிரமமாக அறிக்கையிடப்பட்டன. 2015 இல் மூன்று கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றன.

**உள்ளகக் கணக்காய்வு**

தே.கா.ந.நி. தனது சொந்த உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தைக் கொண்டுள்ளது. உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு கணக்காய்வுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. அத்துடன் குழு, உள்ளகக் கணக்காய்வினையும் பரிசீலனைப் பணிகளையும் கிரமமாகக் கண்காணித்து மீளாய்வு செய்து வருகிறது.

**வெளியகக் கணக்காய்வு**

வெளியகக் கணக்காய்வு முகாமைக் கடிதங்களையும் கணக்காய்வினையும் மீளாய்வு செய்து பொருத்தமான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு முகாமைத்துவத்திற்கு பணிப்புரை வழங்குகிறது.

**ஏ. ஆர். தேசப்பிரிய**
**தலைவர்**
**கணக்காய்வுக் குழு**

# சுயாதீன கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. } டீஆர்ஈ/சீ/என்ஐடீஎப்/எப்ஏ/2015

මබේ අංකය
உமது இல.
Your No. }

දිනය
திகதி
Date } 2017 ஏப்ரல் 18

தலைவர்,
தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்,

**தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 17 பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டிருந்தன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதிஅதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று நிதியத்தின் தலைவருக்கு 2016 ஒக்டோபர் 28 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவதம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

# சுயாதீன கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

# சுயாதீன கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

**1.4 முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியான அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் நிறுவனத்தினால் நியமம் ஒன்றின் மூலம் தேவைப்படும் மற்றும் அல்லது அங்கீகாரம் வழங்கியிருந்த சந்தர்ப்பம் தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அல்லது வருமானம் மற்றும் செலவுகளை பதிலீடு செய்யக் கூடாது என கூறியிருந்த போதிலும் பல வருட காலமாக காணப்படும் இனங்காண முடியாதிருந்த பெற வேண்டிய பெறுமதி கூட்டிய வரி (வெட்) – மோட்டார் மற்றும் செலுத்த வேண்டிய பெறுமதி கூட்டிய வரி - மோட்டார் மீதிகளை ஒன்றிற்கு ஒன்று பதிலீடு செய்த பின்னர் மேலும் மீதியாகக் காணப்பட்ட ரூபா 8,452,926 தொகையான மீதியை செலுத்த வேண்டிய பெறுமதி கூட்டிய வரி – மோட்டார் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆண்டின் போது கணக்காய்வினால் சுட்டிக் காட்டியிருந்த 2010 ஆண்டு முதல் 2012 ஆண்டு வரையான காலப்பகுதி வரை காணப்படும் இனங்காண

# சுயாதீன கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

முடியாதிருந்த 04 கணக்குகளின் கூட்டுத்தொகையாகிய ரூபா 1,860,990 தொகை மற்றும் கூட்டுத்தொகை ரூபா 3,385,401 தொகைக்கான வேறு 09 கணக்குகளின் மீதிகள் வரைவு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது தொங்கல் கணக்கொன்றிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் அம் மீதிகளை தீர்க்காமல் இறுதி நிதிக்கூற்றுக்களின் மூலம் தொங்கல் கணக்கில் இருந்து மீண்டும் முந்திய கணக்குகளுக்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நிதியத்தின் பிரிவுகளிடையே பெற வேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகள் என குறிப்பிடப்பட்டிருந்த 04 கணக்குகளின் தேறிய மீதியாகிய ரூபா 4,668,866 தொகையினை இனங்காணாமலும் மற்றும் தீர்க்கப்படாமலும் இறுதி நிதிக்கூற்றுக்களில் தடுத்து வைக்கப்பட்ட உழைப்புகளுக்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(இ) நிதியத்தின் கீழ் செயற்படும் பணி பகிஷ்கரிப்பு, கிளர்ச்சிக் குழப்பங்கள், சிவில் போராட்டங்கள் ஆகிய பயங்கரவாத நிதியப் (SRCC & TR) பிரிவில் இருந்து 2014 ஆம் ஆண்டின் போது நிதியத்திற்கு கிடைக்க வேண்டியவை என காட்டப்பட்டிருந்த ரூபா 2,489,103 தொகையான பதவியணியினர் கடன் மீதி, மீளாய்வாண்டின் போது திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களில் பிழையான முறையில் பெற வேண்டிய தவணைப் பண வருமானம் என காட்டப்பட்டிருந்தது.

(ஈ) நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 03 இன் கீழ் கடன்பத்திரத்திற்கான வட்டி வருமானத்தில் 2010 முதல் 2014 வரையான ஆண்டுகள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 46,121,820 தொகையான தடுத்து வைத்தல் வரியினை முறையான அங்கீகாரம் இன்றி 2015 ஆண்டிற்கான திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களில் வருமான வரியில் இருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 15 இன் கீழ் ஏனைய நிதிப் பொறுப்புக்களின் கீழ் உட்படுத்தியிருந்த அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கியிருந்த மோட்டார் சைக்கிள் காப்புறுதிக்கான தவணைப் பணங்கள் முற்பணமாக கிடைத்திருந்தவற்றின் கூட்டுத்தொகை ரூபா 71,632,037 தொகையில் ரூபா 29,328,516 தொகையினை நிதியத்தின் வருமானம் ஒன்றென இனங்காண்பதற்காக இது வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

# சுயாதீன கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

AGDSL
විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கு எதிரே காட்டப்பட்டிருக்கும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்பட்டிருக்காத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய தவணைப் பண வருமானங்கள் | 1,043,806,532 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் |
| (ஆ) | ஏனைய நிதிச் சொத்துக்கள் | 32,307,438 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் |
| (இ) | ஏனைய நிதிப் பொறுப்புக்கள் | 193,756,079 | |
| (ஈ) | பெற வேண்டிய இன்வொயிஸ்கள் மற்றும் செலுத்த வேண்டிய கடன் அட்டைகள் இரத்துச் செய்தல் | 92,421,039 | அங்கீகாரம் |

**2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 10 திகதி DFD/Circular/2014/03 ஆம் இலக்க நிதி மற்றும் திட்டமிடல் சுற்றறிக்கையின் மூலம் 2014 பெரும் போகத்தில் இருந்து பயிர்செய்கை காப்புறுதியை செயற்படுத்துவதற்காக விவசாய மற்றும் கமநலக் காப்புறுதி சபைக்கு சாட்டப்பட்டிருந்தது. எனினும் பெரும் போகத்தின் போது விவசாயிகளிடம் அறவீடு செய்யப்பட்டிருந்த தவணைப் பணங்கள் கமநல மத்திய நிலையங்களினால் நிதியத்தின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அவ்வாறு செலவு வைக்கப்பட்டிருந்த தவணைப் பணத்தில் ரூபா 42,520,846 தொகை மதிப்பீடு செய்யப்பட்டு அப்பணம் விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபைக்குத் தீர்க்கப்பட வேண்டும் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவற்றில் கணக்காய்வுத் திகதியாகிய 2016 ஜூன் 30 திகதி வரை ரூபா 4,425,709 தொகை மாத்திரமே தீர்க்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், இந்தக் காப்புறுதித் திட்டம் தற்போது நிதியத்திற்கு உரித்தில்லாவிடினும் குறிப்பிட்ட தவணைப் பணத்தை நிதியத்திற்கு பெற்றுக்கொள்ளல் மற்றும் அவற்றின் மூலம் கோரிக்கை கொடுப்பனவுகள் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு சாட்டப்படாமல் தொடர்ந்தும் இது தொடர்பான விடயங்கள் மேற்கொள்ளல் கணக்காய்வில் கேள்விக்குறியாக உள்ளது.

# சுயாதீன கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

(ஆ) காப்புறுதி கம்பனிகளினால் வேலை நிறுத்தங்கள், கிளர்ச்சிகள், குழப்பங்கள், சிவில் போராட்டங்களுக்காக செலுத்தப்படுகின்ற தவணைப் பணங்கள் பல்வேறு காரணங்கள் மீது திருப்பி கோருவதாகவும் நிதியம் இந்த கோரிக்கைகள் மீது கவனம் செலுத்துவதற்காக குழு (Working Committee) ஒன்றிற்கு சமர்ப்பிக்கப்படுவதாகவும் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டதுடன் குழுவினால் அவ்வாறு திருப்பி செலுத்துவதற்காக அங்கீகாரம் வழங்கியிருந்த ரூபா 14,482,746 தொகையினைத் தீர்ப்பதற்காக கணக்காய்வுத் திகதி வரையும் நிதியம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) வேலை நிறுத்தங்கள், குழப்பங்கள், கிளர்ச்சிகள், சிவில் போராட்டங்கள், பயங்கரவாத நிதியத்துடன் தொடர்புடைய கோரிக்கைகள் கொடுப்பனவு செயல் முறையில் 3 ஆம் கட்டம் பிரிவு (VII) இன் பிரகாரம், மோட்டார் வாகன கோரிக்கைகள் கவனம் மூலம் மோட்டார் XL ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு கோரிக்கைக்காக மேலதிக கோரிக்கைகள் மீளளிப்புக்கள் வருடாந்தம் ரூபா 10 மில்லியன் தொகை ஆகக் காணப்பட்டதுடன், அந்த ரூபா 10 மில்லியனை விஞ்சிய தொழிநுட்ப ஆலோசனை குழுவின் அங்கீகாரமும் கிடைத்திருந்த போதிலும் குறிப்பிட்ட நிறுவனத்தினால் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையால் தீர்க்கப்படாதிருந்த் ரூபா 36,376,284 தொகையான கோரிக்கைகள் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருந்தன. இந்தப் பெறுமதிகளில் ரூபா 24,966,409 தொகை மூன்று வருடங்களை விட மிகையான காலத்தைக் கொண்ட மீதிகளைக் கொண்டிருந்தன.

(ஈ) மீள்காப்புறுதி பிரிவின் பெற வேண்டிய தவணைப் பண வருமானத்தில் அடங்கியிருந்த 08 காப்புறுதி கம்பனிகளில் மற்றும் 05 இல் இருந்து கிடைக்க வேண்டியிருந்த போதிலும் மூன்று வருடங்களை விஞ்சியுள்ள முறையே ரூபா 78,752,260 தொகை பெறுமதியான வரவு மற்றும் ரூபா 48,092,753 தொகை பெறுமதியான செலவு மீதிகளைத் தீர்ப்பதற்காக நிதியம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**விளக்களமளிக்கப்படாத வித்தியாசங்கள்**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஊழியர் இடர் கடன் கணக்கு மற்றும் பட்டோலைகள் இடையே ரூபா 1,442,422 தொகையான வித்தியாசங்கள் இருந்தன.

# சுயாதீன கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழிலை முறைப் படுத்தும் சட்டத்தின் 49 ஆம் பிரிவு | ஒவ்வொரு காப்புறுதி செய்வோரினாலும் காப்புறுதி செய்வோரின் தொழில் தொடர்பாக சான்றுபடுத்திய அறிக்கையின் பிரதி ஒன்று மற்றும் குறிப்பிட்ட கருமத்திற்காக தயாரிக்கப்படும் ஏதேனும் தகவல்கள் அடங்கிய காலாண்டு தவணை அறிக்கைகள் இலங்கை காப்புறுதி சபைக்கு வழங்கப்பட வேண்டும். எனினும், நிதியத்தினால் 2015 ஆண்டின் போது அவ் அறிக்கைகள் அல்லது இணக்கச் சான்றிதழ்கள் (Compliance Certification) சபைக்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் நிதிப் பிரமாணக் கோவை | |
| | நிதிப் பிரமாணம் 135 | அரச நிறுவனமொன்றினால் கொடுப்பனவு மேற்கொள்வதற்காக அதிகார கையளிப்பு தொடர்பாக எல்லைகள் விதிக்கப்பட்டு பணிப்பாளர் சபையினால் குறிப்பிட்ட அதிகார வரையறை அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அதனை வருடாவருடம் புதுப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதியத்தினால் தற்போது பயன்படுத்துவது 2012 மார்ச் 14 திகதி பணிப்பாளர் சபை பத்திர இலக்கம் 77-04 இன் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த அதிகார வரையறைகள் என அவதானிக்கப்பட்டது. |
| (இ) | 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14 ஆம் அத்தியாயம் | அங்கீகாரத்திற்காக திறைசேரிச் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதியத்தின் நிருவாக கைநூலில் திருத்தம் செய்யப்பட்டு மீண்டும் சமர்ப்பிக்கும் படி 2015 ஆண்டின் போது சபைக்கு அறிவித்திருந்த போதிலும் அதற்காக 2016 ஜுன் வரை பதில் அளித்திருக்கவில்லை. |

# சுயாதீன கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

(ஈ) 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ2/2015ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

வீட்டுத் தொலைபேசிகள், கையடக்கத் தொலைபேசிகள் அல்லது இணையத்தள வசதிகளை பெற்றுக்கொள்ளும் போது கொள்வனவு செய்வதற்கு தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் துணைக் கருவிகளுக்காக மேற்கொள்வதற்கு நேரிடும் கிரயத்தை குறிப்பிட்ட உத்தியோகத்தரினாலே பொறுப்பேற்கப்பட வேண்டும் என குறிப்பிட்டிருந்த போதிலும் 2015 ஆண்டின் போது ரூபா 562,609 பெறுமதியான தொகை 18 கையடக்கத் தொலைபேசிகளுக்காக நிதியத்தின் பணம் செலவிடப்பட்டிருந்தது. இதற்காக தேவையான மாதிரிகளைத் தீர்மானித்து கூறுவிலைகள் கோரல் மேற்கொள்ளப்படுவதற்கு பதிலாக ஒவ்வொரு உத்தியோகத்தர்களினாலும் விண்ணப்பித்திருந்தவாறு கையடக்கத் தொலைபேசிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததெனவும் ஒவ்வொரு பதவிகளுக்கும் வழங்கப்பட வேண்டிய தொலைபேசிகளின் விலைகளின் வரையறை தீர்மானிக்கப்படாமல் கொள்வனவு செய்தல் நடைபெற்றிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 4,303,324,331 தொகை மிகையொன்றாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,582,655,586 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 279,331,255 தொகைக்கான வீழ்ச்சியொன்று காணப்பட்டது. தேறிய நலன்கள் மற்றும் கோரிக்கைகள் செலுத்துதல் மற்றும் பதிவழித்தல் உரித்தக்கல் செலவுகள் முறையே ரூபா 853,870,734 தொகையினால் மற்றும் ரூபா 251,862,336 தொகையினால் அதிகரித்தல் மற்றும் மொத்தத் தவணைப் பண வருமானம் ரூபா 84,142,667 தொகையினால் குறைவடைதல் மீளாய்வாண்டிற்கான பின்னடைவிற்கு முக்கியமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டில் மற்றும் கடந்த 04 வருடங்களின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது 2012 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை வரியின் பின்னரான இலாபம் முறையே அதிகரித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அது பின்னடைவொன்றிற்கு உள்ளாகியிருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியங்கள்,

# சுயாதீன கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு மற்றும் திரண்ட நிதியத்திற்கு செலவு வைத்தல் என்பவற்றை கவனத்தில் எடுக்கும் போது நிதியத்தின் பங்களிப்பு 2013 ஆண்டின் போது தீவிர அதிகரிப்பு ஒன்றினை காட்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது அது பின்னடைவு ஒன்றிற்கு ஆளாகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 12(அ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் குறிக்கோளின் படி சபையினால் செயற்படுத்தப்படும் பங்களிப்புக் காப்புறுதி திட்டத்தின் மூலம், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு, எதிர்பாராத சுகாதார ஆபத்துகள், தனிப்பட்ட அவசர விபத்துக்கள் மற்றும் ஆதன சேதங்கள் தொடர்பாக-

(i) அரசாங்க உத்தியோகத்தர்கள், மாகாண அரசாங்க சேவை உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் அரச சேவையில் இருந்து, மாகாண அரசாங்க சேவையில் இருந்து மற்றும் உள்ளூராட்சி சேவையில் இருந்து ஓய்வுபெற்று, சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் அரசாங்கத்தில் இருந்து மாகாண சபையிலிருந்து அல்லது உள்ளூராட்சி சேவையில் இருந்து தற்போது ஓய்வூதியம் பெறும் நபர்களுக்காக.

(ii) 1995 இன் 30 ஆம் இலக்க இலங்கை சமூர்த்தி அதிகாரசபை சட்டத்திற்கு இணங்க சமூர்த்தி நலன்பெறுவோர் மற்றும் அவர்களின் குடும்பங்கத்தவர்களுக்காக.

(iii) விவசாயிகள், மீனவர்கள் மற்றும் சுய தொழிலில் ஈடுபடும் நபர்களுக்காக.

(iv) சபையின் விதப்புரையின் பிரகாரம் அமைச்சரினால் காலத்திற்கு காலம் இணங்காணக் கூடிய தேவையுடைய நபர்கள் அல்லது நபர்களின் குழுக்களுக்காக, நலன்கள் மற்றும் பாதுகாப்பு வழங்கள்

மேற்கூறிய குறிக்கோள்களுக்காக நிறைவேற்றிக்கொள்ளல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிச் சட்டத்தின் பிரகாரம், நிதியம் உருவாக்கப்பட்ட முக்கிய குறிக்கோள்களில், சமூகத்தில் மிகவும் கூடிய ஆபத்துக்களுக்கு முகங்கொடுக்கப்படும் சமூர்த்தி

# சுயாதீன கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

நலன்பெறுவோர்களுக்காக அரசாங்கத்தினால் நலன்கள் வழங்கும் முறை மற்றும் காப்புறுதி திட்டத்தை செயற்படுத்தல் உட்பட்டிருந்த போதிலும் சமூர்த்தி உதவி பெறுவோர்களுக்காக காப்புறுதி நிகழ்ச்சித் திட்டம் ஒன்று தயாரித்துக் கொண்டிருப்பதாக முன்னைய ஆண்டின் போது கணக்காய்விற்கு அறிவித்திருந்த போதிலும் இது வரை அவை செயற்படு நிலைமையில் காணப்படவில்லை.

(ஆ) காப்புறுதி கம்பனிகளினால் மீள் காப்புறுதிக் கட்டணமாக 30 சதவீதம் ஒதுக்குவதற்காக குறிப்பிட்ட நிதியத்தினால் வழிகாட்டல் ஒன்று அபிவிருத்தி செய்து செயற்படுத்துவதற்காக எதிர்பார்த்திருந்த போதிலும் அக் கோவை 2016 செப்தம்பர் மாதம் வரை செயற்படும் நிலைக்கு ஆக்கியிருக்கவில்லை.

(இ) 2015 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நுகர்வோர் உள்ளங்களை கவரும் நட்டஈடு செலுத்தும் செயற்பாட்டின் ஊடாக மீள் காப்புறுதி உரிமையை செலுத்துவது தொடர்பாக காப்புறுதி கம்பனிகளுக்கு நிதியத்தின் இணையத்தளத்தின் மூலம் பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருந்தன. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் அதனோடு தொடர்புடைய வரைபு வழிகாட்டலில் அடங்கியிருந்தவாறு காப்புறுதி கம்பனிகள் காலாண்டு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்திருந்ததால் ரூபா 50 மில்லியன் மற்றும் அதனை மிகைத்த கோரிக்கைகளுக்காக மாத்திரம் ஆவணங்கள் சமர்ப்பிப்பதற்கு செயல்முறை ஒன்று அறிமுகப்படுத்தியிருந்த போதிலும் வழிகாட்டல் 2015 ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்டிருக்காமையால் அது கணக்காய்வுத் திகதியாகிய 2016 அக்தோபர் 08 திகதி வரையும் செயற்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 ஆண்டின் போது செயற்திறனுள்ள மற்றும் ஆக்கபூர்வமான வருமானம் சேகரிக்கும் பொறிமுறையொன்று தயாரிப்பதற்காக திட்டமிட்டிருந்த போதிலும் அதற்காக வரைபு வழிகாட்டி அங்கீகரிக்கப்படாமையால் அது செயற்பட்டிருக்கவில்லை.

(உ) மீள்காப்புறுதி, தவணைப் பண வருமானம், கோரிக்கைக் கொடுப்பனவுகள் சுயமாக இயங்குவது மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்ப்பார்த்திருந்த போதிலும் அந்த விடயத்தை பூர்த்தி செய்வதற்காக இயலாது போன காரணத்தால் கணக்காய்வுத் திகதியாகிய 2016 செப்தம்பர் 19 வரையும் மீள்காப்புறுதிப் பிரிவின் மாதாந்த அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

# சுயாதீன கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

**(ஊ) அக்கிரஹார காப்புறுதித் திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவை உத்தியோகத்தர்களுக்கு அதிகமான நலன்களை வழங்கும் குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்டிருந்த அக்கிரஹார காப்புறுதி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு 10 வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு சொந்தமாக ஒவ்வொரு அங்கத்தவர்களின் விவரங்கள் (மாதாந்தப் பங்களிப்பு தொகை அறவீடுகளும் உட்பட) அடங்கிய தரவு முறைமை ஒன்று (Data Base) பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) குறிப்பிட்ட அரச நிறுவனத்தினால் அனுப்பியிருந்த மாதாந்த மொத்த நலன்களின் பெறுமதியை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு அங்கத்தவர்களுக்கு நலன்கள் செலுத்தப்படுகின்றன என அவதானிக்கப்பட்டதுடன் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது திறைசேரியின் 06 திணைக்களங்களைச் சேர்ந்த 38 உத்தியோகத்தர்களில் 21 பேர் இலத்திரனியல் அட்டை நலன்பொறுவோர்கள் என அல்லது பதிவு செய்யப்பட்ட அங்கத்துவத்தை பெற்றுக்கொண்டிருக்கவில்லை என நிதியத்தின் கணனித் தகவல்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது.

(iii) அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றம் பெற்று வேறு ஒரு திணைக்களத்திற்கு/ நிறுவனத்திற்கு மாற்றம் பெற்றுச் சென்ற பின்னர் நிதியம் அது தொடர்பாக அறியாமையும் அந்த நிலைமையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக குறிப்பிட்ட அறிக்கைகள் அல்லது இடமாற்றம் தொடர்பாக அறிவித்தல் பெற்றுக்கொள்ளும் முறைமை ஒன்றினை செயற்படுத்துவதற்காக நிதியத்திற்கு கணக்காய்வுத் திகதியாகிய 2016 திசெம்பர் 31 திகதி வரை முடியாதிருந்தது.

(iv) 2016 மே முதல் ஜூன் வரையான காலப் பகுதியில் தனியார் கணக்காய்வுக் கம்பனி ஒன்றினால் மேற்கொள்ளப்பட்டிருந்த முறைமை கணக்காய்வின் பிரகாரம், அங்கத்தவர்களின் பங்களிப்பு கிடைத்திருந்ததற்காக உறுதிப்படுத்தும் முறைமை ஒன்று காணப்படாமையால் அக்கரஹார பங்களிப்பு பெற்றிருக்காத அங்கத்தவர்களுக்கும் நலன்கள் செலுத்தும் ஆபத்திற்கு ஆளாகும் நிலைமை காணப்பட்டதெனவும், பதிவு செய்யப்பட்ட மற்றும்

# சுயாதீன கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

உட்படுத்தப்படும் தரவுகளின் நம்பகத்தகு தன்மை குறைந்த நிலையில் காணப்பட்டதெனவும், இரத்துச் செய்துள்ள கோரிக்கைகள் மீண்டும் அங்கீகாரம் ஏதும் பெற்றுக்கொள்ளாமல் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கக் கூடியதாக இருந்தது மற்றும் அங்கத்தவர்களின் தரவுகள் நாளது வரையானவையாகக் காணப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது.

**4.2 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் நிதியத்திற்கு இடையே மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கை ஒன்றின் பிரகாரம் 2008 ஜூன் 01 திகதி முதல் செயற்படுத்தியிருந்த வெளிநாட்டு வேலைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்காக காப்புறுதித் திட்டம் 2012 ஏப்ரல் 28 ஆந் திகதி முதல் முடிவடைந்திருந்தது. இந்த காப்புறுதித் திட்டத்திற்காக 2012 ஏப்ரல் 28 ஆந் திகதியின் பின்னர் தவணை வருமானம் கிடைத்திருக்காத போதிலும் அந்த திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டிருந்த காப்புறுதி உடன்படிக்கைகள், 02 வருடங்களுக்கு அல்லது 03 வருடங்களுக்கு செல்லுபடியாகும் என்பதன் காரணத்தினால் அத் திகதியின் பின்னரும் நிதியத்திற்கு கோரிக்கைகள் செலுத்துவதற்காக நேரிட்டிருந்தது. அதற்காக கிடைத்திருந்த தவணைப் பணத்தில் இருந்து உழைக்கப்படாத தவணைப் பண வருமானம் ஒதுக்குதல் வருடாந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் கிடைத்திருந்த அனைத்துப் பணமும் கிடைத்த ஆண்டுகளின் போதே வருமானம் எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2015 ஆண்டின் போது ரூபா 4,526,669 தொகைக்கான கோரிக்கைகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் அடங்கியிருந்த ரூபா 1,640,118 இற்கான கோரிக்கை கொடுப்பனவுகள் தொடர்புடைய கோவைகள் அல்லது உறுதிச் சான்றுகள் கணக்காய்விற்வுச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதியத்தினால் கோரிக்கை கொடுப்பனவு மேற்கொள்ளும் போது குழு ஒன்றிற்குச் சமர்ப்பிக்கப்பட்டு அதனது விதப்புரை/ அங்கீகாரத்தின் மீது கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் We/2/2/1/VR/01310/2012 இலக்கம் மற்றும் VR/04046/2013 இலக்கத்தின் கீழ் கூட்டுத்தொகை ரூபா 599,998 தொகைக்கான கோரிக்கை கொடுப்பனவு செய்வதற்காக குழுவின் அங்கீகாரம் கிடைத்திருக்காத போதிலும் நிதியத்தின் நிறைவேற்று உத்தியோகத்தரின் அங்கீகாரத்தின் மீது மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

# சுயாதீன கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

(ஆ) VR/04968/2013 இலக்க கோரிக்கை விண்ணப்பத்திற்காக ரூபா 100,000 தொகை வீதம் ரூபா 200,000 தொகை இருவருக்கு செலுத்தப்பட்டதென கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் கோவையில் அதனோடு தொடர்புடைய உறுதிச் சான்றில் பெறுமதி குறிப்பிட்டிருக்காத போதிலும் சான்றுபடுத்திய மற்றும் அங்கீகரித்த உத்தியோகத்தரினாலேயே உறுதிச்சான்றில் கையொப்பமிடப்பட்டிருந்தது.

**4.3 பெறுகைகள் முகாமைத்துவம்**

நிதியம் 2015 ஆண்டு தொடர்பாக பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரித்திருந்த போதிலும், அதற்கு இணங்க பெறுகைகள் விடயங்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

**4.4 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

தனியார் வங்கி ஒன்றில் பேணப்படும் சேமிப்பு வங்கிக் கணக்கு ஒன்றில் ரூபா 1,268,482 தொகைக்கான வரவு மீதி ஒன்று பல வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

**4.5 பதவியணியினர் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் 2015 ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 197 ஆகக் காணப்பட்டதுடன் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை 186 ஆகக் காணப்பட்டமையால் வெற்றிடங்கள் 11 ஆக இருந்தன.

(ஆ) 11 முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் 04 அலுவலக உதவியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக 2016 செப்தம்பர் 19 திகதி வரை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் பிரகாரம் முகாமைத்துவ உதவியாளர்கள் பதவிகளுக்காக தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்காத 03 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(இ) 2015 ஜனவரி 01 ஆந் திகதி முதல் நிதியத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்டிருந்ததுடன்

# சுயாதீன கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

முகாமைத்துவச் சேவை திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் பிரகாரம் அப் பதவிக்காக உரித்தான சம்பள அடிப்படை உச்ச சம்பள மட்டத்தில் வைப்பதற்கு 2014 நவம்பர் 05 திகதி பணிப்பாளர் சபை அங்கீகாரத்தை வழங்கியிருந்தது. பின்னர் அந்த மட்டத்தில் இருந்து தொடர்ந்து சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக பெற்றிருந்த முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்திடம் பெறப்பட்டிருந்த அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 ஆண்டின் போது உள்ளக இட மாற்றங்கள் மீது கவனம் செலுத்துவதற்காக 5 அங்கத்தவர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டிருந்ததுடன் அக் குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி தீர்மானங்கள் எடுப்பதாக கூறியிருந்த போதிலும் 2016 மே மாதத்தில் 03 விண்ணப்பங்களுக்காக தீர்மானங்கள் வழங்கியிருந்த போதிலும் 20 விண்ணப்பங்கள் தொடர்பாக கணக்காய்வுத் திகதியாகிய செப்தெம்பர் 26 திகதி வரை பதில் வழங்கியிருக்கவில்லை. உள்ளக இடமாற்றங்களின் மூலம் தாபனத்தின் உற்பத்தித் திறன் மற்றும் தொழில் திருப்தியை ஏற்படுத்துதல் நிறுவனத்தின் குறிக்கோள் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்காக அங்கீகரிக்கப்பட்ட செயல்முறை ஒன்று கடைபிடிக்கப்பட்டிருந்ததென கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.

(உ) 2015 ஆண்டின் போது நிதியத்தினால் பயிற்சி வழங்கள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக நெறிமுறை ஒன்று (Criteria) அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் தொழில் மற்றும் தொழிநுட்ப இயலுமைகள் நிறைந்த ஊழியர் பதவியணியினர் ஒன்றினை உருவாக்குதல் மற்றும் சேர்க்கப்பட்ட புதிய பதவியணிக்கு பயிற்சிகளை நடத்துவது குறிக்கோளாக கொண்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது நடத்தப்பட்ட 20 வெளிப் பயிற்சி வழங்கல்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தன. சிரேஷ்ட நிலை மற்றும் மூன்றாம் நிலை உத்தியோகத்தர்களுக்காக காணப்பட்டதுடன் இரண்டாம் நிலை 144 உத்தியோகத்தர்களில் 35 பேருக்கு பயிற்சி வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குகொள்வதற்கான 06 சந்தர்ப்பங்கள் கிடைத்திருந்தன. ஆரம்ப நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் புதிய பதவியணியினருக்கு நிதியத்தினால் எதுவித பயிற்சி வழங்கள் நிகழ்ச்சித்திட்டங்கள் வழங்கியிருக்கவில்லை.

# சுயாதீன கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுமையும்

### 5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2003 ஜூன் 02 திகதி பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 07 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டுச் செலவுகள் மற்றும் உள்ளவாறான செலவுகளிடையே 10 சதவீதம் முதல் 4435 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவி யொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை.

### 5.3 முகாமைத்துவத் தகவல்கள் முறைமையின் பயன்தரு தன்மை

தனியார் கணக்காய்வுக் கம்பனி ஒன்றினால் 2016 மே முதல் ஜூன் வரையான காலப் பகுதியில் ரூபா 1,150,000 தொகைக்காக திறன்தொழில் கட்டண உடன்படிக்கையின் பிரகாரம் நிதியத்தில் முறைமைக் கணக்காய்வு ஒன்று நடத்தப்பட்டிருந்ததுடன் அதன் போது வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு அக்கிரஹார பிரிவின் காப்புறுதி முறைமைக்கு தரவுகள் உட்படுத்தல், உட்படுத்திய தகவல்கள் நாளதுவரையாக்கல் மற்றும் முறைமையின் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக நம்பிக்கைத் தன்மை குறைந்த நிலையில் காணப்பட்டது என அறிவிக்கப்பட்டிருந்தது. அதே போல், நிதிப் பிரிவினால் பயன்படுத்தப்படும் முறைமையும் புதிய பதிவுகளுக்காக அங்கீகாரம் பெற்றுக்கொடுக்காமை, நாட்குறிப்புக்கள் சமப்படுத்தாமல் தனிப்பட்ட பதிவொன்றாக உட்படுத்தக் கூடியதாக இருத்தல் மற்றும் அங்கீகாரம் இன்றி காசோலைகள் அச்சிடல் மற்றும் திரும்பவும் அச்சிடக் கூடியதாக இருத்தல் போன்ற குறைபாடுகள் தொடர்பாக அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

# சுயாதீன கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத்துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) காப்புறுதி, தவணைப் பண வருமானத் தகவல்களை தொழில்நுட்ப பிரிவினால் முறைமைக்கு உட்படுத்தி நிதிப் பிரிவுக்கு வழங்கல். |
| | | (ii) புதிய பேரேட்டுக் கணக்குகள் ஆரம்பிப்பதற்காக முறைமை அங்கீகாரம் அளிக்காமை. |
| | | (iii) காசோலைகள் அங்கீகாரம் இன்றி அச்சிடுவதற்கு/ மீள் அச்சிடுவதற்காக சந்தர்ப்பங்கள் ஏற்படல். |
| | | (iv) கோரிக்கைகளை செலுத்தும் போது வரையறைகளை விஞ்சி கொடுப்பனவுகள் மேற்கொள்ளல். |
| (ஆ) | அக்கிரஹார காப்புறுதித் திட்டம் | (i) ஆட்பதிவுத் திணைக்கள அடையாள அட்டை இலக்கம் ஒன்றின் கீழ் இரண்டு ஆட்கள் பதிவு செய்யப்பட்டிருத்தல். |
| | | (ii) அங்கத்தவர்களின் விவரங்கள் நாளதுவரையாக்கப்படாமை மற்றும் கோரிக்கைகள் செலுத்தும் போது முறைமைக்கு உட்படுத்தும் தரவுகளுக்காக அங்கீகாரம் வழங்கப்படாமை. |
| (இ) | மனித வள முகாமைத்துவம் | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் ஆட்சேர்ப்புக்கள் நடைபெறாமை மற்றும் நேர்முகப் பரீட்சைகளின் போது வழங்கப்படும் புள்ளிகள் முறையானவையாக காணப்படாமை. |

எச்.எம். காமினீ விஜேசிங்க

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# விரிவான வருமானக் கூற்று

31 டிசம்பர் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | குறிப்புகள் | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|---|
| மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் | 1 | 5,062,685,701 | 5,842,067,431 |
| அக்ரஹாரவிற்காக கிடைக்கப்பெற்ற பங்களிப்பு | 1 | 1,636,567,419 | 1,494,899,976 |
| சேகரிக்கப்பட்ட பயிர் காப்புறுதிக் கட்டணம் | | 1,259,134,207 | 1,184,647,255 |
| **தேறிய எழுதப்பட்ட தவணைக் கட்டணம்** | | **7,958,387,326** | **8,521,614,663** |
| ஈட்டப்படாத தவணைக் கட்டணத்திற்கான ஒதுக்கீட்டின் தேறிய மாற்றம் | | **(26,901,647)** | **(505,986,318)** |
| தேறிய ஈட்டப்பட்ட தவணைக் கட்டணம் | | **7,931,485,679** | **8,015,628,346** |
| **ஏனைய தொழிற்பாடுகளில் இருந்தான வருமானம்** | | | |
| கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம் | 2 | 6,596,760 | 1,405,900 |
| முதலீடுகளும் ஏனைய வருமானமும் | 3 | 849,786,808 | 638,509,884 |
| **ஏனைய வருமானம்** | | **856,383,568** | **639,915,784** |
| செலுத்தப்பட்ட மொத்த நன்மைகளும் உரிமைக் கோரிக்கைகளும் | 4 | (3,227,140,119) | (2,373,269,385) |
| மீள்காப்புறுதி செய்பவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் | 4 | - | - |
| ஒப்பந்தப் பொறுப்புகளில் மொத்த மாற்றம் | 4 | 1,562,913 | (831,930,326) |
| மீள்காப்புறுதி செய்பவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட ஒப்பந்த பொறுப்புகளில் மொத்த மாற்றம் | 4 | - | |
| **தேறிய நன்மைகளும் உரிமைக்கோரிக்கைகளும்** | | **(3,225,577,206)** | **(3,205,199,711)** |
| எழுத்துறுதி மற்றும் கொள்ளல் கிரயம் (மீள்காப்புறுதி உள்ளடங்களாக) | 5 | (946,632,594) | (694,770,258) |
| ஏனைய தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவு | 6 | (225,512,915) | (172,918,575) |
| **மொத்த நன்மைகள், உரிமைக்கோரிக்கைகள் மற்றும் ஏனைய செலவினங்கள்** | | **(4,397,722,716)** | **(4,072,888,544)** |
| **வரிக்கு முன்னரான இலாபம் /(நட்டம்)** | | **4,390,146,531** | **4,582,655,586** |
| வருமான வரிச் செலவினங்கள் | | (86,822,200) | - |
| ஆண்டுக்கான இலாபம்/(நட்டம்) | | **4,303,324,331** | **4,582,655,586** |
| ஏனைய முழு மொத்த வருமானம் | | | |
| நிதி சொத்துக்கள் விற்பனையில் கிடைக்கக்கூடிய தேறிய மாற்றம் | | (261,686,342) | 155,191,084 |
| **ஆண்டுக்கான ஏனைய முழுமொத்த வருமானம், தேறிய வரி** | | (261,686,342) | 155,191,084 |
| **மொத்த விரிவான வருமானம்** | | **4,041,637,990** | **4,737,846,670** |

# நிதி நிலைமைக் கூற்று

31 டிசம்பர் முடிவடைந்த ஆண்டுக்கான

| | குறிப்புகள் | 2015<br>ரூபா | 2014<br>ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| அருவச் சொத்துக்கள் | 7 | - | - |
| ஆதனங்களும், பொறித்தொகுதிகளும் உபகரணங்களும் | 8 | 34,125,797 | 26,251,881 |
| நிதிச் சொத்துக்கள் | 9 | 10,388,972,726 | 9,105,573,879 |
| வருமதியாக உள்ள தவணைக் கட்டணம் | 10 | 1,060,898,025 | 1,144,259,034 |
| மென் கடன்கள் | 11 | 129,244,611 | 188,220,907 |
| ஏனைய நிதிசாராச் சொத்துக்கள் | 12 | 32,307,438 | 84,351,380 |
| பிற்போடப்பட்ட தரகு | 13 | 421,132,953 | 366,621,700 |
| வங்கியிலுள்ள காசும் கையிலுள்ள காசும் | 14 | 166,785,332 | 278,096,913 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **12,233,466,883** | **11,193,375,695** |
| **உரிமைப்பங்கும் பொறுப்புகளும்** | | | |
| பிடித்துவைத்த உழைப்புகள் | | 8,743,809,636 | 7,550,219,714 |
| ஏனைய உரிமைப்பங்கின் கூறு | | (88,871,109) | 172,815,232 |
| **மொத்த உரிமைப்பங்கு** | | **8,654,938,527** | **7,723,034,946** |
| பொறுப்புகள் | | | |
| காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புகள் | | 3,257,914,116 | 3,240,259,344 |
| ஓய்வூதிய நன்மைக் கடப்பாடு | | 17,031,242 | 11,364,304 |
| ஏனைய பொறுப்புகள் | 15 | 303,582,998 | 197,413,174 |
| வங்கி மேலதிகப் பற்று | 14 | - | 21,303,927 |
| **மொத்தப் பொறுப்புகள்** | | **3,578,528,356** | **3,470,340,750** |
| **மொத்த உரிமைமுதலும் பொறுப்புகளும்** | | **12,233,466,883** | **11,193,375,695** |

இந்த நிதியத்தின் நிதிக்கூற்றானது இலங்கை கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாட்டுடன் இணங்குகின்றது என்பதை சான்றுபடுத்துகின்றேன்

.........................................
நிதி அலுவலர்

பக்கம் 5 தொடக்கம் 33 வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் என்பன இந்நிதிக்கூற்றுகளில் முக்கியமான பகுதியினை உருவாக்குகின்றன. நிதிக் கூற்றுகளை தயாரித்து முன்வைப்பதற்கான பொறுப்பினை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது. இந்த நிதிக் கூற்றுகள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக ஒப்பமிடப்பட்டுள்ளன.

.........................................
பணிப்பாளர்

.........................................
பணிப்பாளர்

19 டிசம்பர் 2016
கொழும்பு

# உரிமைப்பங்கு மாற்றக்கூற்று

31 டிசம்பர் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | பிடித்து வைத்த உழைப்புகள் ரூபா | நிதிச் சொத்துக்கள் விற்பனையில் கிடைக்கக் கூடியது ரூபா | மொத்த உரிமைப் பங்கு ரூபா |
|---|---|---|---|
| **2013 டிசம்பர் 31ஆம் திகதிலுள்ளவாறு மீதி** | **6,949,244,214** | **17,624,148** | **6,966,868,362** |
| ஆண்டுக்கான இலாபம் | 4,582,655,586 | - | 4,582,655,586 |
| **ஏனைய முழுமொத்த வருமானம்** | | | |
| நிதிச் சொத்துக்கள் விற்பனையில் கிடைக்கக்கூடிய தேறிய மாற்றம் | - | 155,191,084 | 155,191,084 |
| மோட்டார் வாகனத் திரட்டியத் தேய்வுச் சீராக்கம் | 14,558,589 | - | 14,558,589 |
| மீள்காப்புறுதி திணைக்களத்திலிருந்து இலாப தரகு மற்றும் மீட்கத்தக்க மீள் எழுதல் | 12,287,375 | | 12,287,375 |
| மீள் காப்புறுதி தவணைக்கட்டணத் திருத்தம் மற்றும் வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதக் கொடுப்பனவுகளில் எடுக்கப்பட்டது | (10,268,621) | | (10,268,621) |
| 2013ம் ஆண்டுக்கு பிரயோகிக்கக்கூடிய தேய்வு | (511,780) | | (511,780) |
| SLIPS மீள் திருத்தம் | 2,055,047 | | 2,055,047 |
| ஊ.ந.நிதியம் மற்றும் முத்திரைத்தீர்வை திருத்தம் | 199,305 | | 199,305 |
| திரட்டிய நிதியத்திற்கு மாற்றப்பட்ட காசு | (4,000,000,000) | - | (4,000,000,000) |
| **31 டிசம்பர் 2014ம் திகதியில் மீதி** | **7,550,219,714** | **172,815,232** | **7,723,034,946** |
| வருடத்திற்கான இலாபம் | 4,303,324,331 | - | 4,303,324,331 |
| நிதிச் சொத்துக்கள் விற்பனையில் கிடைக்கக்கூடிய தேறிய மாற்றம் | | (261,686,342) | (261,686,342) |
| பிணைகள் மீதான கழிவுகளை தவணைக் கட்டணக் கடன் கரைப்பு | 50,321,582 | | 50,321,582 |
| மீள்காப்புறுதி விலைப்பட்டியல் மற்றும் கடன் பத்திரங்களின் இரத்து | (92,421,039) | | (92,421,039) |
| வருடாந்த கட்டணம் மற்றும் செஸ் | (24,370,817) | | (24,370,817) |
| மீள்காப்புறுதி நிலுவையின் திருத்தம் | (60,170,679) | | (60,170,679) |
| மோட்டார் தவணைக்கட்டணத்தை பதிவழித்தல் | (1,995,673) | | (1,995,673) |
| தேய்வுத் திருத்தம் | (583,958) | | (583,958) |
| மோட்டார் அல்லா தவணைக் கட்டணத் திருத்தம் | 4,668,666 | | 4,668,666 |
| தவணைக் கட்டண மீள்கொடுப்பனவுச் சீராக்கங்கள் | 2,574,100 | | 2,574,100 |
| PPE திரட்டிய தேய்வுச் சீராக்கம் | 11,643,799 | | 11,643,799 |
| செலவுகள் மற்றும் ஏனையவற்றை ஈடுசெய்தல் | 599,610 | | 599,610 |
| திரட்டிய நிதியத்திற்கு மாற்றப்பட்ட காசு | (3,000,000,000) | | (3,000,000,000) |
| | **8,743,809,636** | **(88,871,109)** | **8,654,938,527** |

/

# காசுப்பாச்சல் மாற்றக்கூற்று

31 டிசம்பர் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | | 2015<br>ரூபா | 2014<br>ரூபா |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாச்சல்** | | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | | 4,390,146,531 | 4,582,655,586 |
| **சீராக்கங்கள்** | | | |
| வட்டி வருமானம் | | (801,608,493) | (624,075,269) |
| தேய்வு | | 6,579,710 | 8,552,653 |
| தேறிய முகப் பெறுமதி மாற்றங்கள் | | (261,686,342) | 155,191,084 |
| முன்னைய வருட சீராக்கங்கள் | | (109,734,409) | 4,273,105 |
| நிலையான சொத்தக்களின் அகற்றலின் மீதான நட்டம் | | 1,096,675 | - |
| | | **3,224,793,673** | **4,126,597,159** |
| தொழிற்பாட்டு சொத்துக்களின் மாற்றம் | அ | 80,893,698 | (493,262,120) |
| தொழிற்பாட்டு பொறுப்புகளின் மாற்றம் | ஆ | 123,824,595 | 1,518,581,307 |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாச்சல் | | 3,429,511,967 | 5,151,916,346 |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | | 5,666,938 | 3,564,830 |
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட தேறிய காசு | | 3,435,178,905 | 5,155,481,176 |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாச்சல்** | | | |
| நிதி முதலீட்டின் தேறிய கைக்கொள்ளல் | | (1,283,398,847) | (2,261,335,760) |
| பெற்றுக்கொண்ட வட்டி | | 703,726,452 | 624,075,269 |
| மென் கடன்களின் மீள்பெறுகை | | 58,976,296 | 434,539,307 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் அகற்றல் | | 15,500 | - |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணக் கொள்வனவுகள் | | (4,505,960) | (1,462,818) |
| முதலீட்டுச் செயற்பாடுகளில் பாவிக்கப்பட்ட தேறிய காசு | | (525,186,559) | (1,204,184,002) |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான பாச்சல்** | | | |
| திரட்டுநிதியத்திற்கு மாற்றப்பட்ட காசு | | (3,000,000,000) | (4,000,000,000) |
| நிதிச் செயற்பாடுகளில் பாவிக்கப்பட்ட தேறிய காசு | | (3,000,000,000) | (4,000,000,000) |
| **காசும் காசுக்கு சமனானவற்றியனதும் தேறிய அதிகரிப்பு /குறைவு** | இ | (90,007,654) | (48,702,826) |
| ஆண்டுத் தொடக்கத்தில் தேறிய காசும் காசுக்கு சமனான விடயங்களும் | | 256,792,986 | 305,495,812 |
| ஆண்டு இறுதியில் காசும் காசுக்கு சமனான விடயங்களும் | | 166,785,332 | 256,792,986 |
| **காசுப் பாச்சல் கூற்றிற்கான குறிப்புகள்** | | | |
| அ. தொழிற்பாட்டு சொத்துக்களின் மாற்றம் | | | |
| பிற்போடப்பட்டதரகில் (அதிகரிப்பு)/குறைவு | | (54,511,252) | (167,448,531) |
| கிடைக்கவேண்டிய தவணைக்கட்டணத்தில் (அதிகரிப்பு)/ குறைவு | | 83,361,009 | (319,531,410) |
| ஏனைய நிதி சாராச் சொத்துக்களில் (அதிகரிப்பு)/ குறைவு | | 52,043,941 | (6,282,179) |
| | | 80,893,698 | (493,262,120) |
| ஆ தொழிற்பாட்டுப் பொறுப்புகளில் மாற்றம் | | | |
| காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புகளில் (அதிகரிப்பு)/குறைவு | | 17,654,772 | 1,344,542,715 |
| ஏனைய பொறுப்புகளின் (அதிகரிப்பு))/குறைவு | | 106,169,823 | 174,038,592 |
| | | 123,824,595 | 1,518,581,307 |
| **இ காசும் காசுக்கு சமனானவற்றினதும் அதிகரிப்பு/ (குறைவு)** | | | |
| ஆண்டு இறுதியில் தேறிய காசும் காசுக்கு சமனான விடங்களும் | | 166,785,332 | 256,792,986 |
| கழிப்பனவு: ஆண்டுத் தொடக்கத்தில் தேறிய காசும் காசுக்கு சமனான விடயங்களும் | | 256,792,986 | 305,495,812 |
| காசும் காசுக்கு சமனான விடயங்களின் தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | (90,007,654) | (48,702,826) |

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

31 டிசம்பர் 2015 முடிவடைந்த ஆண்டுக்கானது

## 1.0 கூட்டிணைந்த தகவல்

### 1.1 நிறுவனத்தினை அறிக்கையிடல்

“2006ஆம் ஆண்டின் 28ம் இலக்க தேறிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்” மூலம் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது (“இந்நிதியம்”) உருவாக்கப்பட்டு இலங்கையில் அமையப் பெற்றுள்ளது. தேறிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகமானது இல.97, மருதானை வீதி, கொழும்பு 10 என்னும் முகவரியில் அமைந்துள்ளதுடன் பிரதான தொழில் தளமும் இம்முகவரியிலேயே அமைந்துள்ளது.

### 1.2 விநியோகிப்பதற்கான அதிகாரமளிக்கப்பட்ட திகதி

பணிப்பாளர் சபையினால் 21.12.2016ம் திகதி விநியோகிப்பதற்காக நிதிக்கூற்றுக்கள் வெளியிடப்பட்டது.

### 1.3 தாய் நிறுவனமும் இறுதியான தாய் நிறுவனமும்

சபையின் தாய் நிறுவனமும் இறுதியான தாய் நிறுவனமும் இலங்கை அரசாங்கம் ஆகும்.

### 1.4 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

இச்சபையின் பிரதான செயற்பாடுகளானவை பொதுக் காப்புறுதி மற்றும் மீள்காப்புதித் தொழில் என்பவற்றை நடாத்திச் செல்லல் ஆகும். மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் சபையின் பிரதான நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

### 1.5 நிதிக்கூற்றுகளுக்கான பொறுப்பு

பணிப்பாளர் சபையானது இந் நிதிக்கூற்றுகளைத் தயாரித்து முன்னளிப்பதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

### 1.6 இணக்கக்கூற்று

வேறுவகையில் குறிப்பிடப்பட்டால் அன்றி இலங்கையின் பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் (CA - இலங்கை) பிரகடனம் செய்யப்பட்ட இலங்கை கணக்கியல் நியமத்திற்கு இணங்க, நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. நிதிக்கூற்றில் பின்வரும் பிரிவுகள் உள்ளன.

- வருட இறுதியில் சபையின் நிலை மீதான தகவல்களை நிதி நிலைமைக்கூற்று (பக்கம் 2ஐப் பார்க்க) வழங்குகின்றது.

- மீளாய்வுக்குட்பட்ட வருடத்தின் சபையின் நிதியியல் செயலாற்றுகை தொடர்பான தகவல்களை இலாப அல்லது நட்ட மற்றும் விரிவான வருமானக்கூற்று வழங்குகின்றது.

- பங்குதாரர்களின் உரிமைப்பங்குகளில் ஏற்றபட்ட அனைத்து மாற்றங்களையும் உரிமைப் பங்குகளின் மாற்றக்கூற்று வெளிப்படுத்தகின்றது.

- சபையின் காசு மற்றும் காசுக்கு சமனானவற்றை உருவாக்கும் திறன் மற்றும் அந்த காசுப் பாச்சல் பயன்படுத்தல் தொடர்பான விபரங்களை பயன்படுத்துனர்களுக்கு காசுப் பாச்சல் கூற்று வழங்குகின்றது.

- நிதி மற்றும் நிதியல்லா தகவல்களை கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களை நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் உள்ளடக்கியுள்ளன.

### 1.7 ஊழியர்களின் எண்ணிக்கை

2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதியிலுள்ளவாறு இச்சபையின் ஊழியர் வலு 186 (2014 - 177) ஆக இருந்தது.

## 2.0 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

### கணக்கியல் கொள்கைகளில் மாற்றங்கள்

கீழே குறிப்பிடப்பட்ட கொள்கைகள் குறிப்பிடப்பட்டால் அன்றி, குழுவின் இந்த நிதி அறிக்கையில் வழங்கப்பட்ட அனைத்துக் காலங்களுக்கும் தொடர்ச்சியாக பொருந்தும்.

### 2.1 தயாரிப்பு அடிப்படை

### 2.11 அளவீடுகளின் அடிப்படை

முகப்பெறுமதியில் அளவிடப்படும் ‘விற்பனைக்காக கிடைக்கக்கூடிய’ நிதிச் சொத்துக்கள் தவிர ஏனையவை அட்டுறு அடிப்படையிலும் வரலாற்றுக் கிரய அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை கணக்கீட்டு நியமங்களை இணைத்துக் கொள்வதற்கு முன்னர், இலங்கை நிதிப் பிரணமானங்கள் 4 காப்புறுதி ஒப்பந்தங்களால் அனுமதிக்கப்பட்டபடி, தற்போதைய கணக்கியல் கொள்கைகளை சபை தொடர்கின்றது.

வங்கி அதன் நிதி நிலை அறிக்கையை பரவலாக திரவமாக்குகின்றது. நிதி அறிக்கைகளை பாதிக்கும் பணவீக்கக் காரணிகளுக்கு மாற்றீடு செய்யப்படவில்லை.

நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதியப் பொறுப்புகள் ஆகியவை ஈடுசெய்யப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடுசெய்வதற்கு சட்டபூர்வமாக அமுல்படுத்தப்படக்கூடிய உரிமையுடையதும் மற்றும் தேறிய அடிப்படை மீது தீர்க்கும் நோக்கத்துடன் அல்லது ஒரே நேரத்தில் சொத்துக்களின் தேறிப்பெறுகை மற்றும் பொறுப்புகளை தீர்க்கும் தேறிய தொகை மட்டுமே நிதி நிலைமைக்கூற்றில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

### 2.12 தொழிற்பாட்டு மற்றும் முன்னளிப்பு நாணயம்

நிதிக் கூற்றுக்களானவை இலங்கை ரூபாவில் (LKR) முன்னளிக்கப்படுகின்றன. இலங்கை ரூபாவில் முன்னளிக்கப்படும் சகல நிதித் தகவல்களும் வேறு வகையில் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி மிகக் கிட்டிய ரூபாவிற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

### 2.13 பொருண்மியமும் ஒருங்கிணைவும்

ஒவ்வொரு ஒரேமாதிரியான பொருண்மையுடைய அயிட்டங்கள் வெவ்வேறாக வெளியிடப்பட்டுள்ளது. அவை பொருண்மையுடையனவாக இல்லாதிருந்தால்ஒழிய அயிட்டத்தின் தன்மை அல்லது செயற்பாடு தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

31 டிசம்பர் 2015 முடிவடைந்த ஆண்டுக்கானது

### 2.2 அறிக்கையிடும் காலப்பகுதி

அறிக்கையிடும் காலப்பகுதி 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து டிசெம்பர் மாதம் வரையாகும்.

பொருத்தமானவிடத்து கணக்கீட்டுக் கொள்கைகள் அடுத்தவரும் குறிப்புகளில் விளங்கப்படுத்தப்பட்டுள்ள

### 2.3 முக்கியமான கணக்கீட்டுத் தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் ஒத்திசைவாக நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலானது கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகத்தினையும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்களின் அறிக்கையிட்ட அளவுகளையும் பாதிக்கின்ற தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்வதற்கு முகாமைக்குத் தேவையாகும். உண்மையான பெறுபேறுகள் இம் மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.

வரலாற்று அனுபவம் மற்றும் சூழ்நிலைகளின் கீழ் நியாயமானதாக இருக்குமென நம்பப்படும் ஏனைய பல்வேறுபட்ட காரணிகள் என்பனவற்றினை மதிப்பீடுகளும், அடிப்படையான எடுகோள்களும் அடிப்படையாகக் கொண்டுள்ளன என்பதுடன் அவற்றின் பெறுபேறுகளானவை ஏனைய மூலங்களிலிருந்து உடனடி வெளிப்படையற்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கொண்டுசெல்லும் தொகையினைப் பற்றியதான தீர்வுகளை உருவாக்கும் அடிப்படையினை உருவாக்குகின்றன.

மதிப்பீடுகளும் அடிப்படையான எடுகோள்களும் தொடர்ந்து செல்லும் அடிப்படை ஒன்றில் மீளாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீடுகள் திருத்தப்படும் காலப்பகுதியிலும் ஏதேனும் பாதிக்கப்படும் எதிர்காலப்பகுதியிலும் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் இனங்காணப்படுகின்றன.

நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட தொகைகளின் மீது கூடுதல் முக்கியமான விளைவினைக் கொண்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிப்பதிலான தர்க்க ரீதியான தீர்வுகளைப் பற்றிய தகவல்கள் பின்வரும் குறிப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2.3.1 காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புக்களை மதிப்பிடுதல்

பொதுக் காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி ஒப்பந்தங்களுக்காக, அறிக்கையிடும் திகதியன்று அறிக்கையிடப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட இறுதி உரிமைக்கோரிக்கைக் கிரயத்துக்காக மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. இறுதி உரிமைக்கோரிக்கைக் கிரயமானது நிச்சயமானதாக உருவாக்கப்படக் கூடியதாக இருப்பதற்கு முன்னர் குறிப்பிடத்தக்க காலப்பகுதி ஒன்று எடுக்கலாம்.

பாரியளவு உரிமைக் கோரிக்கைகளானவை ஒன்றில் இழப்பீட்டு மதிப்பீட்டாளர் (loss adjuster) மதிப்பீடுகளின் முகப் பெறுமதியில் ஒதுக்கப்படுவதன் மூலம் அல்லது அவற்றின் எதிர்கால அபிவிருத்தியினைப் பிரதிபலிக்கும் பொருட்டு வெவ்வேறாக எடுத்துரைக்கப்படுகின்றன. கூடுதலான சந்தர்ப்பங்களில், எதிர்கால உரிமைக்கோரிக்கை பணவீக்க வீதங்கள் அல்லது இழப்பு விகிதங்கள் தொடர்பில் வெளிப்படையான எடுகோள்கள் எவையும் மேற்கொள்ளப்படுவதில்லை. பதிலாக, பாவிக்கப்படும் எடுகோள்களானவை மதிப்பீடுகள் அடிப்படையாகக் கொண்ட வரலாற்று உரிமைக்கோரிக்கை அபிவிருத்தித் தரவுகளில் உட்கிடையாக உள்ளனவையாகும்.

ஈர்க்கப்படாத தவணைக் கட்டணத்திற்கான ஏற்பாடுகளின் போதுமான தன்மையினை மதிப்பிடுவதில் ஒத்த தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் என்பன கையாளப்படுகின்றன. ஒப்பந்தம் ஒன்றின் மூலம் வழங்கப்படும் காப்புறுதிச் சேவைப் பாங்கிற்கு ஈட்டப்படாத தவணைக் கட்டண கடனழிப்பானது தவணை முறை கடனழிப்பு அடிப்படையினை விட வேறோர் அடிப்படையில் தேவையானதா என்பதை வரையறுப்பதிலும் தீர்வு தேவைப்படுத்தப்படுகின்றது.

### 2.3.2 பிற்போடப்பட்ட கொள்ளல் கிரயத்தின் (DAC) குறைவு

பிற்போடப்பட்ட கொள்ளல் கிரயத்தின் குறைவு மீளாய்வு ஒன்று ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மேற்கொள்ளப்படுகின்றது. மீளப்பெறக்கூடிய தொகையானது கொண்டு செல்லும் பெறுமதியினை விட குறைவாக இருக்கும் போது முழுமொத்த வருமானக் கூற்றில் குறைவு நட்டம் ஒன்று இனங்காணப்படுகின்றது. மீளாய்வின் கீழ் ஆண்டுக் காலப்பகுதியில் அத்தகைய குறைவு அறிகுறியேதும் உணரப்படவில்லை.

### 2.3.3 குறைவு மதிப்பீடு

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சொத்து ஒன்றிற்கு அல்லது காசு பிறப்பாக்கல் அலகு ஒன்றுக்கு ஏதேனும் குறைவு குறிகாட்டிகள் உள்ளனவா என்பதை சபையானது மதிப்பிடப்படுகின்றது. அத்தகைய தனிப்பட்ட சொத்தின் அல்லது காசு பிறப்பாக்கல் அலகிலிருந்து மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்வதற்கும் மற்றும் உரிய காசுப் பாய்ச்சல்களின் நிகழ்காலப் பெறுமதியினை கணிப்பிடும் பொருட்டு ஒரு பொருத்தமான கழிவு வீதத்தினை தெரிவு செய்து கொள்வதற்கும் முகாமையினை தேவைப்படுத்தப்படுகின்றது. எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் மற்றும் கழிவு வீதங்களைப் பற்றிய மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கும் இம் மதிப்பீடானது சபையினை தேவைப்படுத்தப்படுகின்றது ஆதலினால் அவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டுள்ளன.

### 2.3.4 பொறுப்புக்கள் மற்றும் எதிர்பாராத செலவுகளுக்கான ஏற்பாடு

சபையையானது சாதாரண வியாபார நடவடிக்கையில் இதற்கு எதிரான சட்ட ரீதியான உரிமைக் கோரிக்கைகளைப் பெற்றுக்கொள்கின்றது. ஏற்பாடுகளை மேற்கொள்வதில் வெற்றியீட்டும் ஏதேனும் உரிமைக் கோரிக்கையின் சாத்தியப்பாடு தொடர்பில் தீர்வுகளை முகாமையானது மேற்கொண்டுள்ளது. சாத்தியமான பொருளாதார நன்மை வெளிப் பாய்ச்சல் தொகை காணப்படுவதனால் சட்ட உரிமைக் கோரிக்கையை முடிவுறுத்ததும் காலமானது நிச்சயமற்றது. கால அளவும் கிரயமும் இறுதியாக உரிய சட்ட நியாயாதிக்கங்களிலுள்ள உரிய செய்முறையில் தங்கியுள்ளன.

### 2.3.5 பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள்

சிக்கலான வரி ஒழுங்குவிதிகள் மற்றும் எதிர்கால வரிவிதிக்கக்கூடிய வருமானத் தொகை மற்றும் கால அளவு என்பனவற்றின் பொருள்கோடல் தொடர்பில் நிச்சயமற்ற தன்மைகள் காணப்படுகின்றன. வரி நோக்கங்களுக்காக தகைமைபெறும் கொடுப்பனவுகளாகக் கருதப்படும், திரட்டு நிதியத்துக்கு மேற்கொள்ளப்படும் கணிசமானளவு பங்களிப்புக்கள் காரணமாக எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் வரிவிதிக்கக்கூடிய இலாபம் ஒன்றினை உருவாக்குவதில் சாத்தியப்பாடு குறைவாக உள்ளது என்பதை முகாமை மதிப்பிடுகின்றது. ஆதலினால் பிற்போடப்பட்ட வரிக்காக எதுவித ஏற்பாடும் மேற்கொள்ளப்படுவதில்லை.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

31 டிசம்பர் 2015 முடிவடைந்த ஆண்டுக்கானது

### 2.3.6 ஓய்வூதிய நன்மைக் கடப்பாட்டினை - (பணிக்கொடை) மதிப்பிடுதல்

ஓய்வூதிய நன்மைக் கடப்பாட்டுக் கிரயமானது இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 19 - ஊழியர் நன்மைகளில் கோரப்பட்டுள்ளவாறு காப்பீட்டுக் கணிப்பு (actuarial) மதிப்பீட்டினைப் பயன்படுத்தி வரையறுக்கப்படுவதில்லை. எனினும், பணிக்கொடைக்கான ஏற்பாடானது ஒவ்வொரு முற்றுப்பெற்ற வருட சேவைக்கும் ஆகக் குறைந்தது அரை மாதச் சம்பளத்தின் அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது. இதன் விளைவாக, தள்ளுபடி விகிதங்கள், சொத்துகள் மீதான எதிர்பார்க்கப்படும் வருவாய் விகிதம், வருங்கால சம்பள அதிகாப்பு மற்றும் இறப்பு விகிதம் ஆகியவை பணிக்கொடை பொறுப்பினை கணிப்பிடும் போது கவனத்தில் கொள்ளப்படவில்லை.

### 2.3.7 கருதப்படும் வரி வரவு (நிறுத்திவைத்தல் வரி)

வருங்கால வரி விதிக்கக்கூடிய இலாபத்திற்கு எதிரீடு செயயக்கூடிய செலுத்தப்பட்ட கருதப்பட்ட வரிக் கொடுப்பனவுத் தகைமை மதிப்பீட்டை சபை தயாரித்துள்ளது. இந்த மதிப்பீட்டின் அடிப்படையில், அண்மைக்காலத்தில் கொடுப்பனவு செய்த கருதப்பட்ட வரியை வங்கி பயன்படுத்தி இலாப மற்றும் நட்டக் கணக்கில் கருதப்பட்ட வரி வரவு அறவிடப்பட்டுள்ளது. எனினும் எதிர்காலத்தில் போதியளவு வரிவிதிக்கக்கூடிய இலாபம் காணப்படுகின்றதுடன், சபையானது அவ்வாறான கருதப்பட்ட வரிகளை நீக்குவதற்கான கோரல்கள் மற்றும் மீள் எழுதல்களை மேற்கொள்ளும்.

### 2.3.8 தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு

சபையின் முகாமையானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு ஒன்றாக தொடர்வதற்கான சபையின் ஆற்றல் மதிப்பீடு ஒன்றினை மேற்கொண்டுள்ளதுடன் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்திற்கு வியாபாரத்தினைத் தொடர்வதற்கான வளங்களை சபை கொண்டுள்ளது என்பதிலும் திருப்தி கண்டுள்ளது. மேலும், தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு ஒன்றாக தொடர்வதற்கான சபையின் ஆற்றலின் மீது குறிப்பிடத்தக்க சந்தேகத்தினை விளைவிக்கக்கூடிய ஏதேனும் முக்கியமான நிச்சயமற்ற தன்மைகளைப் பற்றி முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. ஆதலால், தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தொடர்ந்து தயாரிக்கப்படுகின்றன.

நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட தொகைகள் மீது கூடுதல் முக்கியமான விளைவினைக் கொண்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிப்பதிலான மதிப்பீடு, நிச்சயமற்ற தன்மை மற்றும் தர்க்க ரீதியான தீர்வுகளின் குறிப்பிடத்தக்க துறைகள் பற்றிய தகவல்கள் பின்வருவனவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| தர்க்க ரீதியான கணக்கீட்டுத் தீர்வு, மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் |
|---|
| ஈட்டப்படாத தவணைக் கட்டணம் மற்றும் பிற்போடப்பட்ட கொள்ளல் கிரயம் |
| மொத்த செலுத்த வேண்டிய உரிமைக் கோரிக்கைகளுக்கான ஒதுக்கு |
| ஓய்வூதிய நன்மைக் கடப்பாட்டு அளவீடு |

### 2.4 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

### 2.4.1 அருவச் சொத்துக்கள்

வெவ்வேறாகக் கொள்ளல் செய்யப்படும் அருவச் சொத்துக்களானவை ஆரம்ப அடையாளங்காணல் (recognition) தொடர்பில் கிரயத்தில் மதிப்பிடப்படுகின்றன. ஆரம்ப அடையாளங்காணலைத் தொடர்ந்து அருவச் சொத்தக்களானவை ஏதேனும் திரண்ட கடனழிவு மற்றும் ஏதேனும் திரண்ட குறைவு நட்டங்கள் என்பனவற்றைக் கழித்து வரும் கிரயத்தில் கொண்டு செல்லப்படுகின்றன. அருவச் சொத்து குறைக்கப்படலாம் என்னும் குறிகாட்டி காணப்படும் போதெல்லாம் அருவச் சொத்துக்களானவை பயன்தரு பொருளியல் ஆயுட்காலத்திற்கு கடனழிவு செய்யப்பட்டு குறைவுக்காக மதிப்பிடப்படுகின்றன. அருவச் சொத்து ஒன்றுக்கான கடனழிவுக் காலப்பகுதி மற்றும் கடனழிவு முறை என்பன குறைந்தது ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன. சொத்துடன் ஒன்றிணைந்த எதிர்கால பொருளாதார நன்மைகளின் எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் அல்லது எதிர்பார்க்கப்பட்ட நுகர்வுப் பாங்கிலான மாற்றங்களானவை கடனழிவுக் காலப்பகுதி அல்லது முறையினைப் பொருத்தமுடையதாக மாற்றுவதன் மூலம் கணக்கிடப்பட்டு கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றங்களாக கருதப்படுகின்றன. அருவச் சொத்துக்கள் மீதான கடனழிவுச் செலவானது அருவச் சொத்தின் தொழிற்பாட்டுக்கு ஒத்தாக செலவு வகுதியில் வருமானக் கூற்றில் அடையாளங் காணப்பட்டுள்ளது.

அருவச் சொத்து ஒன்றின் அடையாளம் நீக்கலிலிருந்து (De-recognition) எழும் இலாபங்கள் அல்லது நட்டங்களானவை தேறிய அகற்றல் வருவாய்களுக்கும் சொத்தின் கொண்டு செல்லல் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாக அளவிடப்பட்டு சொத்தானது அடையாளம் நீக்கப்படும் போது வருமானக் கூற்றில் அடையாளங் காணப்படுகின்றன.

சபையினால் கைக்கொள்ளப்பட்ட மென்பொருள் செலவானது திரண்ட கடனழிவு மற்றும் ஏதேனும் திரண்ட குறைவு நட்டங்கள் என்பனவற்றைக் கழித்து வரும் கிரயமாக குறிப்பிடப்படுகின்றது

கணனி மென்பொருள் - கடன்தீர்ப்பு 4 வருடங்களுக்கு மேல்

### 2.4.2 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

ஒரு வருடத்திற்கு மேல் பயன்படுத்தப்பட எதிர்பார்க்கப்படும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன அருவமல்லாச் சொத்துக்களாகும்.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் கொள்விலையானது அது பயன்படுத்தப்படும் நோக்கத்திற்கு தொழிற்படும் நிலைக்கு சொத்துக்களை கொண்டுவருவதற்காக மேற்கொள்ளப்படும் செலவுகளுடன் சேர்த்துப் பதிவுசெய்யப்படும்.

### 2.4.3 பெறுமானத் தேய்வு

சபையானது சொத்து பயன்படுத்துகைக்கு கிடைக்கப் பெறும் மாதத்தில் இருந்து சொத்து அகற்றப்படும் மாதம் வரைக்குமான காலத்திற்கு தேய்வினை வழங்குகின்றது. சகல ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பனவற்றினதும் கிரயத்தின் பேரில் நேர்கோட்டு முறையினைப் பாவிப்பதன் மூலம் சமமான வருடாந்த தவணைக் கட்டணங்கள் மூலம் அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்திற்கு அத்தொகையினைப் பதிவழிப்பதற்கென பெறுமானத் தேய்வேற்பாடு பின்வருமாறு கணிப்பிடப்படுகின்றது.

| | |
|---|---|
| பொறித்தொகுதியும் இயந்திரமும் | 10 வருடத்திற்கு மேலாக |
| தளபாடமும் பொருத்துதலும் | 08 வருடத்திற்கு மேலாக |
| அலுவலக உபகரணங்கள் | 06 வருடத்திற்கு மேலாக |
| மோட்டார் வாகனங்கள் | 10 வருடத்திற்கு மேலாக |

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

31 டிசம்பர் 2015 முடிவடைந்த ஆண்டுக்கானது

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சொத்துக்களின் எஞ்சிய பெறுமதிகள், பயன்தரு ஆயுட்காலம் மற்றும் தேய்வு முறை என்பன மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமுடையதாயின் சீராக்கப்படும்.

மீளாய்வின் கீழான வருடத்தின் போது, அலுவலக உபகரணங்களின் பயன்படுத்தல் காலத்தை 6 வருடங்களிலிருந்து 13.33 வருடங்களாகவும் தளபாடங்கள் மற்றும் பொருத்திகளின் பயன்படுத்தல் காலத்தை 08 வருடத்திலிருந்து 13.33 வருடங்களாகவும் திருத்துவதற்கு சபை தீர்மானித்தது.

திருத்தமானது கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றம் ஒன்றாக 2015 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்டதுடன் மதிப்பிடப்பட்ட எஞ்சிய பயன்தரு ஆயுட்காலத்தினை உள்ளடக்கி திருத்திய பயன்தரு ஆயுட்காலத்தின் அடிப்படையில் அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் மற்றும் பொருத்திகளின் கொள்ளல் திகதியிலிருந்து பெறுமானத் தேய்வினை சபையானது அளவீட்டு உரிமை முதலின் கீழ் வேறுபாட்டினை சீராக்கியிருப்பின் மீள எடுத்துரைத்துள்ளது.

**அலுவலக உபகரணம்**

உரிமை முதலினூடாக சீராக்கப்பட்ட திரண்ட தேய்விலான மாற்றம் - ரூபா 9,896,506.00

2015 ஆம் ஆண்டிற்கான மேலதிக தேய்வுக் கட்டணம் - ரூபா 1,133,539

**தளபாடங்கள் மற்றும் பொருத்திகள**

உரிமை முதலினூடாக சீராக்கப்பட்ட திரண்ட தேய்விலான மாற்றம் - ரூபா 1,747,293

2015 ஆம் ஆண்டிற்கான மேலதிக தேய்வுக் கட்டணம் - ரூபா 180,611

**பாவனையிலுள்ள முழுமையாக தேய்விடப்பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்**

அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறு இன்னமும் பாவனையிலுள்ள முழுமையாக தேய்விடப்பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் ஆரம்பக் கிரயமானது குறிப்பு 8 இல் 24ம் பக்கத்தில் காட்டப்பட்டுள்ளது காட்டப்பட்டுள்ளது.

### 2.4.4 நிதி ஆவணங்கள்

சபையானது ஆவணத்தின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான ஒரு தரப்பாக மாறும்போது அதன் நிதி நிலைமைக் கூற்றில் நிதிச் சொத்துக்கள் அல்லது நிதிப் பொறுப்புக்களை இனங்கண்டு கொள்கின்றது. நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் உண்மைப் பெறுமதியில் (Fair value) அளவிடப்படுகின்றன. நிதிச் சொத்து ஒன்றின் அல்லது பொறுப்பு ஒன்றின் (இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் தவிர) கொள்ளல் அல்லது வழங்கலுக்கு நேரடிக் காரணமாயிருந்த கொடுக்கல் வாங்கல் கிரயங்களானவை ஆரம்ப இனங்காணலின் போது பொருத்தமுடையதாக நிதிச் சொத்து அல்லது பொறுப்பின் உண்மைப் பெறுமதியுடன் சேர்க்க அல்லது அதிலிருந்து கழிக்கப்படும். இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களின் கொள்ளலுக்கு நேரடிக் காரணமாயிருந்த கொடுக்கல் வாங்கல் கிரயங்களானவை வருமானக் கூற்றில் உடனடியாக இணங்காணப்படும். சபையானது தொகையினை ஈடாக்குவதற்கான சட்ட உரிமை ஒன்றினைக் கொண்டிருத்தால் மாத்திரமே அத்துடன் ஒன்றில் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது ஒரே நேரத்தில் சொத்தினை பணமாக்கி பொறுப்பினைத் தீர்ப்பதற்கு உத்தேசிக்கும் போது நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஈடாக்கப்பட்டு தேறிய தொகை முன்னளிக்கப்படும்.

**நிதிச் சொத்துக்கள்**

**(அ) ஆரம்ப இனங்காணலும் அளவீடுகளும்**

கடன்களும் வருமதிகளும் எத் திகதியில் ஆரம்பிக்கின்றனவோ அத் திகதியிலேயே சபையானது அவற்றை ஆரம்பத்தில் இனங்காண்கின்றது. சபையானது ஆவணத்தின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான ஒரு தரப்பாக மாறும் வியாபாரத் திகதியில் ஏனைய சகல நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டத்திற்கூடான உண்மைப் பெறுமதியில் அல்லாது விடயம் ஒன்றுக்காக நிதிச் சொத்து அல்லது நிதிப் பொறுப்பொன்றானது அதன் கொள்ளல் அல்லது வழங்கலுடன் நேரடிக் காரணமாயிருந்த கொடுக்கல் வாங்கல் செலவுகளைக் கூட்டி உண்மைப் பெறுமதியில் ஆரம்பத்தில் அளவிடப்படுகின்றது.

ஆரம்பத்தில் ஒரு நிதிச் சொத்தானது பின்வரும் வகுதிகளில் ஒன்றாக வகைப்படுத்தப்படுகின்றது.:

- இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதி (FVTPL);
- விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான (AFS) நிதிச் சொத்துக்கள்
- கடன்களும் வருமதிகளும் (L & R); மற்றும்
- பொருத்தமுடையதாக முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள் (HTM)

சபையானது ஆரம்ப இணங்காணலில் அதன் நிதிச் சொத்துக்களின் வகைப்பாட்டினை வரையறுக்கின்றது.

சபையானது ஆரம்ப இணங்காணலில் அதன் நிதிச் சொத்துக்களின் வகைப்பாட்டினை வரையறுக்கின்றது.

எந் நோக்கத்திற்காக முதலீடுகள் கொள்ளல் செய்யப்படுகின்றதோ அல்லது ஆரம்பிக்கப்படுகின்றதோ (அதாவது, உள்நோக்கம்) அந் நோக்கத்தில் வகைப்பாடு தங்கியிருப்பதுடன் சபையின் ஆற்றலினையும் அடிப்படையாகக் கொண்டது. குழு முதலீட்டுத் தந்திரோபாயமானது உண்மைப் பெறுமதி அடிப்படையில் நிதி முதலீடுகளை முகாமை செய்துகொள்வதற்காக இருக்குமிடத்து இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலுள்ளவாறு நிதிச் சொத்துக்கள் வகைப்படுத்தப்படும். உரியவை முனைப்பற்றதாக முகாமை செய்யப்படும் போது அத்துடன்/அல்லது கடனழிவுக் கிரயத்தில் கொண்டு செல்லப்படும் போது விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான (AFS) மற்றும் முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் (HTM) வகுதிகள் பயன்படுத்தப்படும். ஒழுங்குவிதி அல்லது கூட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட கால இட்டவணைக்கள் சந்தையில் சொத்துக்களின் வழங்கலைத் தேவைப்படுத்தும் நிதிச் சொத்துக்களின் கொள்வனவுகள் அல்லது விற்பனைகளானவை தீர்ப்பனவுத் திகதியில் அடையாளங் காணப்படுகின்றன. அதாவது, நிதிச் சொத்தின் விற்பனை/கொள்வனவுக்காக சபையானது பணத்தினைப் பெற்றுக்கொள்ளும்/தீர்ப்பனவு செய்யும் திகதியாகும். எனினும். விலைக்கூறப்பட்ட உரிமைமுதல் மற்றும் கூட்டுரிமைக் கடன் என்பவற்றில் முதலீட்டுக்கு இது வரும் போது சொத்தினை இனங்காண்பதற்கு/இனங்காணலை

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

31 டிசம்பர் 2015 முடிவடைந்த ஆண்டுக்கானது

இரத்துச் செய்வதற்கு கொடுக்கல் வாங்கல் திகதி (அதாவது, வியாபாரத் திகதி) பயன்படுத்தப்படுகின்றது. முதலீடு கிரயத்தில் காட்டப்பட்டுள்ளது.

சபையின் ஏற்கனவேயுள்ள நிதிச் சொத்துக்களின் வகைகள் மற்றும் அவற்றின் வகைப்பாடு என்பன கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன

| வகுதி | நிதிச் சொத்து |
|---|---|
| இலாப அல்லது நட்டத்தின் ஊடான முகப்பெறுமதி) | இல்லை |
| விற்பனைக்காக கிடைக்கக கூடியன (AFS) | திறைசேரி முறிகள் |
| | திறைசேரி உண்டியல்கள் |
| கடன்களும் வருமதிகளும் (L & R) | REPO, |
| | மீள்எழுதப்பட்ட REPO |
| முதிர்ச்சிக்காக நிறுத்திவைக்கப்பட்டது | வெளிநாட்டு நாணயம் அபிவிருத்திப் பிணையங்கள் |
| | திறைசேரிப் பிணைங்கள் |

### (ஆ) அடுத்தபடியான அளவீடு

நிதிச் சொத்துக்களின் அடுத்தபடியான அளவீடானது பின்வருமாறு அவற்றின் வகைப்பாட்டில் தங்கியுள்ளது.

#### இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியில் நிதிச் சொத்துக்கள(FVTPL)

வியாபாரத்திற்காக வைக்கப்பட்ட நிதிச் சொத்துக்களையும் மற்றும் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணலின் பேரில் குறித்தொதுக்கப்பட்டவற்றையும் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள் உள்ளடக்குகின்றன. கிட்டிய எதிர்காலத்தில் விற்பதற்கான உள்நோக்கத்துடன் எடுத்துக்காட்டாக வாங்கப்பட்ட முதலீடுகளானவை வியாபாரத்திற்காக வைக்கப்பட்டவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலுள்ளவாறு குறித்தொதுக்கப்பட்ட முதலீடுகளிற்காக, பின்வரும் தகுதி விதிகள் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.:

- சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களை அளவிடுவதிலிருந்து அல்லது ஒரு வேறுபாடான அடிப்படையில் இலாபம் அல்லது நட்டங்களை இனங்காண்பதிலிருந்து இன்னொரு விதத்தில் எழுதக்கூடிய ஒத்திசையாத் தீர்வின் குறித்தொதுக்கலானது இல்லாமற் செய்கின்றது அல்லது குறிப்பிடத்தக்களவிற்குக் குறைக்கின்றது, அல்லது
- ஒரு சபையினது நிதிச் சொத்துக்கள், நிதிப் பொறுப்புக்கள் அல்து இரண்டினதும் பகுதியாக, சபையினது முதலீட்டும் தந்திரோபாயத்துக்கிணங்க முகாமை செய்யப்பட்டு அவற்றின் செயற்றிறனானது உண்மைப் பெறுமதி அடிப்படை ஒன்றில் மதிப்பிடப்படும் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களாக உள்ளன.

இம் முதலீடுகள் ஆரம்பத்தில் உண்மைப் பெறுமதியில் பதியப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலுக்கு அடுத்ததாக, அவை உண்மைப் பெறுமதியில் மீள அளவிடப்படுகின்றன. உண்மைப் பெறுமதியிலான மாற்றங்களானவை முழுமொத்த வருமானக் கூற்றில் 'உண்மைப் பெறுமதி இலாபங்கள் மற்றும் நட்டங்களில் பதிவு செய்யப்படுகின்றன.

பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி 'முதலீட்டு வருமானம்' அல்லது நிதிக் கிரயம் என்பதில் வட்டியானது உரியவாறு அட்டுறுத்தப்பட்டு முன்னளிக்கப்படுகின்றது. கொடுப்பனவிற்கான உரிமை உள்வாக்கப்பட்டுள்ள போது பங்கிலாப வருமானமானது 'முதலீட்டு வருமானத்தில்' பதிவு செய்யப்பட்டள்ளது.

சபையானது அதன் நிதிச் சொத்துக்களை, கிட்டிய காலப்பகுதியில் அவற்றை விற்பதற்கான உள்நோக்கம் இன்னமும் பொருத்தமானதாகவிருப்பின் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியில் (வியாபாரத்திற்காக வைக்கப்பட்ட) மதிப்பிடுகின்றது. செயலூக்கமற்ற சந்தைகள் மற்றும் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் இந் நிதிச் சொத்துக்களை விற்பதற்கான முகாமையினது உள்நோக்கம் குறிப்பிடத்தக்களவு மாற்றமுறல் போன்ற காரணங்களினால் அவற்றை வர்த்தகம் செய்வதற்கு சபையினால் இயலாத போது அரிதான சந்தர்ப்பங்களில் இந் நிதியச் சொத்துக்களை மீள வைக்கப்படுவதை சபை தேர்வு செய்யும். கடன்கள் மற்றும் வருமதிகள், விற்பனைக்குக் கிடைக்கக்கூடியவை அல்லது முதிர்வுக்காக வைத்திருக்கப்படுபவை என்பனவற்றுக்கான மீள வகைப்படுத்தலானது சொத்தின் தன்மை அடிப்படையில் தங்கியிருக்கும்.

#### விற்பனைக்குக் கிடைமக்கக்கூடியதான நிதி முதலீடுகள்

விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதி முதலீடுகளானவை திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறி (அரசாங்க ஆவணங்கள்) என்பனவற்றை உள்ளடக்குகின்றன. இவ் வகுதியிலுள்ள அரசாங்க ஆவணங்களானவை முடிவில்லாக் காலப்பகுதிக்கு வைத்திருக்க உத்தேசிக்கப்பட்டுள்ளவையும் அத்துடன் திரவத்தன்மைத் தேவைக்கு முகங்கொடுப்பதற்கு அல்லது சந்தை நிலமையிலுள்ள மாற்றங்களுக்கு முகங்கொடுப்பதற்கு விற்கப்படக்கூடியவையாகும். ஆரம்ப அளவீட்டின் பின்னர், விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய ஒதுக்கில் ஏனைய முழுமொத்த வருமானத்தில் (OIC) இனங்காணப்பட்டுள்ள பணமாக்கப்படாத இலாபங்கள் அல்லது நட்டங்களுடன் உண்மைப் பெறுமதியில் விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய நிதிச் சொத்துக்களானவை பின்னர் அளவிடப்படும்.

விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய முதலீடுகளை வைத்திருக்கும் வேளை ஈட்டிய வட்டியானது பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி வட்டி வருமானமாக அறிக்கையிடப்படும். கொடுப்பனவு உரிமை உருவாக்கப்பட்டுள்ள போது, விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய முதலீடுகளை வைத்திருக்கும் போதான கடனழிவு செய்யப்பட்ட தவணைக் கட்டணங்கள் அத்துடன்/ அல்லது கழிவுகள் 'முதலீட்டு வருமானக் கூற்றில் இணங்காணப்படும். சொத்தானது இனங்காணலில் இரததுச் செய்யப்படும் போது முதலீட்டு வருமானத்தில் திரண்ட இலாபம் அல்லது நட்டம் இனங்காணப்படும். சொத்தினைக் குறைப்பதற்கு வரையறுக்கப்பட்டதால் 'முதலீட்டு வருமானத்தில்' வருமானக் கூற்றில் திரண்ட நட்டமானது இனங்காணப்பட்டு விற்பனைக்காக கிடைக்கக்கூடிய ஒதுக்கிலிருந்து நீக்கப்படும்.

சபையானது அதன் விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய நிதிச் சொத்துக்களை, கிட்டிய காலப்பகுதியில் அவற்றை விற்பதற்கான ஆற்றல் மற்றும் உத்தேசம் என்பன இன்னமும் பொருத்தமானதாக இருக்கின்றதா என்பதை வரையறுப்பதற்காக மதிப்பீடு செய்யும். செயலூக்கமற்ற சந்தைகள் மற்றும் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் இந் நிதிச் சொத்துக்களை விற்பதற்கான முகாமையினது உத்தேசம் குறிப்பிடத்தக்களவு மாறுதல் போன்ற காரணங்களினால் இந் நிதிச் சொத்துக்களை

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

31 டிசம்பர் 2015 முடிவடைந்த ஆண்டுக்கானது

விற்பதற்கு சபையினால் இயலாது போகும் பட்டசத்தில் அரிதான சந்தர்ப்பங்களில் இந் நிதிச் சொத்துகளை மீள வழங்கப்படுத்தலை சபையானது தேர்வு செய்யலாம்.

நிதிச் சொத்தானது கடன்களினதும் வருமதிகளினதும் வரைவிலக்கணத்தைப் பூர்த்தி செய்யும் போதும் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்திற்கு அல்லது முதிர்வு வரை இந் நிதிச் சொத்துக்களை வைத்திருப்பதற்கான உத்தேசம் மற்றும் ஆற்றலினை முகாமையானது கொண்டுள்ள போதும் கடன்கள் மற்றும் வருமதிகளது மீளவகைப்படுத்தல் அனுமதிக்கப்படுகின்றது. முதிர்வு வரை நிதிச் சொத்தினை வைத்திருப்பதற்கான ஆற்றல் மற்றும் உத்தேசத்தினை நிறுவனமானது கொண்டுள்ள போது மட்டுமே முதிர்வுக்காக வைத்திருக்கப்படுவதற்கான மீள் வகைப்படுத்தல் அனுமதியளிக்கப்படுகின்றது.

விற்பனைக்காக கிடைக்கக்கூடிய வகுதியில் மீள் வகைப்படுத்தப்படும் நிதிச் சொத்தொன்றாக, உரிமை முதலில் இனங்காணப்பட்டுள்ள இச் சொத்தின் மீதான ஏதேனும் முன்னைய இலாபம் அல்லது நட்டமானது பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி சொத்தின் எஞ்சிய ஆயுட் காலத்திற்கு கடனழிவு செய்யப்படுகின்றது. அச் சொத்தானது பின்னர் குறைவாக இருக்குமென வரையறுக்கப்படின் அதன் பின்னர் உரிமை முதலில் பதிவு செய்யப்பட்ட தொகையானது வருமானக் கூற்றில் மீள வகைப்படுத்தப்படும்.

### கடன்களும் வருமதிகளும்

செயலூக்கமிக்க சந்தையில் விலைகூறப்படாத நிலையான அல்லது வரையறுக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான பெற்றுக்கொள்ள முடியாத நிதிச் சொத்துக்களாக கடன்களும் வருமதிகளும் காணப்படும். தொகுதிக் கடன் ஆவணங்களுக்கு, அத்தகைய ஆவணங்கள் பட்டியற்படுத்தப்பட்டிருந்த போதிலும் செயலூக்கமிக்க சந்தையொன்று காணப்படாத காரணத்தினால் இவ் வகுதியின் கீழ் இவ் ஆவணங்களை வகைப்படுத்தவதற்கும் சபையானது தீர்மானித்தது.

இம் முதலீடுகளானவை முதலீட்டுக் கொள்ளலுக்காக செலுத்தப்பட்ட கருத்திற்கொண்ட உண்மைப் பெறுமதியாக இருக்கும் கிரயத்தில் ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றன. இக் கொள்ளலுக்கு நேரடிக் காரணமாயிருந்த சகல கொடுக்கல் வாங்கல் கிரயங்களும் முதலீட்டுக் கிரயத்தில் உள்ளடக்கப்படுகின்றன. ஆரம்ப அளவீட்டின் பின்னர், குறைதலுக்கான படியினைக் கழித்து பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் கடன்களும் வருமதிகளும் அளவிடப்படுகின்றன.

பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தின் (EIR) இணைந்த பகுதியாக இருக்கும் கொள்ளல் மற்றும் கட்டணம் அல்லது கிரயங்கள் தொடர்பில் ஏதேனும் கழிவு அல்லது உபகார வழங்கல் ஏதேனும் இருப்பின் அதனைக் கவனத்திற் கொண்டு கடனழிவுக் கிரயம் கணிப்பிடப்படுகின்றது. பயனுறுதி வாய்ந்த வட்டி வீத (EIR) கடனழிவானது வருமானக் கூற்றில் 'முதலீட்டு வருமானத்தில்' உள்ளடக்கப்படுகின்றது. முதலீடுகளானவை இனங்காணலில் இரத்துச் செய்யப்படும் போது அல்லது குறைக்கப்படும் போது அதேபோல கடனழிவுச் செய்முறைக்கூடாக வருமானக் கூற்றில் இலாபங்களும் நட்டங்களும் இனங்காணப்படும்.

நிலுவையிலுள்ள கடன்களின் பெறுமதியானது அடிப்படையானதாக கருதப்படாததனால் ஒத்த கடன்கள் தொடர்பில் தற்போது வழங்கப்பட்டு வரும் வட்டி வீதங்களைப் பயன்படுத்தி எதிர்காலக் காசுப் பாய்ச்சலினைக் கழிவிடுவதன் மூலம் இடர் கடன்களின் உண்மைப் பெறுமதியானது மதிப்பிடப்படுவதில்லை.

### முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள் (HTM)

நிலையான அல்லது வரையறுக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான பெற்றுக்கொள்ள முடியாத நிதிச் சொத்துக்கள் மற்றும் நிலையான முதிர்ச்சிக் காலத்துடைய நிதிச் சொத்துக்கள் என்பன சபையானது முதிர்வுக் காலம் வரை வைத்திருப்பதற்கான உத்தேசம் மற்றும் ஆற்றலினைக் கொண்டுள்ள போது முதிர்வுக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப அளவீட்டின் பின்னர், குறைவினைக் கழித்து பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள் அளவிடப்படுகின்றன.

பயனுறுதி வாய்ந்த வட்டி வீத (EIR) கடனழிவானது வருமானக் கூற்றில் 'முதலீட்டு வருமானத்தில்' உள்ளடக்கப்படுகின்றது.

முதலீடுகளானவை இனங்காணலில் இரத்துச் செய்யப்படும் போது அல்லது குறைக்கப்படும் போது அதேபோல கடனழிவுச் செய்முறைக்கூடாக வருமானக் கூற்றில் இலாபங்களும் நட்டங்களும் இனங்காணப்படுகின்றன.

### (இ) நிதிச் சொத்துக்களின் மீள்அடையாளம் காணல்

பின்வரும் சந்தர்ப்பங்களில் நிதிச் சொத்தொன்று (அல்லது ஏற்புடையதாகும் போது, நிதிச் சொத்தொன்றின் ஒரு பகுதி அல்லது ஒத்த நிதிச் சொத்துக்களின் குழு ஒன்றின் பகுதி) இனங்காணலிலிருந்து இரத்துச் செய்யப்படுகின்றது.

- அச் சொத்திலிருந்து காசுப் பாய்ச்சலினைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமைகள் காலாவதியாகியுள்ள போது
- காசுப் பாய்ச்சலினைப் பெற்றக்கொள்வதற்கான ஒப்பந்த உரிமையை மாற்றும் போது

அல்லது

- சபையானது இச் சொத்திலிருந்தான காசுப் பாய்ச்சலினைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையினைத் தக்க வைத்திருக்கும் போது அல்லது 'விலையினை அதிகரிக்கும் ஈடாக்கும் செய்முறை' (pass-through) ஒழுங்கின் கீழ் மூன்றாம் நபர் ஒருவருக்கு அடிப்படையான தாமதமின்றி பெற்றுக்கொண்ட காசுப் பாய்ச்சலினை முழுமையாகச் செலுத்தவதற்கான கடமைப்பாடு ஒன்றினை எடுகோளாகக் கொண்டிருக்கும் போது

அத்துடன் ஒன்றில்

(அ) சொத்தின் சகல ஆபத்துக்கள் மற்றும் நன்மைகளையும் கணிசமானளவு சபையானது மாற்றியிருக்கும் போது அல்லது

(ஆ) சபையானது சொத்துக்களின் சகல ஆபத்துக்கள் மற்றும் நன்மைகளையும் கணிசமாளவு மாற்றாமலோ அல்லது தக்க வைத்திராமலோவிருந்து ஆனால் சொத்தின் கட்டுப்பாட்டினை மாற்றியிருக்கும் போது

சபையானது சொத்தொன்றிலிருந்தான காசுப் பா்சலினைப் பெற்றுக்கொள்வதற்கான அதன் உரிமையினை மாற்றியுள்ள போது அல்லது 'விலையினை அதிகரிக்கும் ஈடாக்கும் செய்முறை' (pass-through) ஒழுங்கு ஒன்றில் பங்குபற்றியுள்ள போது அத்தடன் சொத்தின் சகல ஆபத்துக்கள் மற்றும் நன்மைகளையும் கணிசமானளவு மாற்றாமலோ அல்லது தக்க வைத்திராமலோவிருந்து சொத்தின் கட்டுப்பாட்டினை மாற்றாமலோவிருக்கும் போது சபையின் தொடர்ச்சியான சொத்து உள்வாங்கல் நீட்டிப்புக்கு சொத்தானது இனங்காணப்படுகின்றது.

மாற்றப்பட்ட சொத்தின் மீதான உத்தரவாதம் ஒன்றின் வடிவத்தினை எடுக்கின்ற தொடர்ச்சியான உள்வாங்கலானது

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

31 டிசம்பர் 2015 முடிவடைந்த ஆண்டுக்கானது

சொத்தின் குறைந்த ஆரம்ப கொண்டு செல்லல் தொகையிலும் மீளச் செலுத்துமாறு சபையினைக் கோரக் கூடிய கருத்திற்கொள்ளப்படும் ஆகக்கூடிய தொகையிலும் அளவிடப்படுகின்றது. அச் சந்தர்ப்பத்தில் சபையும் ஒன்றிணைந்த பொறுப்பொன்றினை இனங்காண்கின்றது. சபை தக்கவைத்துள்ள உரிமைகளையும் கடப்பாடுகளையும் பிரதிபலிக்கும் அடிப்படை ஒன்றில், மாற்றப்பட்ட சொத்து மற்றும் ஒன்றிணைந்த பொறுப்பு என்பன அளவிடப்படுகின்றன.

**(ஈ) நிதிச் சொத்துக்கள் குறைவடைதல்**

ஒரு நிதிச் சொத்தானது அல்லது நிதிச் சொத்துக்கூட்டம் ஒன்றானது குறைவடைகின்றது. என்பதான ஏதேனும் யதார்த்தமான சான்று உள்ளதாவென ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் இச் சபையானது மதிப்பிடுகின்றது. சொத்தின் ஆரம்ப இனங்காணலின் பின்னர் ஏற்பட்டுள்ள ஒன்று அல்லது கூடுதலான நிகழ்வுகளின் (நேரிட்ட "இழப்பு நிகழ்வு" ஒன்று) விளைவாக குறைவின் யதார்த்தமான சான்று இருப்பின் அத்துடன் நம்பகரமான மதிப்பிடக்கூடிய நிதிச் சொத்தின் அல்லது நிதிச் சொத்துக் கூட்டத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சல்களின் மீது ஒரு தாக்கத்தினை அந்த இழப்பு நிகழ்வு கொண்டிருந்தால் மாத்திரமே ஒரு நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துக் கூட்டம் ஒன்று குறைவடைந்திருப்பதாகக் கருதப்படும். குறிப்பிடத்தக்க நிதிப் பிரச்சினை, வட்டி அல்லது முக்கியமான கொடுப்பனவுகளைச் செய்யாதுவிடல் அல்லது செய்யத் தவறுதல் என்பனவற்றைக் கடன்படுநர் அல்லது கடன்படுநர் குழுவொன்று அனுபவித்துவரும் குறிகாட்டிகள், அவர்கள் வகையற்றவர்களாக மாறும் சாத்தியப்பாடு அல்லது கொடுப்பனவுகளைச் செய்யாதிருப்பதுடன் தொடர்புறும் நிலுவை மாற்றங்கள் அல்லது பொருளாதார நிலைமைகள் போன்ற மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சலில் ஓர் அளவிடக்கூடிய குறைவொன்று உள்ளது என்பதை அவதானிக்கக்கூடிய தரவு சுட்டிக்காட்டும் ஏனைய நிதி மீள்ஒழுங்கமைப்பு ஆகியவற்றை குறைவுச் சான்று உள்ளடக்கலாம்.

**(ஈ) நியாயப் பெறுமதி அளவீடு**

ஒவ்வொரு அறிக்கையிடும் நாளிலும் நியாயமான மதிப்பில் விற்பனை மற்றும் நியாயமான மதிப்பு இலாபம் மற்றும் நட்டம் ஆகியவற்றின் மூலம் கிடைக்கக்கூடிய நிதிக் கருவிகளை சபை ஏற்றுக்கொள்கின்றது.

நியாயமான மதிப்பு அளவிடக்கூடியமாக அல்லது அறிக்கைகளில் வெளிப்படுத்தப்படும் அனைத்து சொத்துக்களும் பொறுப்புகளும் நியாயமான மதிப்பு அளவீட்டுக்குள்ளாக குறைந்தபட்ட அளவிளான உள்ளீட்டை அடிப்படையாகக் கொண்டிருக்கும் நியாயமான மதிப்பு வரிசை முறைக்குள் வகைப்படுத்தப்படுகின்றன

- நிலை 1 - ஒத்த சொத்துக்கள் அல்லது பொறுப்புகள் செயற்பாட்டு சந்தைகளில் உள்ள (சீராக்கம் செய்யாத) சந்தை விலை.
- நிலை 2 - நேரடியாக அல்லது மறைமுகமாக கண்காணிக்கக்கூடிய நியாய பெறுமதி அளவீட்டுக்கான குறைந்த மட்ட உள்ளீடு மதிப்பீட்டு தொழில்நுட்பம்.
- நிலை 3 - கண்காணிக்க முடியாத அளவீட்டு நியாய பெறுமதி அளவீட்டுக்கான குறைந்த மட்ட உள்ளீடு மதிப்பீட்டு தொழில்நுட்பம்.

**நிதிப் பொறுப்புகள்**

**(அ) ஆரம்ப இனங்காணலும் அளவீடும்**

சகல நிதிப் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் உண்மைப் பெறுமதியில் இனங்காணப்படுகின்றன, அத்துடன் கடன்கள் மற்றும் கடன்படுகைகள் என்னும் பட்சத்தில் நேரடிக் காரணமான கொடுக்கல் வாங்கல் செலவுகள் கழிக்கப்படுகின்றன

சபையினது நிதிப் பொறுப்புகளானவை வியாபாரம் மற்றும் ஏனைய சென்மதிகள், காப்புறுதி சென்மதிகள் மற்றும் வங்கி மேலதிகப் பற்றுக்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன

**(ஆ) அடுத்தபடியான அளவீடு**

நிதிப் பொறுப்புகளின் அடுத்தபடியான அளவீடானது பின்வருமாறு அவற்றின் வகைப்படுத்தலில் தங்கியுள்ளது.

**கடன்களும் கடன்படுகைகளும்**

ஆரம்ப இனங்காணலின் பின்னர், வட்டியினைத் தாங்கும் கடன்கள் மற்றும் கடன்படுகைகள் என்பன பயனுறுதிவாய்ந்த வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி கடனழிவுக் கிரயத்தில் அடுத்தபடியாக அளவிடப்படுகின்றன. பொறுப்புகள் இனங்கானலில் இரத்து செய்யப்படும் போதும், அதேபோல பயனுறுதிவாய்ந்த வட்டி வீத முறை கடனழிவுச் செயன்முறைக்கு ஊடாகவும் வருமானக் கூற்றில் இலாபங்களும் நட்டங்களும் இனங்காணப்படுகின்றன.

பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தின் இணைந்த பகுதியாகவும் இருக்கும் கொள்ளல் மற்றும் கட்டணம் அல்லது கிரயங்கள் தொடர்பிலான ஏதேனும் கழிவு அல்லது உபகரண வழங்கல் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு கடனழிவுக் கிரயம் கணிப்பிடப்படுகின்றது. பயனுறுதி வாய்ந்த வட்டி வீத கடனழிவானது வருமானச் சுற்றில் நிதிக் கிரயத்தில் உள்ளடக்கப்படுகின்றது.

**(இ) இனங்காணலில் இரத்துச்செய்தல்**

பொறுப்பின் கீழான கடப்பாடானது விடுவிக்கப்படும் போது, இரத்துச்செய்யப்படும் போது அல்லது கலாவதியாகும் போது நிதிப் பொறுப்பொன்று இனங்காணலிலிருந்து இரத்துச்செய்யப்படுகின்றது.

**(ஈ) காப்புறுதிச் சென்மதிகள்**

காப்புறுதிச் சென்மதிகளானவை, நிலுவைகளாகவிருக்கும் போதும் அத்துடன் நேரடிக்காலாண்டான கொடுக்கல் வாங்கல் செலவுகள் கழித்துப் பெற்றுக்கொள்ளப்பட்ட கருத்திற்கொள்ளப்படும் உண்மைப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணல் தொடர்பில் அளவிடப்படும் போதும் இனங்காணப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலின் பின்னர், அவை பயனுறுதிவாய்ந்த வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி கடனழிவுக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

பொறுப்பின் கீழான கடப்படானது நீக்கப்படும் போது, இரத்துச் செய்யப்படும் போது அல்லது காலாவதியாகும் போது காப்புறுதி சென்மதிகள் இனங்கானலிலிருந்து இரத்துச் செய்யப்படுகின்றன.

### 2.6.4 நிதி ஆவணங்களை ஈடாக்குதல்

நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புகளும் ஈடாக்கப்பட்டு அத்துடன் இனங்காணப்பட்ட தொகையினை ஈடாக்குவதற்கு தற்போது வலுவிலுள்ள சட்ட உரிமை உள்ளதாயின் அத்துடன் தேறிய அடிப்படை ஒன்றில் தீர்ப்பதற்கான

| கருவி வகை | நியாயப் பெறுமதி அடிப்படை | நியாயப் பெறுமதி வரிசை மட்டம் |
|---|---|---|
| அபிவிருத்திப் பிணையங்கள் | பயனுறுதி வீதத்தைப் பயன்படுத்தும் பெறுமதி | மட்டம் 2 |
| திறைசேரி பிணையங்கள் | சந்தை வருவாயை பயன்படுத்தும் பெறுமதி | மட்டம் 1 |
| திறைசேரி உண்டியல்கள் | சந்தை வருவாயை பயன்படுத்தும் பெறுமதி | மட்டம் 1 |

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

31 டிசம்பர் 2015 முடிவடைந்த ஆண்டுக்கானது

அல்லது சொத்துக்களை பணமாக்கி ஒரே நேரத்தில் பொறுப்புக்களைத் தீர்பதற்கான உள்நோக்கம் ஒன்றும் காணப்பட்டால் மாத்திரமே நிதி நிலமைக் கூற்றில் தேறிய தொகை அறிக்கையிடப்படும். சபையின் கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பிடக்கூடியதாக இனங்காணப்பட்டவாறு ஏதேனும் கணக்கீட்டு நியமத்தினால் அல்லது பொருள்கோடல் மூலம் தேவைப்படுத்தப்பட்டாலொழிய அல்லது அனுமதிக்கப்பட்டாலொழிய வருமானமும் செலவினமும் வருமானக் கூற்றில் ஈடாக்கப்படமாட்டா.

## 2.6.5 நிதிசாரா்ச் சொத்துக்கள் குறைவடைதல்

சொத்தொன்று குறைவடையலாம் என்னும் குறிகாட்டியொன்று உள்ளதா என்பதை ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சபையானது மதிப்பீடுகின்றது. அத்தகைய ஏதேனும் குறிகாட்டி காணப்படின் அல்லது சொத்தொன்றுக்கான வருடாந்த குறைவடைதல் பரிசோதிப்பு தேவைப்படுத்தப்படும் போது சபையானது சொத்தின் மீளப்பெறக்கூடிய தொகையினை மதிப்பிடுகின்றது. சொத்தொன்றின் மீளப்பெறக்கூடிய தொகையானது விற்பதற்கான கிரயங்கள் மற்றும் அதன் பாவனைப் பெறுமதி என்பவற்றைக் கழித்து சொத்தொன்றின் அல்லது காசுப் பிறப்பாக்கல் அலகுகளின் உண்மைப் பெறுமதியிலும் அதிகமாகும் தனிப்பட்ட சொத்தொன்றுக்கான மீளப்பெறக்கூடிய தொகையானது, ஏனைய சொத்துக்கள் அல்லது சொத்துக் கூட்டங்களிலிருந்தானவற்றிலிருந்து பெருமளவு சுயாதீனமான காசு உட்பாச்சல்களை அச் சொத்து பிறப்பிக்காதிருந்தாலொழிய வரையறுக்கப்படும். சொத்தொன்றின் கொண்டு செல்லல் பெறுமதியானது அல்லது காசுப் பிறப்பாக்கல் அலகுகள் அதன் மீளப்பெறக்கூடிய தொகையிலும் அதிகமாவிருக்குமிடத்து அச் சொத்தானது குறைவடைகின்றது எனக் கருதப்பட்டு அதன் மீளப் பெறக்கூடிய தொகைக்கு குறைத்து விடப்படும், பாவனைப் பெறுமதி மதிப்பீட்டில், மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாச்சல்களானவை குறித்தான ஆபத்துகளையும் பிரதிபலிக்கும் முன்-வரி கழிவு வீதம் ஒன்றினைப் பயன்படுத்தி அவற்றின் நிகழ்காலப் பெறுமதிக்கு கழிவிடப்படுகின்றன. விற்பதற்கான கிரயங்களைக் கழித்த உண்மைப் பெறுமதியினை வரையறுப்பதில் அண்மைய சந்தை கொடுக்கல் வாங்கல்கள் கிடைக்கக்கூடியதாகவிருப்பின் அவை கவனத்திற் கொள்ளப்படும். அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் எவையும் இனங்காணப்பட்ட முடியாதிருப்பின் பொருத்தமான விலைமதிப்பு முறை ஒன்று பயன்படுத்தப்படும்.

குறைவடைந்த சொத்தின் தொழிற்பாட்டுடன் ஒத்திசையும் அச்செலவின் வகுதிகளில் வருமானக்கூற்றில் தொடர்ச்சியான நடவடிக்கைகளின் குறைவடைதல் நட்டங்கள் இனங்காணப்படும்.

## 2.6.6 பொதுக் காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புகள்

பொதுக் காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புகளானவை செலுத்த வேண்டிய உரிமைக் கோரிக்கை ஏற்பாட்டையும், ஈட்டப்படாத தவணைக் கட்டத்திற்கான ஏற்பாட்டையும் அத்துடன் தவணைக் கட்டண பற்றாக்குறைக்கான ஏற்பாட்டையும் உள்ளடக்குகின்றன. உள்ளாகிய ஆனால் தொடர்புபட்ட உரிமைக் கோரிக்கை கையாளல் கிரயங்கள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட எஞ்சிய பெறுமதி மற்றும் ஏனைய அளவீடுகளுக்கான குறைவு ஆகியவற்றுடன் ஒன்று சேர்ந்து அறிக்கையிடல் திகதியில் செலுத்தப்படாத சகல உரிமைக் கோரிக்கைகளினதும் மதிப்பிடப்பட்ட இறுதிக் கிரயத்தினை செலுத்த வேண்டிய உரிமைக் கோரிக்கை ஏற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டது.

சில உரிமைக்கோரிமை வகைகளின் அறிவித்தலும் தீர்ப்பனவிலும் தாமதங்கள் ஏற்பட முடியும் ஆதலால் இவற்றின் இறுதிக் கிரயத்தினை, அறிக்கையிடும் திகதியில் உறுதியாக அறிய முடியாது. பணத்தின் நேரப் பெறுமதிக்காக பொறுப்பானது கழிவிடப்படுவதில்லை. சமம்பாட்டுக்காக அல்லது பேரழிவு ஒதுக்கங்களுக்காக எவ்வித ஏற்பாடும் இனங்காணப்படுவதில்லை. உரிமைக் கோரிக்கை ஒன்றைச் செலுத்துவதற்கான கடப்படானது காலாவதியாகும் போது அல்லது விடுவிக்கப்படும் போது அல்லது இரத்துச் செய்யப்படும் போது பொறுப்புகளானவை இனங்காணலிலிருந்து இரத்துச் செய்யப்படுகின்றன.

தேறிய ஈட்டப்படாத தவணைக் கட்டணத்திற்கான ஒதுக்கு, பிற்போடப்பட்ட கொள்ளல் கிரயத்துக்கான (தேறிய) ஒதுக்கு, மொத்த செலுத்த வேண்டிய உரிமைக் கோரிக்கைக்கான ஒதுக்கு என்பவற்றை இவ் ஏற்பாடு உள்ளடக்குகின்றது. தொழில் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கிணங்க ஈட்டப்படாத தவணைக் கட்டணம், பிற்போடப்பட்ட கொள்ளல் கிரயம் மற்றும் மொத்த செலுத்த வேண்டிய உரிமைக் கோரிக்கைக்கான ஒதுக்கு என்பன எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சபையானது அதன் காலங்கடக்காத ஆபத்தினை மீளாய்வு செய்கின்றது அத்துடன் ஈட்டப்படாத தவணைக் கட்டங்களின் மீது எதிர்பார்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் மற்றும் பிற்போடப்பட்ட கொள்ளல் கிரயங்களின் ஏதேனும் ஒட்டுமொத்த மிகையானது உள்ளதா என்பதை வரையறுக்கும் பொருட்டு SLFRS 4 இன் கீழ் எடுத்துக்காட்டப்பட்டுள்ளவாறு பொறுப்புப் போதுமானதன்மைச் சோதனை ஒன்று ஆற்றப்படுகின்றது. உரிய பொதுக் காப்புறுதி தொழில்நுட்ப ஏற்பாடுகளுடன் தொடர்புற்ற சொத்துக்களின் மீது எழுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட முதலீட்டு வருவாயை கணக்கில் எடுத்துக் கொண்ட பின்னர் எதிர்கால ஒப்பந்தக் காசுப் பாச்சல்களின் தற்போதைய மதிப்பீடுகளை இக் கணிப்பீடு பயன்படுத்தப்படுகின்றது. ஈட்டப்படாத தவணைக் கட்டங்களின் கொண்டு செல்லல் தொகையானது (தொடர்புபட்ட பிற்போடப்பட்ட கொள்ளல் கிரயங்களைக் கழித்து) பற்றாக்குறையாக உள்ளது என்பதை இம் மதிப்பீடுகள் கட்டினால் தவணைக் கட்டணப் பற்றாக்குறைக்கான ஏற்பாடு ஒன்றினை உருவாக்குவதன் மூலம் வருமானக் கூற்றில் பற்றாக்குறையானது இனங்காணப்படும்.

## 2.6.7 மீள்காப்புறுதி

சபையானது அதன் சகல வியாபாரத்திற்குமான சாதாரண வியாபார நடவடிக்கையில் காப்புறுதி ஆபத்தினை ஒப்பளிப்புச் செய்கின்றது. மீள்காப்புறுதி சொத்தக்களானவை மீள்காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து வர வேண்டிய மீதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மீள்காப்புறுதி செய்பவர்களிடமிருந்து மீளப்பெறக்கூடிய தொகைகளானவை மீள்காப்புறுதி செய்பவரின் கொள்கைகளுடன் இணைந்த நிலுவையிலுள்ள உரிமைக்கோரிக்கை ஏற்பாட்டுக்கு அல்லது தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளுக்கு ஒத்திசைவான விதத்தில் மதிப்பிடப்படுவதுடன் தொடர்புபட்ட மீள்காப்புறுதி ஒப்பந்தத்துக்கு இணக்கமாகவும் உள்ளன.

அறிக்கையிடும் வருடத்தின் போது குறைவுக் குறிகாட்டி ஒன்று எழும் போது ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் அல்லது கூடுதலாக அநேக தடவைகளில் மீள்காப்புறுதிச் சொத்துக்களானவை குறைவுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றன. சபையானது ஒப்பந்த நியதிகளின் கீழ் வரவேண்டிய சகல நிலுவையிலுள்ள தொகைகளையும் பெற்றுக்கொள்ளாது என்னும் மீள்காப்புறுதிச் சொத்தின் ஆரம்ப இனங்காணலின் பின் நிகழ்ந்த நிகழ்வு ஒன்றினதும், சபையானது மீள்காப்புறுதி செய்பவரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் தொகைகள் மீது நம்பகரமாக அளவிடக்கூடிய தாக்கம் ஒன்றினைக் கொண்டுள்ள நிகழ்வினதும் விளைவாக அடிப்படையான சான்று இருக்கும் போது குறைவு நிகழ்கின்றது.

ஒப்பளிப்புச் செய்யப்பட்ட மீள்காப்புறுதி ஒழுங்குகளானவை சபையினை ஆவணதாரிகளுக்கான அதன் கடப்பாட்டிலிருந்து விடுவிப்பதில்லை.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

31 டிசம்பர் 2015 முடிவடைந்த ஆண்டுக்கானது

மீள்காப்புறுதிப் பொறுப்புகளானவை மீள்காப்புறுதிக் கம்பனிகளுக்கு செலுத்த வேண்டிய மீதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. தொடர்புபட்ட மீள்காப்புறுதி ஒப்பந்தத்துக்கு ஒத்திசைவான விதத்தில் செலுத்த வேண்டிய தொகைகள் மதிப்பிடப்படுகின்றன.

தவணைக் கட்டணங்களும் உரிமைக் கோரிக்கைகளும் ஒப்பளிப்பு செய்யப்பட்ட மற்றும் பொறுப்பேற்கப்பட்ட மீள்காப்புறுதி இரண்டிற்காகவும் மொத்த அடிப்படை ஒன்றில் முன்னளிக்கப்படுகின்றன.

ஒப்பந்த உரிமைகளானவை காலாவதியாகி செல்லுபடியற்றதாக்கப்படும் போது அல்லது ஒப்பந்தமானது இன்னொரு தரப்புக்கு மாற்றப்படும் போது மீள்காப்புறுதி சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் இனங்காணலிலிருந்து இரத்துச் செய்யப்படுகின்றன.

சபையானது மீளாய்வின் கீழான ஆண்டின் போதும் 2012ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கும் முன்னைய ஆண்டின் போதும் அதன் சகல வியாபாரத்திற்குமான காப்புறுதி உள்முக காப்புறுதி ஆபத்துக்களை ஒப்பளிக்கவில்லை.

### 2.6.8 காப்புறுதி வருமதிகள்

காப்புறுதி வருமதிகளானவை நிலுவையாகவிருந்து அத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்படக்கூடிய கருத்திற்கொள்ளப்படும் உண்மைப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணல் தொடர்பில் அளவிடப்படும் போது இனங்காணப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலின் பின்னர், காப்புறுதி வருமதிகளானவை பயனுறுதி வாய்ந்த வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி கடனழிவுக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. வருமானக் கூற்றில் பதிவுசெய்யப்பட்ட குறைவு நட்டத்துடன் கொண்டுசெல்லல் தொகையானது மீளப்பெறமுடியாது போகலாம் என்று நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளை சுட்டிக்காட்டும் போதெல்லாம் காப்புறுதி வருமதிகளின் கொண்டு செல்லல் பெறுமதியானது குறைவுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றது.

இலங்கை காப்புறுதிச் சபை வெளியிட்டுள்ள தவணைக் கட்டணக் கொடுப்பனுவு உத்தரவாத பணிப்புரையின் படி, அனைத்துப் பொதுக் காப்புறுதிக் கொள்கைகளும் தவணைக் கட்டணக் கொடுப்பனவு உத்தரவாதத்திற்கு உட்பட்டவை மற்றும் 60 நாட்களில் காலாவதி முடிந்தால் முடிக்கப்படாவிட்டலோ இரத்து செய்யப்படும்.

### 2.6.9 காசும் காசுக்குச் சமமான விடயங்களும்

காசுப் பாச்சல் நோக்கத்திற்காக, வங்கியிலுள்ள காசும் கையிலுள்ள காசும், தேறிய செலுத்த வேண்டிய வங்கி மேலதிகப் பற்றுக்கள் என்பவற்றை காசும் காசுக்குச் சமமான விடயங்களும் உள்ளடக்குகின்றது.

### 2.6.10 விற்பனை வரிகள் மற்றும் தவணைக் கட்டண வரிகள்

பின்வருவன நீங்களாக விற்பனை வரிகள் மற்றும் தவணைக் கட்டண வரிகளின் தேறிய தொகையாக வருமானங்கள், செலவினங்கள் மற்றும் சொத்துக்கள் இனங்காணப்படுகின்றன.

சொத்துக்கள் அல்லது சேவைகளின் கொள்வனவின் பேரில் ஏற்படும் விற்பனை அல்லது தவணைக் கட்டண வரியானது வரிவிதிப்பு அதிகார பீடத்திடமிருந்து மீளப்பெறக்கூடியமாக இல்லாதிருக்குமிடத்து அச் சந்தர்ப்பத்தில் விற்பனை

- வரியானது ஏற்புடையதாக சொத்துக்கொள்ளல் கிரயத்தின் பகுதியாக அல்லது செலவு விடயப் பகுதியாக இனங்காணப்படும்.
- உரிய கொடுக்கல் வாங்கலில் உள்ளக்கப்பட்ட விற்பனை அல்லது தவணைக் கட்டண வரித் தொகையுடன் வருமதிகளும் சென்மதிகளும் குறிப்பிடப்படுகின்றன.

வரி விதிப்பு அதிகாரபீடத்திடமிருந்து மீளப் பெற்றுக் கொள்ளக்கூடிய அல்லது அதற்கு செலுத்த வேண்டிய விற்பனை அல்லது தவணைக் கட்டண வரியின் நிலுவையாகவுள்ள தேறிய தொகைகளானவை நிதி நிலமைக் கூற்றில் வருமதிகள் அல்லது சென்மதிகளின் பகுதியாக உள்ளடக்கப்படும்.

### 2.6.11 அந்நியச் செலாவணி மாற்றம் - கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிலுவைகள்

அந்நியச் செலாவாணிகளிலான மாற்றங்களானவை கொடுக்கல் வாங்கல் திகதியில் நிலவும் தொழிற்பாட்டுச் செலாவணி வீதத்தில் ஆரம்பத்தில் பதிவு செய்யப்படுகின்றன.

அந்நியச் செலாவணிகளில் வெளிப்படுத்தப்படும் நாணயச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன அறிக்கையிடல் திகதியில் நிலவும் தொழிற்பாட்டுச் செலாவணிப் பரிமாற்ற வீதத்தில் மீள்மாற்றப்படுகின்றன.

### 2.6.12 ஒய்வூதிய நன்மைக் கடப்பாடுகள

#### (அ) வரையறுத்த நன்மைத் திட்டம் - பணிக்கொடை

பணிக்கொடை என்பது ஒரு வரையறுத்த நன்மைத் திட்டமாகும். 1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்திற்கேற்ப சபையானது பணிக்கொடையினைச் செலுத்தும் பொறுப்பிற்கு ஆளாகின்றது. அதற்கிணங்க பணிக்கொடையினைச் செலுத்துவதற்கான பொறுப்பானது தொடர்ச்சியான 5 வருட சேவைப் பூர்த்தியின் பேரில் மாத்திரமே எழுகின்றது. இப்பொறுப்பினைப் பூர்த்திசெய்யும் பொருட்டு ஏற்பாடு ஒன்று நிதிக் கூற்றுகளில் முன்கொண்டு செல்லப்படுகின்றது. புள்ளிவிபர காப்புறுதிக் கணிப்பு மதிப்பீட்டு முறையினைப் பயன்படுத்தி இலங்கை கணக்கீட்டு நியமம் 19 ஊழியர் நன்மைகள் என்பதற்கமைய பணிக்கொடைப் பொறுப்பு கணிப்பிடப்படுவதில்லை.

#### (ஆ) வரையறுத்த பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்

உரிய நியதிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு ஒத்திசைவாக ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புக்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பங்களிப்புக்கும் ஊழியர்கள் தகுதியுடையவர்கள். சபையானது ஊழியர்களின் மொத்த ஊதியத்தின் ஒரு வரையறுத்த வீதத்தினை முறையே ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்துக்கும் பங்களிப்பு செய்கின்றது.

### 2.6.13 ஏற்பாடுகள் மற்றும் எதிர்பாரத பொறுப்புக்கள்

கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாக தற்கால கடப்பாடு ஒன்றினை (சட்ட அல்லது உட்கிடையான) சபையானது கொண்டிருக்கும் போது ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன. அத்துடன், பொருளாதார நலன்கள் இணைந்த வளங்களின் வெளிப்பாச்சலானது இக் கடப்பாட்டினைத் தீர்ப்பதற்கு தேவைப்படுத்தப்படும் என்பது சாத்தியப்படக்கூடியதாக இருக்கின்றது. அத்துடன், ஒரு நம்பகரமான மதிப்பீடானது கடப்பாட்டுத் தொகையில் மேற்கொள்ளப்பட முடியும். சபையானது ஏற்பாடொன்றின் சிலவற்றை அல்லது சகலதையும் மீளளிக்கப்பட எதிர்பார்க்குமிடத்து மீளளிப்பானது மெள்றிகராக நிச்சயமாக இருக்கும் போது மட்டுமே தனியான சொத்தொன்றாக மீளளிப்பு இனங்காணப்படும். ஏதேனும் ஏற்பாட்டுடன் தொடர்புபட்ட செலவினமானது ஏதேனும் தேறிய மீளளிப்பு வருமானக் கூற்றில் முன்னளிக்கப்படும். பணத்தின் நேரப் பெறுமதியின் விளைவானது அடிப்படையானதாகவிருப்பின் பொருத்தமானவிடத்து, பொறுப்புக் குறித்தான ஆபத்துக்களைப் பிரதிபலிக்கும் நிகழ்கால முன் வரி வீதம் ஒன்றினைப் பயன்படுத்தி ஏற்பாடுகள் கழிவிடப்படுகினறன. கழிவிடல் பயன்படுத்தப்படுமிடத்து காலம் முன்நோக்கிச் செல்வதன் காரணமாக ஏற்பாட்டில் அதிகரிப்பானது நிதிக் கிரயம் ஒன்றாக இனங்காணப்படுகின்றது.

வளங்களின் வெளிப்பாச்சலானது குறைவாகவே நிகழும் சந்தர்ப்பம் இருந்தாலொழிய சகல எதிர்பாராத பொறுப்புக்களும் நிதிக் கூற்றுகளில் ஒரு குறிப்பாக வெளிப்படுத்தப்படும்.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

31 டிசம்பர் 2015 முடிவடைந்த ஆண்டுக்கானது

### 2.7 வருமான இனங்காணல்

#### 2.7.1 மொத்த தவணைக் கட்டணம்

கணக்கீட்டுக் காலப்பகுதியில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் மூலம் ஏற்படுத்தப்பட்ட முழுக் காப்பீட்டுக் காலப்பகுதிக்கும் வருமதியாகவுள்ள மொத்த தவணைக் கட்டணங்களை மொத்த காப்புறுதி உழைப்புத் தவணைக் கட்டணங்கள் உள்ளடக்குகின்றன. அவை ஒப்பந்த ஆவணம் அனுமதிக்கப்பட்ட திகதியில் இணங்காணப்படுகின்றன. முன்னைய கணக்கீட்டுக் காலப்பகுதியில் நடாத்தப்பட்ட வியாபாரம் தொடர்பில் வருமதியாகவுள்ள தவணைக் கட்டணங்களுக்காக இக் கணக்கீட்டுக் காலப்பகுதியில் எழுகின்ற ஏதேனும் சீராக்கங்களை தவணைக் கட்டணங்கள் உள்ளடக்கும்.

அறிக்கையிடல் திகதியின் பின்னரான ஆபத்துக் காலப்பகுதிகளுடன் தொடர்புறும் வருடம் ஒன்றில் உழைக்கப்பட்ட தவணைக் கட்டண விகிதாசாரமாக ஈட்டப்படாத தவணைக் கட்டணங்கள் உள்ளன. பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி நடைமுறைகளுக்கு ஒத்திசைவாக 365 ஆம் அடிப்படை 1/24 ஆம் அடிப்படை அல்லது மொத்த தவணைக் கட்டணங்கள் மீதான 35% அடிப்படை ஆகியவற்றில் ஈட்டப்படாத தவணைக் கட்டணங்கள் கணிப்பீடு செய்யப்படுகின்றன. அடுத்துவரும் காலப்பகுதிகளுக்கு உரித்தான விகிதாசாரமானது ஈட்டப்படாத தவணைக் கட்டணங்களிற்கான ஏற்பாடொன்றாக பிற்போடப்படும்.

#### 2.7.2 கட்டணங்களும் ஏனைய வருமானமும்

ஒப்பந்த ஆவண நிர்வாக சேவைகள், ஒப்பந்த ஆவணக் கட்டணங்கள் மற்றும் ஏனைய ஒப்பந்தக் கட்டணங்கள் ஆகியவற்றுக்காக காப்புறுதி ஒப்பந்த ஆவணதாரிகளிடமிருந்து அறவீடு செய்யப்படுகின்றது. இக்கட்டணங்களானவை உழைக்கப்பட்ட அடிப்படையில் வருமானமாக (ஏனைய வருமானம்) இனங்காணப்படுகின்றன.

#### 2.7.3 வட்டி வருமானம்

வட்டி வருமானமானது அட்டுறுவதால் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டு பயனுறுதி வாய்ந்த வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்படுகின்றது.

### 2.8 நன்மைகள், உரிமைக் கோரிக்கைகள் மற்றும் செலவின இனங்காணல்

#### 2.8.1 மொத்த நன்மைகளும் உரிமைக் கோரிக்கைகளும்

ஆண்டுக் காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட சகல உரிமைக் கோரிக்கைகளையும், உரிமைக் கோரிக்கைகளைச் செய்முறைப்படுத்தி தீர்ப்பதுடன் நேரடியாகத் தொடர்புற்ற தொடர்புபடும் உள்ளக மற்றும் வெளியக உரிமைக் கோரிக்கை கையாளல் செலவுகளையும், எஞ்சிய பெறுமதிக்கான குறைவு ஒன்றையும் மற்றும் ஏனைய அறவீடுகள், மற்றும் முன்னைய வருடங்களிலிருந்து வரவேண்டிய உரிமைக் கோரிக்கைகளுக்கான ஏதேனும் சீராக்கங்களையும் காப்புறுதி உரிமைக் கோரிக்கைகள் உள்ளடக்குகின்றன.

#### 2.8.2 செலவின இனங்காணல்

சபையினை நடாத்துதல் மற்றும் வினைத்திறனான நிலையில் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபரகணங்களை பராமரித்தல் ஆகியவற்றில் உள்ளாகும் சகல செலவினமும் தேறிய மிகையினை அடையும் வருமானத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டள்ளது.

### 2.9 ஒப்பீட்டுத் தரவுகள்

SLFRS / LKAS ஆகியன சென்ற காலத்தையும் உள்ளிட்டவாறு பிரயோகிக்கிகப்பட்டுள்ளன ஆதலால் இந் நிதிக் கூற்றுகளில் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பீட்டு நிதித் தகவல்களானவை நிகழ் வருடக் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் முன்னளிப்புகளுடன் ஒத்திசைவாக இருக்குமாறு மீள எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### 2.10 மூலதன ஈடுபாடு

ஐந்தொகை திகதிலுள்ளவாறு எவ்வித மூலதன ஈடுபாடும் இல்லை.

### 2.11 காசுப் பாச்சல் கூற்று

"மறைமுக முறையினை" பாவித்து காசுப் பாச்சற் கூற்று தயாரிக்கப்படுகின்றது.

### 2.12 தொடர்புபட்ட தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்

